# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION

## TIRUNELVELI

# இலக்கணம் - அகப்பொருள்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012.

# ஐந்தாம் பருவம் - V Semester

# முதன்மைப் பாடம் - Cor IX

# இலக்கணம் - அகப்பொருள்

**அலகு - 1**

அகத்திணையியல் - அகப்பொருள் வகை - அகப்பொருள் கூற்றுமுறை - அகப்பொருள் விளக்கம் - ஐந்திணைப்பெயர் - ஐந்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருட்கள் - களவுப் புணர்ச்சிவ கை - கைக்கிளை வரைவு - அறத்தொடு நிற்றல்

**அலகு - 2**

அகத்திணையியல் - கற்பின் வகை - பிரிவின் பகை - ஊடல் தவிர்க்கும் வாயில்கள் - பிரிவுக் காலங்கள்

**அலகு - 3**

களவியல் - இயற்கைப் புணர்ச்சி - வன்புறை வகை - தெளிவின் வகை - பிரிவுழி மகிழ்ச்சி - பிரிவுழிக் கலங்கல் - இடந்தலைப்பாடு - பாங்கற் கூட்டம் - பாங்கி மதி உடன்பாடு - பாங்கியற் கூட்டம் - பகற்குறி வகை - இரவுக்குறி இடையீடு - வரைதல் வேட்கை - வரைவு கடாவுதல் - ஒரு வழித் தணத்தல் - வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிவு.

**அலகு - 4**

வரைவியல் - வரைவு மறுத்தல் - அறத்தொடு நிற்றல் - உடன்போக்கு - தலைவி பிரிவால் கலங்கல் - மீட்சிவ கை - தன் மனை வரைதல் - உடன்போக்கு இடையீடு

**அலகு - 5**

கற்பியல் முழுவதும்

**பார்வை நூல்கள்**

1. வித்துவான் நம்பியகப்பொருள், எம்.நாராயணவேலுப்பிள்ளை, பாரி புத்தகப் பண்ணை, சென்னை.

2. புலவர் பி.ரா.நடராசன், நற்கவிராசர் நம்பி இயற்றிய ‘அகப்பொருள்’, உமா பதிப்பகம், சென்னை.

# அலகு - 1

## அகத்திணையியல்

அகத்திணையியல் அகவாழ்விற்கான அடிப்படைகளைத் தொகுத்து விளக்கும் இயலாகும். இதனை அடுத்து வரும் 1 களவியல், 2. வரைவியல், 3. கற்பியல், 4. ஒழியியல் போன்ற இயல்களுக்கு மூலக்கூறுகளை அகத்திணையியல் விளக்குகின்றது.

முதற்பொருளாகிய நிலம், பொழுது, கருப்பொருளாகிய மக்கள், மற்ற உயிரினம், பொருள்கள் உரிப்பொருளாகிய ஒழுகலாறு போன்ற அடிப்படைகள் அகத்திணையியலில் விளக்கப்பட்டுள்ளன.

அகவாழ்வில் வரும் தலைவன், தலைவி, உ்ள்ளிட்ட அனைத்து மாந்தர்கள் அவர்களுக்குரிய செயற்பாடுக்ள போன்றவை அகத்திணியியலில் விளக்கப்பட்டுள்ளன.

**அகப்பொருளின் வகை**

**“மலர்தலை உலகத்துப்புலவோர் ஆய்ந்த**

**அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை**

**ஐந்திணை பெருந்திணை எனஎழு பெற்றித் தாகும்”**

பரந்த இடத்தையுடைய தமிழ் நாட்டகத்து, சான்றோரால் ஆராயப்பட்ட அரிய தமிழாக விளங்குவது அகப்பொருள். இது கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என ஏழு பெற்றித்தாகும்.

**அகப்பொருள் சொல்லப்படும் திறன்**

**அதுவே**

**புனைந்துரை உலகியல் எனுந்திறம் இரண்டினுந்**

**தொல்லியல் வழாமற் சொல்லப் படுமே.**

அவ்வகப்பொருள் இல்லதும் உள்ளதுமாகிய இரண்டு கூறுபாட்டானும் பழைய நெறி பிழையாமற் கூறப்படும்.இதனைத் தொல்காப்பியர்.

**“நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்**

**பாடல் சான்ற புலனெறி வழக்கங்**

**கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்**

உரியதாகும் என்மனார் புலவர்”எனக் குறிப்பிடுவார்.

**கைக்கிளை**

**அவற்றுட்**

**கைக்கிளை உடையது ஒருதலைக் காமம்.**

மேற்சொல்லப்பட்ட அகப்பொருள் ஏழனுள் கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம் ஆகும். தலைவன் தலைவிமாட்டுத் ஒருதலையாய்க் கொள்ளும் அன்பு ஆகும். இது சிலபோது தலைவன் மாட்டுத் தலைவியிடமும் தோன்றுவதுண்டு.எனவே இது ஆண்பாற் கைக்கிளை,பெண்பாற் கைக்கிளை எனப்பட்டது.

**ஐந்திணை**

**ஐந்திணை உடையது அன்புடைக் காமம்.**

ஐந்திணை என்பதனுடைய பொருள் அன்புடைக் காமம் ஆகும். அது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். பாலை என்று சொல்லப்படும்.

**பெருந்திணை**

**பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்.**

பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் என்பதாம்.இது ஒப்புமை இல்லாத் தலைமக்கள் மாட்டுத் தோன்றுவது ஆகும்.இவ் ஒழுக்கம் மிகுதியாகப் பின்பற்றப்பட்டமையால் பெருந்திணை எனப்பட்டது என்பார் இளம்பூரணர்.

**ஐந்திணையின் பெயர்**

**குறிஞ்சி பாலை முல்லை மருதம்**

**நெய்தல் ஐந்திணைகக் எய்திய பெயரே.**

நிலம் வகுக்கப்படாத கைக்கிளையும் பெருந்திணையும் நீங்கலாக நிலம் வகுக்கப்படும் ஐந்திணைக்கும் உரிய பெயர் உணர்த்திற்று.குறிஞ்சியும் பாலையும் முல்லையும் மருதமும் நெய்தலும் அவ்வைந்து திணைக்கும் பொருந்தியபெயராகும். இதனைத் தொல்காப்பியர்

**மாயோன் மேய காடுறை யுலகமும்**

**சேயோன் மேய மைவரை யுலகமும்**

**வேந்தன் மேய தீம்புன லுலகமும்**

**வருணன் மேய பெருமண லுலகமும்**

**முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்**

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" எனக் குறிப்பார்.

**ஐந்திணைக்கும் உரிய பொருள்**

**அவைதாம்,**

**முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் எனமுறை**

**நுதற்பொருண் மூன்றினும் நுவலப் படுமே.**

குறிஞ்சி முதலாகிய ஐந்திணைதாம் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் என முறையானே கருதுதலையுடைய பொருள் மூன ்றாலும் சொல்லப்படும். இதனைத் தொல்காப்பியர்

**"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**

**நுவலுங் காலை முறைசிறந் தனவே**

**பாடலுட் பயின்றவை நாடுங் காலை"**

எனக் குறிப்பார்.

**முதற் பொருளின் வகை**

**நிலமும் பொழுதுமென முதலிரு வகைத்தே.**

முதற்பொருளாவது நிலமும் பொழுதும் என இரண்டுகூற்றினை உடைத்தாகும்.

**நிலம்**

**வரையே சுரமே புறவே பழனந்**

**திரையே அவைஅவை சேர்தரும் இடனே**

**எனஈர் ஐவகைத்து அனையியல் நிலமே.**

நிலம் என்னும் முதற்பொருள்,

**வரையும் (மலை) வரைசார்ந்த இடமும் - குறிஞ்சி**

**சுரமும் (மணல்) சுரஞ்சார்ந்த இடமும் - பாலை**

**புறவும் (காடு) புறவு சார்ந்த இடமும் - முல்லை**

**பழனமும் (வயல்) பழனஞ் சார்ந்த இடமும் - மருதம்**

**கடலும் கடல்சார்ந்த இடமும் - நெய்தல்**

**காலம்**

**பெரும்பொழுது என்றா சிறுபொழுது என்றா**

**இரண்டு கூற்றது இயம்பிய பொழுதே.**

முதற்பொருள், பெரும் பொழுது என்றும் சிறுபொழுது என்றும் இரண்டு பகுதியினை உடையதாகும்.

**பெரும்பொழுதின் வகை**

**காரே கூதிர் முன்பனி பின்பனி**

**சீரிள வேனில் வேனி லென்றாங்கு**

**இருமூன்று திறத்தது தெரி பெரும் பொழுதே.**

பெரும்பொழுது கார் முதலாக வேனில் ஈறாகச்சொல்லப்பட்ட ஆறு பகுதியினை உடைத்தாகும்.

**ஆவணி, புரட்டாசி – கார்காலம்**

**ஐப்பசி, கார்த்திகை – கூதிர் காலம்**

**மார்கழி, தை – முன்பனிக்காலம்**

**மாசி, பங்குனி – பின்பனிக்காலம்**

**சித்திரை, வைகாசி – இளவேனிற்காலம்**

**ஆனி, ஆடி – முதுவேனிற் காலம்**

**சிறுபொழுதின் வகை**

**மாலை யாமம் வைகறை எற்படு**

**காலை வெங்கதிர் காயும்நண் பகலெனக்**

**கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்.**

சிறுபொழுது மாலை முதலாக நண்பகல் மாலையாவது நிசியின்முன்னும் எற்பாட்டின் பின்னும் உண்டாகிய காலம்.யாமமாவது இடையிரவு, வைகறை யாவது விடியற்காலம். எற்படுகாலையாவது ஆதித்தன் படுகிற பொழுது. நண்பகலாவது உச்சிப்பொழுது ஆகும்.

**குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்**

**அவற்றுள்,**

**கூதிர் யாமம் முன்பனி யென்றிவை**

**ஓதிய குறிஞ்சிக் குரிய வாகும்.**

பெரும்பொழுதும் சிறுபொழுதுமாகிய பதினொன்றனுள் கூதிரும் யாமமும் முன்பனியுமாகிய மூன்றுமாகும்.

**பாலைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்**

**வேனில் நண்பகல் பின்பனி யென்றிவை**

**பான்மையி னுரிய பாலை தனக்கே.**

பாலைக்கு வேனிலும் நண்பகலும் பின்பனியுமாகிய மூன்றும் விதியான் உரியவாகும்.

**முல்லைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்**

**மல்குகார் மாலை முல்லைக் குரிய.**

கார்காலமும் மாலைக்காலமும் ஆகிய இரண்டு காலமும் முல்லைக்குரியன.

**மருதத்துக்குரிய சிறுபொழுது:**

**இருள்புலர் காலை மருதத்திற் குரித்தே.**

மருதத்திற்கு குரிய சிறுபொழுது விடியற்காலம் ஆகும்.

**நெய்தற்குரிய சிறுபொழுது**

**வெய்யோன் பாடு நெய்தற் குரித்தே.**

நெற்தற்குரிய சிறுபொழுது கதிரவன் படுகின்ற காலம் ஆகும்.

**மருதம் நெய்தல் என்னும் இரண்டற்குரிய பெரும்பொழுது**

**மருதம் நெய்தலென் றிவையிரண் டற்கும்**

**உரிய பெரும்பொழு திருமூன் றும்மே.**

மருதமும் நெய்தலும் என்னும் இரண்டற்கும் பெரும்பொழுது ஆறும் உரியவாம்.

**நம்பியகப்பொருள் - கருப்பொருள் வகை விளக்கம்**

**கருப்பொருள்**

**ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு**

**ஊர்நீர் பூமரம் உணாப்பறை யாழ்பண்**

**தொழில் எனக் கருஈர் எழுவகைத் தாகும்.**

தெய்வம் உயர்ந்தோர், அல்லோர், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண் தொழில் ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்கு வகையினை

**கருப்பொருள் உடைத்தாகும்.**

**குறிஞ்சிக் கருப்பொருள்**

**விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்**

**குறத்தி கொடிச்சி குறவர் கானவர்**

**குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடர்வடி**

**கறையடி சீயஞ் சிறுகுடி யருவி**

**நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தன்**

**ஆரந் தேக்ககில் அசோகம் நாகம்.**

**வேரல் ஐவனந் தோரை யேனல்**

**கறங்கிசைத் தொண்டகங் குறிஞ்சியாழ் குறிஞ்சி**

**வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரற்**

**பைந்தினை காத்தல் செந்தேன் அழித்தல்**

**செழுங்கிழங் ககழ்தல் முழங்கிவீ ழருவியொடு**

**கொழுஞ்சுனை யாடல் குறிஞ்சிக் கருப்பொருளே.**

இவை குறிஞ்சிக்குரிய கருப்பொருள் ஆகும். சேய் முதலாகச் சுனையாடல் சொல்லப் பட்டன வெல்லாங் குறிஞ்சிக்கருப்பொருளாம்.

பாலையின் கருப்பொருள் கன்னி விடலை காளைமீளி இன்னகை எயிற்றி எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர் புறவுபருந் தெருவை

**கழுகு செந்நாய் கல்கெழு குறும்பு**

**குழிவறுங் கூவல் குராஅ மராஅ**

**உழிஞ்சில் பாலை யோமை யிருப்பை**

**வழங்குகதிக் கொண்டன செழும்பதிக் கவர்ந்தன**

**பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்**

**பகற்சூறை யாடல் பாலக்கருப் பொருளே.**

கன்னி முதலாகச் சூறையாடல் ஈறாகச் சொல்லப்பட்டன எல்லாம் பாலைக் கருப்பொருளாம்.

**முல்லையின் கருப்பொருள்**

**நெடுமால் குறும்பொறை நாடன் தோன்றல்**

**வடுவில் கற்பின் மனைவி கிழத்தி**

**இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்**

**கான வாரண மான்முயல் பாடி**

**குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை**

**நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவம்**

**கொன்றை காயா மன்றலங் குருந்தந்**

**தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை**

**ஏற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி**

**சாமை வரகு தரமுடன் வித்தல்**

**அவைகளை கட்டல் அரிதல் கடாவிடல்**

**செவிகவர் கொன்றைத ் தீங்குழல் ஊதல்**

**மூவின மேய ்த்தல் சேவினந் தழுவல்**

**கழுமிய குரவையொடு கான்யா றென்றிவை**

**முழுதுட னாடன் முல்லைக்கருப் பொருளே.**

நெடுமால் முதலாகக் கான்யாறாடல் ஈறாகச் சொல்லப்பட்டன வெல்லாம் முல்லைக் கருப்பொருளம்

**மருதத்தின் கருப்பொருள்**

**இந்திரன் ஊரன் பைந்தார் மகிழ்நன்**

**கெழுதகு கற்பின் கிழத்தி மனைவி**

**உழவர் உழத்தியர் கடையர் கடைச்சியர்**

**மழலை வண்டான மகன்றில் நாரை**

**அன்னம் போதா நன்னிறக் கம்புள்**

**குருகு தாரா எருமை நீர்நாய்**

**பெருகிய சிறப்பின் பேரூர் மூதூர்**

**யாறு மனைக்கிண றிலஞ்சி தாமரை**

**நாறிதழ ்க் கழுநீர் நறுமலர்க் குவளை**

**காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதஞ்**

**செந்நெல் வெண்ணெல் அந்நெல் லரிகிணை**

**மன்றன் முழவ மருதயாழ் மருதம்**

**மன்றணி விழாக்கோள் வயற்களை கட்டல்**

**அரிதல் கடாவிடல் அகன்குளம் குடைதல்**

**வருபுன லாடன் மருதக்கருப் பொருளே.**

இந்திரன் முதலாக வருபுனலாடல் ஈறாகச் சொல்லப்பட்டன வெல்லாம் மருதக் கருப்பொருளாம்.

1. தெய்வம் - இந்திரன்
2. உயர்ந்தோர் - ஊரன், மகிழ்நன், கிழத்தி மனைவி
3. அல்லோர் - உழவன், உழத்தியர், கடையர், கடைச்சியர்
4. புள் - முகன்றில், நாரை, அன்னம், கம்புள், பெருநாரை
5. விலங்கு - எருமை, நீர்நாய்
6. ஊர் - பேரூர், மூதூர்
7. நீர் - ஆற்றுநீர், கிணற்றுநீர், குளத்துநீர்
8. பூ - தாமரைப்பூ, கழுநீர்ப்பூர், குவளைப்பூ
9. மரம் - காஞ்சி, வஞ்சி, மருதம்
10. உணவு - செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி
11. பறை - நெல்லரி கிணை, மணமுழவு
12. யாழ் - மருத யாழ்
13. பண் - மருதப்பண்
14. தொழில் - விழா எடுத்தல், வயற்களை கட்டல், நெல்லரிதல், குளம் குடைதல் புது

நீராடல்

**நெய்தலின் கருப்பொருள்**

**வருணன் சேர்ப்பன்விரிதிரைப் புலம்பன்**

**பரும அல்குற் பரத்தி நுளைச்சி**

**நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்**

**அளவர் அளத்தியர் அலைகடற் காக்கை**

**சுறவம் பாக்கம் பெறலரும் பட்டினம்**

**உவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்**

**கண்டகக் கைதை முண்டகம் அடம்பு**

**கண்டல் புன்னை வண்டிமிர் ஞாழல்**

**புலவ மீனுப்பு விலைகளிற் பெற்றன**

**நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை**

**விளரியாழ் செவ்வழி மீனுப்புப் படுத்தல்**

**உணங்கவை விற்றன்மீன் உணக்கல்புள் ளோப்பல்**

**நெடுங்கட லாடல் நெய்தற்கருப் பொருளே.**

வருணன் முதலாகக் கடலாடல் ஈறாகச் சொல்லப்பட்டன வெல்லாம் நெற்தற் கருப்பொருளாம்.

1. தெய்வம் - வருணன்
2. உயர்ந்தோர் - சேர்ப்பன், புலம்கன், பரத்தி, நுளையர்
3. அல்லோர் - நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்
4. புள் - கடற்காகம்
5. விலங்கு - சுறாமீன்
6. ஊர் - பாக்கம், பட்டினம்
7. நீர் - உவர்நீர்க்கேணி, கவர்நீர்
8. பூ - நெய்தல்பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடம்பூ
9. மரம் - கண்டல், புன்னை, ஞாழல்
10. உணவு - மீனும் உப்பும் விற்றுப்பெற்ற பொருள்
11. பறை - மீன்கோட்பறை, நாவாய்ப்பறை

12. யாழ் - விளரி யாழ்

13. பண் - செவ்வழிப்பண்

14.தொழில் - மீன் பிடித்தல், உப்புக் காய்ச்சுதல், உப்பு விற்றல், மீன் உலர்த்தல், கடல் ஆடல

**உரிப் பொருள்**

**புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்**

**இரங்கலும் இவற்றின் நிமித்தமு மெனவாங்**

**கெய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தே.**

உரிப்பொருள புணர்தலும், புணர்தல் நிமித்தமும்; பிரிதலும், பிரிதல் நிமித்தமும்; இருத்தலும் இருத்தல் நிமித்தமும்; ஊடலும் ஊடல் நிமித்தமும்; இரங்கலும், இரங்கல் நிமித்தமும் எனப் பத்து வகையினை யுடைத்தாம். இதனைத் தொல்காப்பியர்,

**புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**

**ஊடல் இவற்றி னிமித்த மென்றிவை**

**தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"**

என விளக்குவார்.

**கைகோள் வகை**

**அளவில் இன்பத்தைந்திணை மருங்கிற்**

**களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்.**

எல்லையில்லாத இன்பத்தையுடைய ஐந்திணையிடத்துக் களவும் கற்புமென இரண்டொழுக்கமும் நிகழும்.

**களவொழுக்கத்தின்கண் நிகழும்புணர்ச்சியின் வகை**

**இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப் பாடு**

**பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டமென்**

**றுணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்தே.**

களவு என்னும் கைகோள் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம்,பாங்கியிற் கூட்டமென நான்கு வகையினை யுடைத்தாம். காமப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும்

**பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்**

**றாங்கநால் வகையினு மடைந்த சார்பொடு**

**மறையென மொழிதன் மறையோ ராறே"**

என்பது தொல்காப்பியம்.

**கைக்கிளை நிகழும் காலம்**

**மெய்க்கிளையாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்**

கிளை நரம்பினை உடைத்தாகிய யாழினையுடைய கந்திருவர் விரும்பும் களவிற் புணர்ச்சி முன் கைக்கிளை நிகழ்தல் கடனென்று சொல்லுவர் புலவர். **கைக்கிளை**

**அதுவே,**

**காமஞ் சான்ற இளமை யோள்வயிற்**

**குறிப்பறி காறுங் குறுகாது நின்று**

**குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்.**

கைக்கிளையாவது காமநுகர்தற்கு அமைந்த இளமையுடைய தலைமகளிடத் துண்டாகிய குறிப்பினைத் தான் அறியும் வரை தலைமகன் அவளைச் சாராது நின்று தன்வசமாகிய நெஞ்சினோடு சொல்லுதலாம்.

**கைக்கிளைக்குரிய தலைமக்கள்**

மறையோர் மன்னவர்வணிகர்சூத் திரரெனும்

இறையோர் தத்தமக் கெய்துமற் றதுவே,

கைக்கிளை அந்தணர்,மன்னர், வணிகர், சூத்திரர் என்னும்நால்வகைத் தலைமக்கட்கே கூடுவதாம்.

**அதுவே,**

**மொழிந்தோர் நால்வரு மொழிந்தைந் நிலத்துறை**

**இழிந்தோர் தம்முள் உயர்ந்தோரு மெய்துப.**

கைக்கிளையை நால்வகைத் தலைமக்களுமன்றி ஐந்து நிலத்தும் உறையும் கீழ்நிலைமக்களுள் தலைமக்களும் பெறுவர்.

**இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம்**

ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்பாராதவிதமாகச் சந்திக்கும் சந்திப்பு இயற்கைப் புணர்ச்சி எனப்படும்.

**தெய்வந் தன்னின்எய்தவுங் கிழத்தியின்**

**எய்தவும் படூஉம் இயற்கைப் புணர்ச்சி.**

மேற்சொல்லப்பட்ட நால்வகைப் புணர்ச்சியுள்ளும் இயற்கைப் புணர்ச்சியானது இயற்கைப் புணர்ச்சியாவது தெய்வத்தாற் பெறவும் படும்., தலைமகளாற் பெறவும் படும் என்பதாம்.

**இயற்கைப் புணர்ச்சிக்கொரு சிறப்பு விதி**

**இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தின் எய்துழி**

**முயற்சி யின்றி முடிவ தாகும்.**

இயற்கைப் புணர்ச்சிதெய்வத்தால் பெறுங்காலத்து முயற்சியின்றித்தானே முடிவதாம். எனவே,அப் புணர்ச்சி தலைமகளால் பெறுங்காலத்து முயற்சியால் முடிவதாகும் என்பது பெறப்படும்.

**களவொழுக்கின்கண் புணர்ச்சி நிகழும் திறம்**

**உள்ளப் புணர்ச்சியுமெய்யுறு புணர்ச்சியும்**

**கள்ளப் புணர்ச்சியுட் காதலர்க் குரிய.**

உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என்னும் இரண்டும் தலைமகனுக்கும் தலைமகட்கும் களவுப்புணர்ச்சிக்கண் உரியவாம்.

**உள்ளப் புணர்ச்சி நிகழும் காலம்**

**பொருவிறந்தோற்குப் பெருமையும் உரனும்**
**நன்னுதற் கச்சமும் நாணும் மடனும்**
**மன்னிய குணங்க ளாதலின் முன்னம்**
**உள்ளப் புணர்ச்சி யுரிய தாகும்**

இங்ஙனம் தெய்வத்தாலோ தலைவியின் முளற்சியாலோ அமையும் களவுப் புணர்ச்சி இரு வகைப்படும். அவை முறையே உள்ளப்புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என்பவையாகும். அவற்றுள் பெருமையும், உரனும் தலைமகனுக்கு உரிய குணமாதலாலும் அச்சமும், நாணும், மடனும் தலைமகட்கு உரிய குணமாதலாலும் மேற்சொல்லப்பட்ட இரண்டு புணர்ச்சியுள்ளும் உள்ளப்புணர்ச்சி முன் நிகழ்தற்குரித்தாம்.

உரனெனினும் அறிவெனினும் ஒக்கும். பெருமையென்பது பழியும் பாவமுமஞ்சுதல், அறிவென்பது தக்கதறிதல். அச்சமென்பது காணாததொன்று கண்டால் பெண்டிரிடத்து நிகழ்வது. நாணமென்பது பெண்டிர்க்கியல்பாகிய குணம். மடமென்பது பேதைமை.

**பெருமையு முரனு மாடூஉ மேன**
**அச்சமு நாணு மடனுமுந் துறுத்த**
**நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப**

என்பது தொல்காப்பியம்.

**மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம்**

**காட்சி முதலாச்சாக்காடு ஈறாக்**

**காட்டியப த்துங் கைவரு மெனினே**

**மெய்யுறு புணர்ச்சி எய்துதற் குரித்தே.**

காட்சியும், வேட்கையும் ஒருதலையுள்ளுதலும் மெலிதலும், ஆக்கஞ் செப்புதலும் நாணுவரையிறத்தலும், நோக்குவ வெல்லா மவையேபோறலும், மறத்தலும், மயக்கமும் சாக்காடும் என்னும் பத்து அவத்தையும் ஒருங்கே நிகழுமாயின் தலைமகற்கு மெய்யுறு புணர்ச்சி கூடுதற்குரித்தாம்.

**காட்சி:** தலைமகளைத் தலைமகன் தனியிடத்துக் காண்ட அளவிழல் ஏற்படும் மன உணர்வு.

**வேட்கை:** இவளைப் பெறவேண்டும் என்னும் உள்ள நிகழ்ச்சி.

**ஒருதலையுள்ளல்:** இடை விடாது நினைத்தல்,

**மெலிதல்:** உடம்பு வாடுதல்,

**ஆக்கஞ் செப்பல்:** தன்னெஞ்சின்கண் வருத்த மிகுகின்ற உணர்வைப் பிறர்க்கு உரைத்தல்.

**நாணுவரையிறத்தல்:** நாணத்தின் எல்லையைக் கடத்தல்.

**நோக்குவவெல்லாம் அவையே போறல்:** காணுபவை எல்லாம் தலைவியின் உறுப்பு போலத் தோற்றுதல்.

**மறத்தல்:** அறிவு திரிந்து பேதலித்தல்

**மயக்கம்:** செய்யும் செயலறியாது மோகித்தல்.

**சாக்காடு:** இறந்துபடுதல்.

**"வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலிதல்**

**ஆக்கஞ் செப்பல் நாணுவரை யிறத்தல்**

**நோக்குவ வெல்லா மவையே போறல்**

**மறத்தல் மயக்கஞ் சாக்கா டென்றன்**

**சிறப்புடை மரபினவை களவென மொழிப”**

**என்பது தொல்காப்பியம்.**

**களவுப் புணர்ச்சி நிகழும் இடம்**

பிறர் எவரும் அறியாமல் தலைவன் தலைவியைச் சந்திக்க தலைவியாலோ தோழியாலோ குறிக்கப்படும் இடம் குறியிடம் ஆகும்.

**பகற்குறி இரவுக் குறியெனும் பான்மைய**

**புகற்சியி னமைந்தோர் புணர்ச்சிநிக ழிடனே.**

இத்தகைய குறியிடம் பகற் குறியும், இரவுக் குறியுமென்னும் இரண்டு பகுதியினை உடையதாகும். பகலில் தினைப்புனம் காத்தல். பூக்கொய்தல் பொருட்டாக வந்த தலைவியை பிறருக்குத் தெரியாமல் தலைவனைச் சந்திப்பது பகற்குறி எனப்படும். தலைவன் தலைவியை இரவுப்பொழுதில ் சந்திக்கும் இடம் இரவுக்குறி எனப்படும்.

**பகற்குறி இரவுக் குறிகளின் இலக்கணம்**

**இல்வரை யிகந்ததுபகற்குறி இரவுக்குறி**

**இல்வரை இகவா இயல்பிற் றாகும்.**

பகற்குறி இல்லின் எல்லையைக்கடந்ததமையும். இரவுக்குறி இல்லின் எல்லையைக் கடவாது.

**வினாக்கள்**

1. கைக்கிளை பெருந்திணை என்றால் என்ன?
2. ஐந்திணைக்குரிய மூன்று பொருள்கள் யாவை?
3. கைக்கோள் என்றால் என்ன?
4. குறி என்றால் என்ன?

5. களவொழுக்கத்தில் நிகழும் பிரிவுகளை எழுதுக.

6. அறத்தோடு நிற்றல் பற்றி எழுதுக.

7. பிரிவுக்குரிய கால அளவைக் குறிப்பிடுக.

8. பாங்கி, செவிலி, அறிவர் குறித்து விளக்குக.

# அலகு - 2

## அகத்திணையியல்

## கற்பின் வகை

**கற்பு என்னும் கைகோள்**

அகத்திணை இயலில் வகுக்கப்பட்ட கைகோள்கள் இரண்டு அவற்றுள் இரண்டாவதாக அமைவது கற்பு.

இல்வாழ்க்கைக்குரிய நெறிகளைக் கற்பித்துக் கொண்டு, அவற்றுக்கு ஏற்ப வாழத் தொடங்கும் இல்லற வாழ்வே கற்பு எனப்படும்.

**கற்பு - இருவகைகள்**

வரைவு எனும் திருமணத்தின் பின் தொடங்கி நிகழும் கற்பு வாழ்வை, அதன் முந்தைய சூழலை வைத்து இரண்டாக வகைப்படுத்துவர்.

1. களவின் வழி வந்த கற்பு
2. களவின் வழி வராத கற்பு

**1. களவின் வழி வந்த கற்பு (காதல் திருமணம்)**

தலைமக்கள் களவு என்னும் காதல் வாழ்க்கை வாழ்வர். பின்னர் அறத்தொடு நிற்பதன் வாயிலாகத் திருமணம் நடைபெறும். இவ்வாறு காதல் வாழ்க்கை வாழ்ந்தபின் கற்பு வாழ்க்கைக்கு வருவதைக் களவின் வழிவந்த கற்பு என்பர். இது உடன்போக்காகச் சென்ற போதும் நடைபெறும். எனவே, சுற்றத்தினரால் ஏற்கப்படாத தன்மையும் இதற்கு உண்டு.

**2. களவின் வழி வாராக் கற்பு (பெற்றோர் நிச்சயித்த திருமணம்)**

காதல் வாழ்க்கைக்கு வாய்ப்பு இல்லாமல் தலைவனின் பெற்றோரும், தலைவியின் பெற்றோரும் பேசி முடிக்கும் திருமணம் களவின் வழி வாராக் கற்பு எனப்படும்.

**கற்பில் புணர்ச்சி - சில வகைப்பாடுகள்**

கற்பு வாழ்க்கையில் தலைவன் மேற்கொள்ளும் புணர்ச்சி (கூடி மகிழும்) வகைகள் சில உள்ளன. அவையாவன :-

**குரவரில் புணர்ச்சி**

பெற்றோர் முன்நின்று திருமணம் செய்விக்க அதன் மூலம் தலைவியோடு கூடி மகிழுதல்.

**வாயிலிற் கூட்டம்**

வாயில்களாக வருபவர் மூலம், தலைவியின் ஊடல் தீர்த்து, கூடி மகிழுதல்.

**மறையிற் புணர்ச்சி**

காதல் பரத்தையர் எனப்படும் மகளிரோடு, கற்புக் காலத்தும் மனைவி அறியாது தலைவன் கூடி மகிழுதல்.

**மன்றல் புணர்ச்சி (மண உறவு மூலம் மகிழ்தல்)**

காமக்கிழத்தியர், பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியர் முதலானவருடன் உரிமையும், மண உறவும் கொண்டு தலைவன் கூடி மகிழுதல்.

**பிரிவின் வகைகள்**

இந்த ஐந்து பிரிவுகளும் ஒன்பது வகைப்படும். அவை,

(1) பிரிவுஅறிவுறுத்தல் - தலைவன் பிரியப் போவதைத் தோழி தலைவிக்கு உணர்த்துதல்.

(2) பிரிவு உடன்படாமை - அதைத் தலைவி ஏற்க மாட்டாள்.

(3) பிரிவு உடன்படுத்தல் - தலைவன் பிரிவுக்குத் தலைவியைத் தோழி உடன்படுத்தல்.

(4) பிரிவு உடன்படுதல் - தலைவன் பிரிவுக்குத் தலைவி உடன்படுதல்.

(5) பிரிவுழிக் கலங்கல் - தலைவன் பிரிந்த பொழுது தலைவி வருத்தம் கொள்ளல்.

(6) வன்புறை - பிரிவை நினைத்து வருந்துகின்ற தலைவியைத் தோழி பிரிவைப்பொறுத்துக் கொள்ளுமாறு வற்புறுத்திக் கூறுதல்.

(7) வன்பொறை - தலைவன் பிரிவால் ஏற்பட்ட மிகுந்த துன்பத்தைப் பெரிதும் முயன்று பொருத்துக் கொள்ளுதல்.

(8) வரும் வழிக் கலங்கல் - பிரிந்து சென்ற தலைவன் சென்ற காரியம் முடிந்து திரும்பி வருகின்ற பொழுது தலைவியின் நிலையை நினைத்து வருந்துதல்.

(9) வந்துழி மகிழ்ச்சி - பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் வந்தது கண்டு தலைவியும் தோழியும் மகிழ்தல்.

**பிரிவு பற்றிய சில பொதுக் கிளவிகள்**

- ஓதல் பிரிவு மூன்று ஆண்டுக் காலம்.
- தூது, துணைவயின், பொருள்வயின் காரணமாக ஏற்படும் பிரிவுகள் ஓர் ஆண்டுக் காலம்.
- இக்கால எல்லை நீண்டால் தலைவன் தலைவிக்குத் துன்பங்கள் ஏற்படும்.
- பிரிவுத் துன்பம் காரணமாக தலைவியின் உருவத்தில் மாற்றங்கள் ஏற்படும்.
- பிரிவுக் காலத்தில் தன் துன்பங்களைத் தலைவன் பாகனிடத்துக் கூறுவான்.
- தலைவன் தலைவியோடு கூடி இருக்கும் பொழுது வருகின்ற கார் பருவத்தைக் (மழைக் காலத்தை) கண்ட தலைவன்
- 

**பிரிவும் அதன் வகைகளும்**

தலைவன், தலைவியைத் தனித்திருக்கச் செய்து பிரிந்து செல்லும் நிகழ்ச்சிக்குப் பிரிவு என்று பெயர். இச்செயல்பாடு களவு - கற்பு எனும் இரு வகைப்பட்ட வாழ்விலும் நிகழும்.

**களவில் நிகழும் பிரிவுகள்**

மிகுந்த அன்பு கொண்டு பழகி வாழும் களவு வாழ்வின் போது நிகழும் பிரிவுகள் இருவகைப்படும்.

**ஒருவழித் தணத்தல்**

வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்

**ஒருவழித் தணத்தல்**

களவு வாழ்வை ஒரு முடிவுக்குக் கொண்டு வர ஏதுவாகத் திருமணம் புரிந்து கொள்ளுமாறு தோழி தலைவனிடம் அறிவுறுத்துவாள். அதற்கு உடன்பட்ட தலைவன் தன் ஊருக்கு ஒருவழி (முறை) போய் வருகிறேன் பிறகு மணமுடிப்பேன் என்று கூறிச் செல்வது ஒருவழித் தணத்தல் எனப்படும்.

இது, ஓர் ஊரின்கண்ணும் ஒரு நாட்டுக்குள்ளும் நிகழும் பிரிவாகும். ஆகவே, இதற்குக் கால வரையறை சொல்லப்படவில்லை.

**வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்**

(வரைவு = திருமணம்)

திருமணம் புரிந்து கொள்ள முடிவு செய்த தலைவன் அதற்கு வேண்டும் பொருள் ஈட்டுதல் காரணமாகப் பிரிதல் இவ்வகை. இது காடு இடையிட்டும், நாடு இடையிட்டும் செல்வதாக அமையும். இப்பிரிவுக்குரிய காலம் இரண்டு மாதமாகும்.

**கற்பில் நிகழும் பிரிவுகள்**

கற்பு வாழ்க்கை வாழும் காலத்தே தலைவன் தலைவியைப் பிரிந்து மேற்கொள்ளும் செயல் (பிரிவு) ஆறு வகைப்படும்.

1. பரத்தையிற் பிரிவு
2. ஓதல் பிரிவு
3. காவல் பிரிவு
4. தூதிற் பிரிவு
5. துணைவயின் பிரிவு
6. பொருள்வயின் பிரிவு

**பரத்தையிற் பிரிவு**

தலைவன் பரத்தையிடம் விருப்பம் கொண்டு தலைவியைப் பிரிந்து, பரத்தையர் வாழும் பகுதிக்குச் செல்லுதல் பரத்தையிற் பிரிவு எனப்படும். இது,

1. அயல்மனைப் பிரிவு
2. அயற்சேரிப் பிரிவு
3. புறநகர்ப் போக்கு

என மூன்று உட்பிரிவுகளை உடையது.

**1. அயல்மனைப் பிரிவு**

தலைவன் காமக்கிழத்தியோடு கூடி மகிழ ஓர் ஊரிலேயே வேறு வீட்டில் சென்று தங்குதல்.

**2. அயற்சேரிப் பிரிவு**

தலைவன் பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியையும், காதல் பரத்தையையும் கூடி மகிழ்வதற்காகவும், விழா நிகழ்ச்சிகளைக் காண்பதற்காகவும், வேறு ஓர் பகுதிக்குச் சென்று தங்குதல்.

**3. புறநகர்ப் போக்கு**

தலைவன் புதியவளாகிய பரத்தையைத் தேரிலேற்றிக் கொண்டு சோலையில் விளையாடவும், புனலாடவும் நகர்ப் புறத்திற்குச் சென்று தங்குதல்.

**ஓதல் பிரிவு**

தலைவன் கல்வி கற்றலின் காரணமாகத் தலைவியைப் பிரிந்து செல்லுதல் ஓதல் பிரிவு எனப்படும். இதற்குரிய கால வரையறை 3 ஆண்டுகளாகும். இது

1. வேதம் ஓதுதல்
2. வேதமல்லாக் கல்வி கற்றல்

என இரண்டு உட்பிரிவுகளை உடையது.

**காவல் பிரிவு**

பாதுகாத்தல் தொழிலை மேற்கொள்ள வேண்டி, தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வது காவல் பிரிவு எனப்படும். இது

அறப்புறம் காவல்

நாடு காவல்

என இரு உட்பிரிவுகளை உடையது.

**1. அறப்புறம் காவல்**

அறமன்றங்கள் முதலான இடங்களைப் பாதுகாப்பதற்காகத் தலைவன் மேற்கொள்வது இப்பிரிவு.

**2. நாடு காவல்**

பகைவர்களிடமிருந்து தன் நாட்டைக் காப்பதற்காக மேற்கொள்ளும் இப்பிரிவு அரசருக்கு மட்டுமே உரியது.

**தூதிற் பிரிவு**

அரசர் இருவர் தம்முள் வேறுபட்டுப் பகை கொண்டு போரிட எண்ணிய சூழலில், அவ்விருவரிடையே பகை நீங்குவதற்காகத் தலைவன் தூது செல்லுதல் இப்பிரிவாகும். இது அந்தணர்க்கும், அரசருக்கும் உரியது. இதற்குரிய காலம் ஓர் ஆண்டு ஆகும்.

**துணைவயின் பிரிவு**

ஓர் அரசனுக்குப் பகைவர்களால் இடையூறு நேர்ந்த வழி அதனைப் போக்குவதற்குத் துணைபுரியும் நோக்குடன் தலைவன் மேற்கொள்ளும் பிரிவு துணைவயின் பிரிவு எனப்படும். இது அரசர், வணிகர், வேளாளர் என்னும் மூவருக்கும் உரியது. இதற்குரிய காலம் ஓர் ஆண்டு ஆகும்.

**பொருள்வயின் பிரிவு**

தலைவன் தன் இல்லற வாழ்வுக்குத் தேவைப்படும் பொருளை ஈட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு பொருள்வயின் பிரிவு எனப்படும். இது அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு பிரிவினர்க்கும் உரியது. இதற்குரிய காலம் ஓர் ஆண்டு ஆகும்.

**பிரிவு பற்றிய சில சிறப்பு விதிகள்**

தலைவன் நிகழ்த்தும் அறுவகைப் பிரிவிற்குமான சில சிறப்பு விதிகளை நம்பி அகப்பொருள் நூல் வகுத்து வழங்குகிறது. அவை வருமாறு:

எல்லா வகைப்பிரிவின் போதும் தலைவன் தலைவியிடம் சொல்லிச் செல்வதும் உண்டு, சொல்லாமல் செல்வதும் உண்டு.

தலைவியிடம் சொல்லாமல் செல்லும் போதும் தோழியிடம் சொல்லி விட்டுச் செல்வான்.

நாடு இடையிட்டுச் (தன் நாடு விட்டு வேற்று நாட்டுக்கு) செல்லும் பிரிவின் போது தலைவன் - நடந்து செல்லுதல், கப்பலில் செல்லுதல், ஊர்தியில் செல்லுதல் என்னும் மூன்று வழிமுறைகளில் ஒன்றை மேற்கொள்வான்.

தலைவிக்கும்கூட, தன் பிரிவைக் குறிப்பினால் உணர்த்திச் செல்வான்.

அந்தணர்கள் கப்பலில் செல்வதும், அரசர், வணிகர், வேளாளர் என்னும் மூவரும் பெண்களுடன் கப்பலில் செல்வதும், பெண்களுடன் பாசறையில் சென்று தங்குவதும் கூடாது.

பிரிவு மேற்கொள்ளாமல் தலைவன் தாமதித்தல் உண்டு. அதற்குச் செலவு அழுங்குதல் என்று பெயர்.

தலைவன் ஓதற் பிரிவு மேற்கொண்ட காலத்தே பிரிவை நினைத்துப் புலம்புதல் கூடாது. தூது காரணமாகவும், துணைபுரிதல் காரணமாகவும் பிரிந்து சென்ற தலைவன் அச்செயலின் காலம் நீட்டிக்கும் போது தலைவியை நினைந்து புலம்பலாம்.

**ஊடல் தீர்க்கும் வாயில்கள்**

தலைவி, தலைவன் மீது கொள்ளும் பிணக்கு ஊடல் எனப்படும். கற்பு வாழ்வின் போது, பரத்தையிற் பிரிவு நிகழ்த்தும் தலைவன் அயல்மனை, அயற்சேரி, புறநகர் என்ற மூன்று இடங்களுக்கும் சென்று தங்கிவிடுவான். அப்போது தலைவிக்கு ஊடல் ஏற்படும்.

தலைவிக்கு ஏற்படும் ஊடலைத் தீர்த்து மீண்டும் தலைவன், தலைவியின் கற்பு வாழ்வை (இல்லற வாழ்வை) இணைத்து வைக்கும் இனிய பணியை ஆற்றுபவர்கள் ஊடல் தீர்க்கும் வாயில்கள் எனப்படுவர்.

**கொளைவல் பாணன் பாடினி கூத்தர்**

**இளையர் கண்டோர் இருவகைப் பாங்கர்**

**பாகன் பாங்கி செவிலி அறிவர்**

**காமக் கிழத்தி காதற் புதல்வன்**

**விருந்து ஆற்றாமை என்றுஇவை ஊடல்**

**மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கள் ஆகும்**

என்ற நம்பி அகப்பொருள் நூற்பா(68) ஊடல் தீர்க்கும் வாயில்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. பாணன், விறலி, கூத்தர், ஏவலர், (தலைவி ஊடியுள்ள நிலையைக்) காண்பவர்கள் (இவர்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களாக இருப்பர்) பாங்கன், பாங்கி, தேர்ப்பாகன், செவிலி, சான்றோர், காமக்கிழத்தி, புதல்வர், விருந்தினர், தலைவியின் ஆற்றாமை (பொறுத்துக் கொள்ள முடியாத தனிமையும் வருத்தமும்)

ஆகியவை ஊடல் தீர்க்கும் வாயில்களாகக் கூறப்பட்டிருக்கின்றனர். இனி, வாயில்களாகத் திகழும் சிலரது செயல்பாடுகளைக் காண்போம்.

**பாணர் செயல்கள்**

ஊடல் தீர்க்க வந்த வாயிலாகத் தன்னை ஏற்க வேண்டுதல், இசைவு பெறுதல், தலைவியின் ஊடல் தீர்த்தல், அவள் அழகு அழிந்தமை கண்டு கலங்குதல், தலைவனிடம் சென்று தலைவி சொல்லிய செய்தியை உரைத்தல், தலைவன் மீண்டு வருவதைத் தலைவிக்குச் சொல்லுதல், தலைவன் வரவு அறிந்த தலைவி அழகு பெற்றதை அறியார்போல வினவுதல் முதலியன பாணரின் செயல்களாகும்.

**விறலிக்குரிய செயல்கள்**

பிரிவின் போது தலைவிக்கு ஆறுதல் கூறுதல், ஊடல் தீர்த்தல், தலைவனோடு சேர்த்தல் முதலியன விறலிக்குரிய செயல்களாகும். (விறலி - ஆடல் மகள்)

**கூத்தர் செயல்கள்**

தலைவியின் செல்வச் செழிப்பை வாழ்த்துதல், நல்லறிவு புகட்டுதல், ஆறுதல் மொழி கூறுதல், தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே ஏற்பட்டு விட்ட இடைவெளியைச் சுட்டிக் காட்டுதல், பாசறைக்குச் சென்று தலைவனிடம் செய்தி கூறுதல், தலைவன் திரும்பி வருவதைத் தலைவிக்கு உரைத்தல் முதலானவை கூத்தர் செயல்களாகும்.

**இளையோர் செயல்கள்**

(இளையோர் = ஏவலர்)

வாயில் வேண்டி உடன்படச் செய்தல், தலைவியின் ஊடல் தீர்த்தல், அதனைத் தலைவனுக்கு உணர்த்துதல், தலைவனுக்கும் தலைவிக்கும் பணிவிடை செய்தல், தலைவன் வருவதைத் தலைவிக்கு உரைத்தல், தலைவனின் ஆற்றலைத் தலைவிக்கு உணர்த்தல் முதலானவை இளையோர்க்குரிய செயல்களாகும்.

**கண்டோர்க்குரிய செயல்கள்**

ஊடல் தீர்த்தல், தலைவன் வரவைத் தலைவிக்கு உணர்த்துதல் முதலானவை கண்டோர்க்குரிய செயல்களாகும்.

**பாங்கர் செயல்கள்**

இளமை, செல்வம், வாழ்க்கை முதலான எதுவுமே நிலையற்றது என்ற நிலையாமைத் தத்துவத்தை உணர்த்துதல், தலைவன் பிரிவைத் தடுத்தல், பின்னர் பிரிவுக்கு உடன்படுதல் முதலானவையும் நன்மை தரும் வழியில் தலைவனை நிலைநிறுத்துதலும், தீமையிலிருந்து விலக்குதலும் பாங்கரின் செயல்களாகும்.

**பாகன் செயல்கள்**

தலைவியிடம் வாயில் ஏற்க வேண்டுதல், ஊடல் தீர்த்தல், நெடுந்தூரம் சென்ற தலைவன் விரைவில் வருவான் எனக் கூறித் தலைவியை ஆற்றுதல் முதலானவை பாகன் செயல்களாகும்.

**பாங்கியின் செயல்கள்**

பிரிவை விலக்குதல், பிரிவைத் தாமதிக்கச் செய்தல், பிரிவை ஏற்றுக்கொள்ளுதல், நோற்றல் முதலானவை பாங்கியின் செயல்களாகும்.

**செவிலி, அறிவர் செயல்கள்**

நீதிமுறை, உலகியல் முறைகளை வெளிப்படையாகக் கூறுதல் செவிலிக்கும் அறிவர்க்கும் உரிய செயல்களாகும்.

**வினாக்கள்**

1. கற்பு என்றால் என்ன? வகைகளைக் கூறி விளக்குக.

2. பிரிவு என்றால் என்ன? பிரிவின் வகைகளைக் கூறி விளக்குக.

3. ஊடல் தவிர்க்கும் வாயில்கள் யார் யார்? விளக்குக.

4. நால்வகைப் பிரிவிற்குரிய காலங்கள் எவை?

5. ஓதற், தூதுப் பிரிவனைக் கூறுக.

# அலகு - 3

# களவியல்

பழந்தமிழிரின் அகவாழ்க்கையில் களவு இல்லாமல் கற்பு வாழ்க்கை அமைவதில்லை. முற்பிறவியல் தலைவன் தலைவியாக இருந்தவர்கள் இப்பிறப்பிலும் ஒன்றிணைவர் என்பது நம்பிக்கை.

அகத்திணையியலில் அகவாழ்விற்கு அடிப்படையான முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவை விளக்கப்பட்டன. கருப்பொருளில் முக்கியமான அகத்திணை மாந்தர்கள். அவர்களின் செயற்பாடுகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

களவியலில் தலைவன் தலைவி சந்திப்பு, சந்திக்கும் முறைகள், தோழியாகிய பாங்கி, பாங்கினின் பங்கு, இணையும் தலைவன், தலைவியின் மனநிலை, வாயில், குறி என அவர்களின் களவொழுக்கத்தோடு தொடர்புடைய அனைத்துச் செய்திகளும் விளக்கப்பட்டுள்ளன.

**களவின் இலக்கணம்**

தலைவன், தலைவி ஆகிய தலைமக்கள் வாழும் அன்பு வாழ்க்கை களவு, கற்பு என இருவகைப்படும். இவற்றுள் களவு என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தர வந்த அகப்பொருள் விள்கக நூலாசிரியர் கீழ்வருமாறு நூற்பா வகுத்துள்ளார்.

**உளமலி காதற் களவெனப் படுவது**

**ஒருநான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்**

**யாழோர் கூட்டத்து இயல்பின தென்ப (களவியல் நூற்பா.1)**

மனம் மகிழ்ந்து நெகிழ்வதற்குக் காரணமான களவு மணம் நான்கு வேதங்களில் சொல்லப்படும் எட்டு வகை மணங்களுள் யாழோடு இயங்கும் வானவர்களாகிய கந்தருவரின் முறையாகிய காந்தருவ மணத்தோடு ஒப்பிடத்தக்கது.

**களவு மணம; + காந்தருவ மணம்**

**நான்கு வேதம்**

1. ரிக் வேதம், 2. யசுர் வேதம், 3. சாமணம் வேதம், 4. அதர்வணம் வேதம்

**வேதங்கள் கூறும் மணமுறை எட்டு**

**எண்வகை மணங்கள்**

மேற்கண்ட நூற்பாவில் நால்வேத நெறியினர் வகுத்த எட்டு வகைத் திருமண முறைகள் குறிப்பிடப்படுகின்றன.

அவை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், கந்தர்வம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பன இவற்றுக்கான விளக்கம் வருமாறு:

**பிரமம்** : தகுதியுடைய பிரம்மச்சாரிக்குப் பெண்ணைக் கொடுப்பது.

**பிரசாபத்தியம்** : தலைவன் தலைவி இருவரது பெற்றோரும் உடன்பட்டுத் திருமணம் செய்து வைப்பது.

**ஆரிடம்** : ஒன்றோ இரண்டோ பசுவும், காளையும் தானமாகப் பெற்றுக் கொண்டு பெண்ணைக் கொடுப்பது.

**தெய்வம்** : வேள்விகள் பலவும் இயற்றும் ஓர் வேள்வி ஆசிரியனுக்குப் பெண்ணைக் கொடுப்பது.

**கந்தர்வம்** : கொடுப்போரும், கேட்போரும் இன்றித் தலைமகனும், தலைமகளும் தனி இடத்தில் எதிர்ப்பட்டுத் தாமே கூடி இன்புறுவது. இதுவே யாழோர் கூட்டம் எனப்படும்.

**ஆசுரம்** : பெண்ணின் தந்தைக்குப் பணம் கொடுத்து, பெண்ணுக்கும் அணிகலன்களை அணிவித்து, அப்பெண்ணை ஏற்று மணந்து கொள்வது.

**இராக்கதம்** : தலைவியை அவளது விருப்பமோ அவளது உறவினர் ஒப்புதலோ இன்றி அடைவது.

**பைசாசம்** : உறங்கிய பெண், (கள் உண்டு) களித்திருக்கும் பெண், பித்துப்பிடித்த பெண் முதலானவர்களுடன் கூடிக்களிப்பது.

**கந்தர்வமே களவு**

மேற்கண்ட எண்வகைப்பட்ட வேத வழிப்பட்ட மணமுறைகளில் ஒன்றாக இடம் பெறும் கந்தர்வம் என்பது தமிழ் இலக்கண நூல்கள் குறிப்பிடும் களவுக்கு இணையானது.

இம்முறையில்தான் தலைமக்களின் அன்புக்கு முதன்மை உள்ளது. முன் ஏற்பாடும் திட்டமிடுதலும் இன்றி இயற்கையாய் எதிர்ப்பட்ட இருவரும் விரும்பி, உளம் ஒத்து, அன்பு கலந்து கூடுகின்ற இம்முறையே தமிழ் மரபு வழிப்பட்ட களவுக்கு இணையானது.

இவ்விளக்கங்களைக் கொண்டு 'தலைமக்கள் தாமே எதிர்ப்பட்டுப் பிறர் அறியாதவாறு அன்பு காட்டி வாழும் காதல் வாழ்வே - களவு' என வரையறை செய்துகொள்வது பொருத்தமுடையது.

**கைக்கிளையின் பாகுபாடு**

முதல் நூற்பா களவுக்கு வரையறை செய்தது. அடுத்த நூற்பா, தலைவனும் தலைவியும் அறிந்து சந்திப்பதற்கு முன்னதாக நடைபெறும் நிகழ்வுகளை எடுத்துரைக்கின்றது.

1. காட்சி
2. ஐயம்
3. துணிவு
4. குறிப்பறிதல்

எனும் நான்கும் களவிற்கு முன் நிகழ்வனவாகும். இந்நான்கும் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்வன. இவற்றைப் படிநிலைகள் என்றும் குறிப்பிடலாம். இந்நான்கும் தலைவனின்

விருப்பம் என்கிற ஒருபக்கக் காதலை மட்டும் அடிப்படையாகக் கொண்டன. எனவே ஒருதலைக் காமம் என்கிற கைக்கிளை ஒழுக்கமாக இவை கருதப் பெறுகின்றன.

**1. காட்சி**

காட்சி - காண்பது

தலைவனும் தலைவியும் தனி இடத்து எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் காண்பது காட்சி ஆகும். இக்காட்சி நல்வினைப் பயனாக ஏற்படுவதாகும்.

வினை இருவகைப்படும். அவை நல்வினை, தீவினை என்பனவாகும்.

நல்வினை - தலைமக்களை ஒன்றுசேர வைப்பது.

தீவினை - தலைமக்களைப் பிரிப்பது.

இவற்றுள் சேர்த்து வைக்கும் பாங்குடைய நல்வினைப் பயனாய் - முதன் முதலாக எதிர்ப்படும் தலைமக்கள் ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்வது - காட்சி எனப்படும்.

தலைமக்கள் இருவரும் எல்லா நிலைகளிலும் ஒத்தவராய் இருப்பர் இருக்க வேண்டும். எனினும் தலைவன் மேம்பட்டவனாய் இருப்பதும் குற்றமில்லை என்பதும் ஓர் இலக்கணம் ஆகும்.

**2. ஐயம்**

ஐயம் - சந்தேகப்படுதல்.

இது, கைக்கிளையில் தலைவனிடம் நிகழும் என்பது இலக்கண விதி.

ஒரு பெண்ணின் தோற்றமும், அவளைக் கண்ட இடமும் சிறப்பு மிக்கதாக அமைந்துவிடும் போது, அவளைப் பற்றிய ஐயம் தலைவனுக்கு எழுவது இயற்கை.

அப்பெண் மானுடப் பெண்ணா ! தெய்வப் பெண்ணா! என்பது போலத் தலைவன் உயர்ந்த எண்ணத்தில் ஐயம் கொள்வான்.

**சான்று :**

அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை

மாதர்கொல் மாலும் என் நெஞ்சு. - (குறள், 1081)

என்னும் குறட்பா தலைமகன் ஐயம் கொண்டதற்குச் சான்றாகும்.

தன் முன் வந்து தோன்றும் அழகிய தலைவியைக் காணும்போது அவள் சாதாரண மானுடப் பெண்ணா? தெய்வமா? ஆடும் மயிலா? என்றெல்லாம் தலைவன் ஐயுறுவதாக இக் குறட்பா அமைந்துள்ளது. (தலைவிக்கு ஐயம் ஏற்படுதல் மரபு இல்லை)

**3. துணிவு**

தலைவியைக் கண்டபோது அவள் தெய்வப் பெண்ணா? மானுட மகளா? என்று ஐயப்பட்ட தலைவன், பின்னர்த் தன் ஐயம் நீங்கி, அவள் மானுடப் பெண்ணே என்ற முடிவுக்கு வருவான். அவ்வாறு அவன் ஐயம் நீங்கி ஒரு முடிவுக்கு வருவதைத் துணிவு என்று கூறுவர். அத்தகைய துணிவுக்கு வர, சில அடையாளங்கள் துணைபுரிவதாக அமையும். அவையாவன:

உடலில் எழுதப்பட்ட வல்லிக்கொடி

அணிந்திருக்கும் அணிகலன்களின் அமைப்பு

சூடிய மலர் வாடுதல்

மலரை வண்டு மொய்த்தல்

பாதம் தரையில்பட நடந்து வருதல்

இமைக்கின்ற கண்கள்

தலைவி அடைகின்ற அச்சம்

இவை காரணமாக, தலைவன் தலைவியை மானிடப் பெண் எனக் கண்டு ஐயம் தீர்வான்.

### 4. குறிப்பறிதல்

தலைவியைக் காண்பது ஐயம் கொள்வது மானுடப் பெண்ணே என்று துணிவது இவற்றின்பின் தலைவி தன்னை விரும்புகிறாளா என்பதை அறியும் ஆவல் தலைவனுக்கு ஏற்படும். அதற்காக, தலைவி ஏதேனும் குறிப்புக் காட்டுகிறாளா என்று நோக்குவது தலைவனது இயல்பு. அதையே குறிப்பறிதல் என்று குறிப்பிடுவர்.

தலைமகள், தன் உள்ளத்தில் உள்ள தலைவன் மீதான விருப்பத்தைக் கண்களின் வழிப் புலப்படுத்துவாள். இதுவே அவள் காட்டும் குறிப்பாகும் என்பது இலக்கண வரையறை.

அரிவை நாட்டம் (தலைவியின் கண்கள் காணும் பார்வை)

அகத்துநிகழ் வேட்கை (மன விருப்பம்)

தெரிய உணர்த்தும் (வெளிப்படுத்தும்)

குரிசிற்கு என்ப (தலைவனுக்கு)

என்பது அகப்பொருள் நூற்பா (6).

குறிப்பு : காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என்னும் இந்நான்கும் நிகழ்ந்த பின்னரே (தலைவியின் காதல் குறிப்பு வெளிப்பட்ட பின்னர்) ஐந்திணைக்குரிய களவு தொடங்கும். அதுவரை தலைவனிடம் மட்டுமே காதல் உணர்வு இருப்பதால் இந்நான்கையும் கைக்கிளைக்குரிய படிநிலைகளாகவே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

### களவிற்கு உரிய கிளவித்தொகை

களவு என்னும் மறைமுகக் காதல் ஒழுக்கத்தை விரிவாக விளக்கும் இயல் களவியல் ஆகும். அவ்வியலில் இடம்பெறும் செய்திகளை ஒருங்கு தொகுத்து ஒரு நூற்பாவில் உணர்த்தியுள்ளார் நாற்கவிராசநம்பி. அதுவே ‘‘களவிற்கு உரிய கிளவித்தொகை’’ எனப்படுகிறது. (கிளவி - கூற்று) அந்நூற்பாவில் பதினேழு வகைப்பட்ட கிளவிகளைக் குறிப்பிட்டுள்ளார். அவையாவன:

1. இயற்கைப்புணர்ச்சி

2. வன்புறை

3. தெளிவு

4. பிரிவுழி மகிழ்ச்சி

5. பிரிவுழிக் கலங்கல்

6. இடந்தலைப்பாடு

7. பாங்கன் கூட்டம்

8. பாங்கிமதி உடம்பாடு

9. பாங்கியிற் கூட்டம்

10. பகற்குறி

11. பகற்குறி இடையீடு

12. இரவுக்குறி

13. இரவுக்குறி இடையீடு

14. வரைதல் வேட்கை

15. வரைவு கடாதல்

16. ஒருவழித் தணத்தல்

17. வரைவு இடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்

குறிப்பு: இப்பாடப்பகுதியில் இயற்கைப் புணர்ச்சி முதலாகப் பாங்கன் கூட்டம் வரை உள்ள ஏழு கிளவிகளுக்கான விளக்கங்கள் இடம் பெறுகின்றன. அடுத்தடுத்த பாடங்களில் மற்றையவை இடம் பெறுகின்றன.

**இயற்கைப் புணர்ச்சி**

இது களவிற்குரிய கிளவிகளில் ஒன்று. முதன் முதலாகத் தலைவனும் தலைவியும் தாமே கண்டு கூடுவது இயற்கைப் புணர்ச்சி எனப்படும். தெய்வம்

கூட்டுவிக்கத் தன்மனம் வேறாய் (திரிந்து) நின்ற தலைவன், தலைவியைக் கூடுவான். இதனை,

1. தெய்வத்தால் எய்துவது
2. தலைவியால் எய்துவது

என இருநிலைகளாகக் காணலாம்.

**தெய்வத்தால் எய்துவது**

1. கலந்து மகிழ்தல்
2. அழகினைப் பாராட்டல்
3. ஏற்ற அணிகளை அணிதல்

என்னும் மூன்றும் தெய்வத்தால் அடையப்பெறும் இயற்கைப் புணர்ச்சியின் விரிவுகள் ஆகும்.

**தலைவியால் எய்துவது**

இவையாவும் தலைவியால் நிகழும் இயற்கைப் புணர்ச்சியின் விரிவுகளாகும். **தலைவியால், தலைவன் கூடும் இயற்கைப் புணர்ச்சியானது**

1. தலைவிக்குத் தலைவன் தன் வேட்கையை உணர்த்துதல்.
2. தலைவனது வேட்கையைத் தலைவி முதலில் மறுத்தல்.
3. தலைவனது வேட்கையைத் தலைவி பின்னர் ஏற்று உடன்படுதல்.
4. அதன்பின் தலைவனும் தலைவியும் கூடி மகிழ்தல்.

என நான்கு பிரிவுகளை உடையது.

**தலைவியால் அடையும் இயற்கைப் புணர்ச்சியின் விரிவு**

இயற்கைப் புணர்ச்சியின் ஒரு வகை தலைவியின் மூலம் நிகழும் என்று கண்டோம். அக்கூட்டத்தினை ஒட்டி நிகழும் பல்வேறு செயல்பாடுகளை அகப்பொருள் இலக்கண நூல் தொகுத்துக் கூறியுள்ளது. அவையாவன :

1. இரந்துபின் நிற்றற்கு எண்ணல் : தலைவன் தலைவியைப் பணிந்து வேண்டி நிற்பதற்கு நினைத்தல்.

2. இரந்து பின்னிலை நிற்றல் : தலைவன் தலைவியைப் பணிந்து வேண்டி நிற்றல்.

3. முன்னிலையாக்கல் : தலைவன் தலைவியை முன்னிலைப்படுத்திக் கூறுதல்.

4. மெய் தொட்டுப் பயிறல் : தலைவன் தலைவியின் உடலைத் தொட்டு நெருங்கிப் பழகுதல்.

5. பொய் பாராட்டல் : தலைவன் தலைவியிடம் உள்ளதையும் இல்லாததையும் சேர்த்துக் கூறுதல்.

6. இடம் பெற்றுத் தழால் : தலைவன் தலைவி நிற்கும் இடத்திற்குச் சென்று அவளைத் தழுவ விரும்பிக் கூறுதல்.

7. வழிபாடு மறுத்தல் : மேற்கண்டவாறெல்லாம் தலைவன் கூறியதைத் தலைவி முழுவதுமாக மறுத்தல்

8. இடையூறு கிளத்தல் : தலைவி நாணிக்கண் புதைத்ததனால் (வெட்கப் பட்டுக் கண்ணை மூடியதால்) உண்டான துன்பத்தைத் தலைவன் கூறுதல்.

9. நீடு நினைந்து இரங்கல் : தலைவன் தலைவியைப் பற்றி நீண்ட நேரம் நினைத்துப் பார்த்து வருத்தப்பட்டுப் பேசுதல்

10. மறுத்து எதிர்கோடல் : தலைவி, முன்பு மறுத்ததனை மாற்றிக் கொண்டு தலைவன் கருத்தை ஏற்றல்.

11. வறிதுநகை தோற்றல் : தலைவியின் முகத்தில் சிறிது புன்னகை தோன்றுதல்.

12. முறுவல் குறிப்பு உணர்தல்: தலைவியின் புன்முறுவல் புலப்படுத்தும் குறிப்பைத் தலைவன் உணர்ந்து கொள்ளுதல்.

13. முயங்குதல் உறுத்தல் : தலைவி தன்னோடு சேர்வதற்கு உடன்பட்டதைத் தலைவன் வலியுறுத்திக் கூறுதல்.

14. புணர்ச்சியின் மகிழ்தல் : தலைவன் தலைவியோடு கூடிய புணர்ச்சியால் மகிழ்தல்.

15. புகழ்தல் : தலைவியின் அழகு நலத்தைத் தலைவன் புகழ்ந்துரைத்தல்.

**வன்புறை வகை**

இது களவியலுக்குரிய கிளவித் தொகைகளுள் ஒன்று. (வன்பு - வலிமை உறை - உறுத்தல்) வற்புறுத்திக் கூறுதல். தலைவி ஐயுற்றவழித் தலைவன் அவளது ஐயம் தீர உண்மையை வற்புறுத்திக் கூறுதல் வன்புறை எனப்படும். வன்புறை இருவகைப்படும். அவையாவன:

(1) ஐயம் தீர்த்தல்

(2) பிரிவு அறிவுறுத்தல்

**ஐயம் தீர்த்தல்**

தலைவிக்கு உண்டான ஐயத்தைத் தலைவன் தீர்த்து வைத்தல் ஐயம் தீர்த்தல் எனப்படும். இது,

1. கலைந்துபோன தன் அணிகலனைச் சரிசெய்து தலைவன் அணிவிக்க அது மாறுபட்டுள்ளதைக் கண்டு தோழி ஐயுறுவாள் என்று கருதிய தலைவியின் ஐயம் தீர்த்தல்.

2. மீளவும் வருவேன் என்று, தான் கொண்டுள்ள அளவுக்கதிகமான காதலைக் கூறித் தலைவன் ஐயம் தீர்த்தல்.

3. ‘விதி நம்மைப் பிரிக்காது’ என ஊழின் வலிமையைக் கூறித் தலைவியின் ஐயம் தீர்த்தல். என மூன்று உட்பிரிவுகளை உடையது.

**பிரிவு அறிவுறுத்தல்**

தலைவன் தன் பிரிவைத் தலைவிக்குத் தெரிவித்தல் பிரிவு அறிவுறுத்தல் எனப்படும். இது வன்புறையின் இரண்டாம் வகை. இது,

1. பிரியமாட்டேன் எனல்.
2. பிரிந்து மறுபடியும் திரும்பி வருவேன் எனல்.
3. தான் பிரிந்து செல்லும் இடம் அருகில்தான் உள்ளது எனல்.

தெளிவு என மூன்று உட்பிரிவுகளை உடையது.

இது களவிற்குரிய கிளவித்தொகைகளுள் ஒன்று. தலைவன் தனது நிலைப்பாட்டை வற்புறுத்தி உரைப்பது வன்புறை என்று கண்டோம். அந்த வன்புறை வார்த்தைகளை ஏற்று, ‘தலைவன் சொல்வது உண்மையானதுதான் ஏற்புடையதுதான்’ என்று தெளிந்து தலைவி ஆற்றியிருப்பது தெளிவு எனப்படும்.

**தலைவன் மாற்றம் தலைவி தேற்றம்**

**தெளிவாம் என்பர் (13)**

என்பது இலக்கண நூற்பா.

**பிரிவுழி மகிழ்ச்சியும் பிரிவுழிக் கலங்கலும்**

பிரிவுழி மகிழ்ச்சி, களவிற்குரிய கிளவித்தொகைகளுள் ஒன்று.

தலைவனும் தலைவியும் ஓரிடத்தில் களவு வழியில் கூடி மகிழ்ந்தனர். அப்புணர்ச்சிக்குப்பின் அங்கிருந்து தலைவி பிரிந்து செல்ல, அப்போது தலைவியோடு கூடிய கூட்டத்தை எண்ணி, தலைவன் மனமகிழ்வுடன் பேசுவது பிரிவுழி மகிழ்ச்சி எனப்படும்.

**பிரிவுழி மகிழ்ச்சியின் இரு நிலைகள்**

பிரிவுழி மகிழ்ச்சி இருநிலைகளை உடையது. அவையாவன:

1. செல்லும் கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லல்.

2. செல்லும் கிழத்தி செலவுகண்டு பாகனொடு சொல்லல்.

**1. செல்லும் கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லல்**

கூடிப்பிரிந்து செல்லும் தலைவியின் தன்மை கண்டு தலைவன் தன் மனத்தொடு பேசி மகிழ்வது.

**2. செல்லும் கிழத்தி செலவுகண்டு பாகனொடு சொல்லல்**

கூடிப்பிரிந்து செல்லும் தலைவியின் தன்மை கண்டு தலைவன் தன் பாகனிடம் பேசி மகிழ்வது.

**பிரிவுழிக் கலங்கல்**

இது களவிற்குரிய கிளவித்தொகைகளுள் ஒன்று. தலைவி பிரிந்து சென்றபோது தலைவன் மனம் கலங்கிப் பேசுவது பிரிவுழிக் கலங்கல் எனப்படும். இது,

- ❖ மருளுற்று உரைத்தல் - மயக்கம் கொண்டு பேசுதல்
- ❖ தெருளுற்று உரைத்தல் - தெளிவு பெற்றுப் பேசுதல்

என இருநிலைகளை உடையது.

**பிரிவுழிக் கலங்கல் - விரிவு**

மேற்கண்ட இரு நிலைகளின் அடிப்படையில் நிகழும் பிரிவுழிக் கலங்கல் என்னும் செயல்பாட்டின் விரிவாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார் நாற்கவிராசநம்பி.

1. தோழியர் கூட்டம், வழிவிட்டு வழிபடத்தக்கவளாக விளங்கும் தலைவியை நாம் கூடியது வியப்புக்குரியதே என மயங்கிக் கூறுதல்.

2. தோழியைத் தூதாகப் பெற்று இனியும் கூடி மகிழ்வேன் என்று கூறுதல்.

3. தலைவியின் அழகுப் பண்புகளைத் தலைவன் பாராட்டிக் கூறுதல்.

4. அத்தகு அழகியைப் பெற்றெடுத்த பெற்றோரை வாழ்த்துதல்.

5. தலைவன் இரவில் உறக்கமின்றி வருந்தி உரைத்தல்.

இவையாவும் பிரிவுழிக் கலங்கலின் விரிவுகளாகும்.

**இடந்தலைப்பாடு வகை**

இடந்தலைப்பாடு மூன்று வகைப்படும். அவையாவன:

- தெய்வம் தெளிதல்
- கூடல்
- விடுத்தல்

**தெய்வம் தெளிதல்**

முன்னே முதல்முறையாகத் தலைவியை நம்மோடு கூட்டி வைத்த தெய்வம் மறுபடியும் அதே இடத்தில் தலைவியை நம்மோடு சேர்த்து வைக்கும் என்று தலைவன் தெளிவுடன் உரைப்பது.

**கூடல்**

அவ்வாறே தலைவன், தலைவியைக் கூடி மகிழ்தல்.

**விடுத்தல்**

கூடி மகிழ்ந்த பிறகு தலைவியை அவளது தோழியர் கூட்டத்தின்பால் செல்லுமாறு தலைவன் அனுப்பி வைத்தல்.

**இடந்தலைப்பாட்டின் விரிவுச் செய்திகள்**

இம்மூவகைப்பட்ட இடந்தலைப்பாட்டு நிகழ்ச்சியையே ஐந்து நிலைகளாக விரிவுபடுத்தியும் வழங்குவர். அவையாவன:

1. தந்த தெய்வம் மீண்டும் தரும் எனச் செல்லுதல்

2. தன் முன்னே தலைவியைக் காணுதல்

3. கூடி மகிழ்தல்

4. புகழ்தல்

5. தோழியர் கூட்டத்தில் தலைவியைச் சேர்த்தல்.

**பாங்கன் கூட்டம்**

இது களவிற்குரிய கிளவிகளுள் ஒன்று.

தலைவன் - தலைவியின் முதல் கூட்டம்: இயற்கையாய் நிகழும்.

தலைவன் - தலைவியின் அடுத்த கூட்டம்: அதே இடத்தில் மீண்டும் சந்தித்து நிகழும்.

தலைவன் - தலைவியின் மூன்றாம் கூட்டம்: பாங்கன் எனப்படும் தோழன் மூலமாக நிகழும். அதனைப் பாங்கன் கூட்டம் என்பர்.

**பாங்கன் கூட்டத்தின் வகை**

இப்பாங்கன் கூட்டம் சார்தல், கேட்டல், சாற்றல், எதிர்மறை, நேர்தல், கூடல், பாங்கியோடு கூடி இருக்கச் செய்தல் என ஏழு வகைகளாக அமையும். அவற்றிற்கும் மேலாக 24 வகைப்பட்ட விரிவுகளையும் கூறியுள்ளார் அகப்பொருள் விளக்க நூலாசிரியர். அந்த 24 செய்திப் பிரிவுகளையும் மேற்கண்ட 7 வகைகளுக்கும் உரியவாறு பாகுபடுத்தியும் கூறியுள்ளார்.

சார்தல், கேட்டல், சாற்றல்

இம்மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய செயல்பாடுகளாகும்.

**சார்தல்** : தலைவன், பாங்கனிடம் சென்று சேர்தல்.

**கேட்டல்** : பாங்கன், தலைவனது வாட்டம் கண்டு, அதற்கான காரணம் கேட்டல்.

**சாற்றல்** : தலைவன், பாங்கனிடம் தன் வாட்டத்திற்கான காரணத்தைக் கூறுதல்.

**எதிர்மறை**

தலைவனது காதலைக் (களவை) கேட்டறிந்த பாங்கன் நினக்கு இது தக்கது அன்று என்று தலைவனிடம் இடித்துரைப்பது எதிர்மறை எனப்படும்.

இது பாங்கன் மறுத்துப் பேசுவது, தலைவன் அதற்கு விடை சொல்வது, பாங்கன் தலைவனைப் பழித்துப் பேசுவது, தலைவி மீது கொண்ட காமம் என்னால் தாங்க முடியாதது என்று தலைவன் கூறுவது முதலான விரிவுகளை உடையது.

**நேர்தல்**

தலைவன் தனது தாங்க இயலாத காதல் தன்மையை உணர்த்தினான். அதனை உணர்ந்த பாங்கன் தலைவனது கருத்துக்கு இசைந்து செயல்பட முடிவு செய்கிறான். அவனுக்காகத் தலைவியைச் சென்று கண்டு வருகிறான். இதுவே நேர்தல் எனப்படும்.

(நேர்தல் - தலைவனது கருத்துக்கு உடன்பட்டுச் செயல்பட முடிவு செய்தல்)

இது பல விரிவுக் கூறுபாடுகளை உடையது.

பாங்கன் தன் மனத்திற்குள் இரங்குதல்.

பாங்கன் தலைவனிடத்தில் இரக்கத்தைப் புலப்படுத்திப் பேசுதல்.

தலைவியின் உருவம், அவளைக் கண்ட இடம் முதலானவற்றைக் கேட்டறிதல்.

தலைவன் ‘தலைவியின் உருவம் இவ்வகைத்து - கண்ட இடம் இது’ எனக் கூறுதல். (இவ்வகைத்து ஸ்ரீ இன்ன தன்மையில் அமைந்தது)

‘தலைவ! நான் அவ்விடத்திற்குச் சென்று கண்டு வருகிறேன் கவலைப்படாதே’ என்று பாங்கன் கூறுதல்.

அவ்வாறே குறிப்பிட்ட அந்த இடத்திற்குப் பாங்கன் செல்லுதல்.

தலைவியை, குறிப்பிட்ட இடத்தில் பாங்கன் காணுதல்.

அவளது பேரழகைக் கண்ட பாங்கன், அறிவில்லாமல் தலைவனை இகழ்ந்து விட்டோமே என்று நெகிழ்ந்து பேசுதல்.

இத்தகு பேரழகியைக் கண்ட பின்னும் - காதல் வயப்பட்ட பின்னும் தலைவன் மீண்டும் வந்தது வியப்பிற்குரியது எனல்.

தலைவியைப் பற்றி வியப்பு மேலிட்டுப் பேசுதல்.

மீண்டு வந்து, தலைவி குறியிடத்தில் நிற்கும் நிலையைப் பற்றித் தலைவனிடம் கூறுதல்.இவையாவும் நேர்தல் என்பதன் விரிவுகளாகும்.

**கூடல்**

பாங்கன் மூலமாக அமைந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தலைவன் தலைவியைக் கூடி இன்புறுதல் கூடல் எனப்படும். இது,

தலைவன் செல்லுதல்

தலைவியைக் காணுதல்

புணர்ந்து மகிழ்தல்

புணர்ச்சியின்பின் தலைவியைப் புகழ்தல்

என நான்கு உட்கூறுகளை உடையது,.

**பாங்கிற் கூட்டல்**

பாங்கன் வாயிலாகத் தலைவியைக் கூடி மகிழ்ந்த தலைவன் ‘இனி நீ வரும்போது நின் உயிர்த்தோழியோடு வருக!“ என்று கூறி, தலைவியை அவளது தோழி இருக்கும் இடத்திற்கு அனுப்பி வைத்தல் பாங்கிற் கூட்டல் எனப்படும்.

**பாங்கி மதி உடன்பாடு - விளக்கம்**

பாங்கி (தோழி) எப்போதும் தலைவியுடன் இருப்பவள். உற்ற துணையாய், நட்புரிமை பூண்டு வாழ்பவள் எனினும் அவள் அறியாத வகையில் தலைவி ஒரு தலைவனோடு காதல் உறவு கொண்டாள்.

இயற்கைப் புணர்ச்சி, இடம் தலைப்பாடு, பாங்கன் கூட்டம் என்னும் மூன்று நிலைகளில் அக்களவு ஒழுக்கம் தொடர்ந்து நிகழ்ந்தது.

அக்களவு ஒழுக்கத்தின் காரணமாகத் தலைவியின் புறத் தோற்றத்திலும் செயல்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றைக் கண்ட தோழி அவை காதலால் ஏற்பட்டனவாக இருக்கலாம் என எண்ணுகிறாள். தன் அறிவோடு உடன்படுத்தி ஆராய்ந்து அ∴து உண்மையே என்ற முடிவுக்குத் தோழி வருகிறாள்.

இவ்வாறு தோழி தன் மதியோடு (அறிவோடு) உடன்படுத்தி ஆராய்ந்து முடிவு காண்பது பாங்கிமதி உடன்பாடு எனப்படும். இது மூன்று நிலைகளை உடையது. அவையாவன:

- ❖ முன்னுற உணர்தல்.
- ❖ குறையுற உணர்தல்.

இருவரும் உள்வழி அவன் வர உணர்தல்.

**முன்னுற உணர்தல்**

தலைவி தன் முன் வந்து நிற்க, அவளை உற்றுநோக்கிய தோழி, அவளின் காதல் உண்மையை உணர்தல் முன்னுற உணர்தல் எனப்படும்.

பாங்கற் கூட்டத்தின்போது தலைவனைக் கூடி மீண்ட தலைவி தோழி முன் வந்து நிற்பாள். அப்போது தலைவியின் வேறுபாட்டைக் கண்டு, களவு ஒழுக்கம் நிகழ்ந்துள்ளது என்ற உண்மையைத் தோழி அறிவாள். இதுவே முன்னுற உணர்தல் ஆகும். இது மூன்று உட்பிரிவுகளை உடையது.

1. ஐயப்படுதல்.
2. ஐயம் தீர்தல்
3. சொல்லால் ஆராய்தல்

என்பன அவை.

**ஐயப்படுதல், ஐயம் தீர்தல்**

தலைவியிடம் காணப்படும் மணம் (நாற்றம்), அவளது தோற்றத்தில் நிகழ்ந்துள்ள புதிய மாற்றம், தலைவி பின்பற்றும் புதிய செயல்கள் (ஒழுக்கம்),

உண்ணும் உணவின் அளவு குறைதல், தலைவி தன் செயலைத் தோழியிடம் மறைத்தல், தோழியர் கூட்டத்தை விட்டு அவ்வப்போது பிரிதல், குறிப்பிட்ட ஓரிடத்திலேயே எப்போதும் இருத்தல் (பயில்வு) முதலான ஏழு வகையிலும் தலைவியின் களவு ஒழுக்கம் பற்றிய ஐயம் தோழிக்கு ஏற்படும். அவற்றினைக் கொண்டே களவு உண்மையைப் பற்றிய ஐயம் தீர்தலும் நிகழும்.

குறிப்பு : உணவு குறைதல் ஐயத்தை ஏற்படுத்தும் : நோய்வாய்ப் படல் முதலான எந்தக் காரணமும் இன்றி உணவு குறையும்போது அது காதலால் (களவால்) நிகழ்ந்த மாற்றம் என்று ஐயம் தீர்ந்து, தெளிவும் ஏற்படும். இவ்வாறே மற்றவற்றையும் எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

**சொல்லால் ஆராய்தல்**

தோழி, தலைவியை நோக்கிச் சொல்லும் சொற்களால் அவளது களவு ஒழுக்கத்தை உணர முயல்வதும், உணர்ந்துள்ளதைச் சுட்டிக் கட்டுவதும் உண்டு. நீர்ச் சுனையைப் புகழ்தல், வியத்தல், தலைவியின் புற அழகு மாற்றத்தைப் புனைந்து உரைத்தல் என்பன போன்ற உரையாடல்கள் வழி, தலைவியின் களவு ஒழுக்கத்தைத் தோழி உணர்வாள்.

‘‘மலை அணங்கே! சிவந்த கண்ணும் வெளுத்த வாயும் இல்லை எனில் எங்கள் தலைவியும் உன்னைப் போன்றவளே’’ என்று தோழி கூறுவதாக வரும் தஞ்சைவாணன் கோவைப் பாடல் (எண். 67) இதற்குச் சான்றாகும். (கண் சிவப்பதும், வாய் வெளுப்பதும் களவுக் கூட்டத்தினால் தலைவிக்கு நிகழ்ந்த மாற்றம், அதைக் குறிப்பிட்டுச் சொல்லாடல் நிகழ்த்தினாள் தோழி)

**குறையுற உணர்தல்**

தலைவன் வந்து, தன் குறையைத் தோழியிடம் உரைக்க அதன் மூலம் தலைவன், தலைவியரின் களவு ஒழுக்கத்தைத் தோழி உணர்வது குறையுற உணர்தல் எனப்படும்.

தலைவன் தோழியிடம் சென்று நின்று, ஊர்- பெயர் வினவுவதும், கெட்ட (தொலைத்த) பொருள் ஒன்றைப் பற்றிக் கேட்பதும் அதன்வழித் தோழி தேர்ந்து தெளிவதும் இவ்வகைப்படும்.

'இக்காட்டிற்கு நான் மிகப் புதியவன்! தனியாக வந்துள்ளேன் உம் ஊர் எது?' எனத் தலைவன் கேட்பான். தோழி இதற்கு விடை தாராத போது,

பெயரேனும் உரைமின்களே! (தஞ்சைவாணன் கோவை-78) என்று தலைவன் கேட்பான்.

'அம்புபட்டுப் புண்பட்ட யானை இவ்வழி வந்ததா"? என்று கேட்பது கெடுதி வினவுதல் (கெட்ட அல்லது தொலைந்த பொருள் பற்றிக் கேட்டல்) ஆகும். (தஞ்சைவாணன் கோவை-72)

இவ்வாறெல்லாம் தலைவன் வினவும் வினாக்களைக் கொண்டு, தோழி உண்மை உணர்வாள்.

**இருவரும் உள்வழி அவன் வர உணர்தல்**

தலைவியும் தோழியும் ஒன்றாக ஓரிடத்து இருந்தபோது, அவ்விடத்துக்கு மாலையும் தழையும் எடுத்துக் கொண்டு தலைவன் வருவான். அதன்வழித் தலைவிக்கும், அங்கு வந்த தலைவனுக்கும் இடையே ஓர் உறவு இருப்பதைத் தோழி உணர்ந்து கொள்வாள். இதுவே இருவரும் உள்வழி அவன்வர உணர்தல் எனப்படும். இது பின்வரும் உட்பிரிவுகளை உடையது.

1. தலைவன் பரிசுப் பொருள் (கையுறை) கொண்டு வருதல்.
2. தலைவன் கெடுதி (தொலைந்தது) நிகழ்ந்தது பற்றி வினவுதல்.
3. தலைவனுக்குத் தோழி மறுமொழி கூறுதல்.
4. தலைவன் சென்ற பின்பு தலைவி முன்பாக அவனைத் தோழி எள்ளி நகையாடுதல்.

5. தோழி தன் அறிவாற்றலால் தலைவன் - தலைவியின் மனக்குறிப்பை ஆராய்ந்து கூறுதல்.

**பாங்கியிற் கூட்டம்**

பாங்கி (தோழி) வழியாகத் தலைவன் தலைவியைச் சேர்வது பாங்கியிற் கூட்டம் எனப்படும். தோழி, தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள களவு வழிப்பட்ட காதல் ஒழுக்கத்தை முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், இருவரும் உள்வழி அவன்வர உணர்தல் என்னும் மூவகையில் ஏதேனும் ஒன்றாலோ, பலவற்றாலோ உணர்ந்து தெளிவாள். பின் தலைவனது வேண்டுகோளை ஏற்று, தலைவியுடன் அவன் களவு ஒழுக்கத்தைத் தொடர்ந்திட வழிவகை காண்பாள். இதுவே பாங்கியிற் கூட்டம் எனப்படும்.

**பாங்கியிற் கூட்டத்தின் வகை**

பாங்கியிற் கூட்டமானது பன்னிரு வகைப்பாடுகளை உடையது. எனினும் அவற்றை வகுத்தும் தொகுத்தும் வழங்கும்போது கீழ்வருமாறு பாகுபடுத்தியுள்ளார் நூலாசிரியரான நாற்கவிராசநம்பி.

❖ இரந்து பின் நிற்றலும் சேட்படையும்.

❖ மடற் கூற்றும் மடல் விலக்கும்.

❖ குறை நேர்தலும் மடற்கூற்று ஒழிதலும்

❖ குறை நயப்பித்தலும் மறுத்தலும்

❖ குறை நயப்பித்தலும் நயத்தலும்

❖ கூட்டலும், கூடலும், ஆயங்கூட்டலும், வேட்டலும்

இவற்றுக்கான விளக்கங்களை இனிக் காண்போம்.

**இரந்து பின் நிற்றலும் சேட்படையும்**

தலைவன், தோழியிடம் சென்று நின்று தன் குறையைத் தீர்க்க வேண்டும் என்று சொல்வது இரந்து பின் நிற்றல் எனப்படும்.

தோழியோ தலைவனது வேண்டுகோளை உடனடியாக ஏற்காமல், மறுத்துவிடுவாள். அது சேட்படை எனப்படும். (உடன் சேர்க்காமல் தூர விடுதல் அல்லது அகற்றுதல் சேட்படை ஆகும். சேண் - நெடுந்தூரம்)

இவ்விரு பகுதிகளையும் ஒரே கூறாக்கி இவற்றுக்கென 20 உட்பிரிவுச் செய்திகளை வழங்குகிறது அகப்பொருள் இலக்கண நூல்.

இதனுள் தலைவன் உட்கோள் சாற்றல் முதலாக, பாங்கி ஆற்றுவித்து அகற்றுதல் ஈறாக 20 உட்பிரிவுகள் அடங்கும். அப்பிரிவுச் செய்திகளைக் கீழ்வருமாறு வரிசைப்படுத்தி விளங்கிக் கொள்ளலாம்.

தலைவன் தன் உள்ளத்தில் கொண்ட காதலைத் தோழியிடம் சொல்லுதல் - தோழி தங்கள் தலைவியின் குலப்பெருமை கூறி, இக்காதல் பொருந்தாது எனல்.

தோழி ஏதுமறியாதவள் போன்று தலைவனைப் பார்த்து, 'நீ எந்தப் பெண்ணிடம் காதல் கொண்டாய்?' எனல் - தலைவன் தான் காதல் கொண்ட தலைவியின் இயல்புகளை எடுத்தியம்புதல்.

தலைவன் 'தலைவி இல்லாமல் என் வாழ்வு இல்லை' எனல் - தோழி 'உன் குறையை நீயே சென்று தலைவியிடம் சொல்' எனல்.

தலைவி அறியாமை உடையவள் என்று தோழி கூறுதல் - தலைவன் அதை மறுத்து, தலைவியின் அறிவாற்றலைப் பற்றிக் கூறுதல்.

'உலக முறைப்படி சான்றோர் முன்னிலையில் தலைவியை மணந்து கொள்' என்று தோழி அறிவுறுத்துதல் - அதுகேட்ட தலைவன் 'போகும் என் உயிரை நீ முதலில் காப்பாற்று. பிறகு நான் நீ கூறும் முறைப்படி மணம் செய்வேன்' எனல்.

தலைவன் தான் கொண்டு வந்துள்ள (கையுறை) பரிசுப் பொருள் பற்றிப் புகழ்ந்து பேசுதல் - தோழி அதை வாங்க மறுத்துப் பேசுதல்.

ஆற்றாமை புலப்படுத்தித் தலைவன் பேசுதல் - அது கேட்ட தோழி ‘வருந்தாதே நாளை வா’ எனல்.

இவையாவும் முதற்பிரிவான இரந்து பின்னிற்றல், சேட்படை (சேண் ¸ படை) என்னும் இருவகைப்பட்ட செயல்பாடுகளுக்கும் உரிய உட்பிரிவுகளாகும்.

**மடற்கூற்றும் மடல் விலக்கும்**

தலைவன் தன் காதலைப் பலருக்கும் புலப்படுத்தி நிற்பது மடலேறுதல் எனப்படும். அவன் பனைமரப் பொருள்களால் வண்டியும் குதிரையும் போல உருவத்தைச் செய்து கொள்வான். ஒரு துணியில் தலைவியின் உருவத்தை ஓவியமாக எழுதி, கொடிபோல் கையில் பிடித்துக்கொண்டு நகரின் நடுப்பகுதியில் அக்குதிரையின் மேல் ஏறி அமர்வான். அமர்ந்து கொண்டு, தலைவன் தலைவிமீது தனக்குள்ள காதலைப் புலப்படுத்துவான். இது மடலேறுதல் ஆகும். இச்செயலைச் செய்வேன் எனத் தலைவன் கூறுவது மடற்கூற்று எனப்படும். அது வேண்டாம் என்று தோழி விலக்குவது (நீக்குவது) மடல் விலக்கு எனப்படும்.

இந்த இரண்டாம் கூறு இரந்து குறைபெறாது வருந்திய தலைவன் மடலே பொருள் என மதித்தல் முதலாகப் பாங்கி கொண்டு நிலை கூறல் ஈறாக ஏழு செய்திப் பிரிவுகளை உடையது.

மடலேறுவதைத் தவிர வேறுவழி இல்லை என்று தலைவன் தனக்குள்ளே கூறிக் கொள்ளுதல். அவ்வாறு மடலேறுவது காதல் கைவிடாத இளைஞர் செயல் எனப் பொதுப்படையாகக் கூறுதல். தானும் அவ்வாறே செய்ய நேரும் என்று தன்மீது ஏற்றிக்கூறுதல்.

‘நீ ஓவியமாகத் தீட்ட இயலாத பேரழகுடையவள் எங்கள் தலைவி’ எனத் தோழி கூறுதல் - ‘என்னால் தலைவியின் பேரழகை ஓவியமாக்கிட இயலும்’ என்று தலைவன்கூறுதல்.

மடலேறுதல் தக்கது அன்று என்று தோழி மறுத்துக் கூறுதல். முதலானவையே இரண்டாம் கூறு கூறும் செய்திகளாகும். இவற்றுள் தலைவன் கூற்றாக வருவன மடற்கூற்று ஆகும். தோழி கூற்றாக வருவன மடல் விலக்கு ஆகும்.

**குறை நேர்தலும் மடற்கூற்று ஒழிதலும்**

இது பாங்கியிற் கூட்டத்துச் செய்தியின் மூன்றாம் வகையாகும். இதனுள்ளும் இரு கூறுகள் இணைந்துள்ளன.

குறை நேர்தல் என்றால் தலைவன் வெளிப்படுத்திய செய்திகளை உணர்ந்து அவனுக்குள்ள மனக்குறையைத் தீர்த்துவைக்கத் தோழி உடன்படுதல் ஆகும். மடற்கூற்று ஒழிதல் என்பது, அவ்வாறு தோழி உடன்பட்டபின் இனி மடலேற மாட்டேன் என்று தலைவன் அச்செயலைக் கைவிடுதல் ஆகும்.

தலைவி இளமைத் தன்மை பாங்கி தலைவனுக்கு உணர்த்துதல் முதலாகக் கிழவோன் ஆற்றல் ஈறாக அமையும் ஒன்பது செய்திகளும் இப்பிரிவுக்குரியன.

தோழி தலைவியின் இளமை எழிலைத் தலைவனுக்கு உணர்த்துதல்- தலைவி நஞ்சு போன்ற விழியால் என் உயிரை வருத்தினாள் எனத் தலைவன் கூறுதல்.

'தலைவியிடம் சென்று உன்னைப் பற்றிச் சொல்வதே எனக்கு எளிதான செயல் அன்று' என்று தோழி கூறுதல் - 'நீ என்னைப் பற்றிச் சொல்லத் தொடங்கியதுமே ஆசைமேலிட உன்பால் அன்பு காட்டுவாள் தலைவி' என்று தலைவன் கூறுதல்.

'என்னை மறைத்து நீங்கள் இருவரும் கூடுவது எளிதன்று' என்று தோழி நகைத்துக் கூறுதல் - 'தோழியே! நீ ஆறுதல் கூறுவதற்குப் பதிலாகச் சிரித்துப் பேசுகிறாய். இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது' என்று தலைவன் கூறுதல்.

தோழி தலைவனுக்கு ஆறுதல் கூறிப் பரிசுப்பொருளை (கையுறையை) ஏற்றல் - தலைவன் தன் துன்பம் நீங்கிப் பேசுதல். இவையாவும் மூன்றாம் பிரிவுக்கு உட்பட்ட செய்திகளாகும்.

**குறை நயப்பித்தலும் மறுத்தலும்**

குறை - தலைவனுக்குள்ள மனக்குறை (தலைவியோடு சேர முடியாத நிலை)

நயப்பித்தல் - அக்குறையை முடித்து வைக்க விரும்பும் தோழி, தலைவிக்கும் அவ்விருப்பம் உண்டாக்க முயலுதல். அதற்கேற்பப் பேசுதல்.

மறுத்தல் - தலைவனுக்காகப் பரிந்து பேசும் தோழியின் கருத்துக்கு உடன்படாத தலைவி மறுத்துப் பேசுதல்.

இது இறைவன் தனக்குக் குறைநேர்பாங்கி இறைவிக்கு அவன் குறை உணர்த்துதல் முதலாக, கையுறை புகழ்தல் ஈறாக ஆறு செய்திப் பிரிவுகளை உடையது.

தலைவனுக்கு அவனது மனக்குறையைத் தீர்த்து வைப்பதாக உடன்பட்ட தோழி, அதன்பின் தலைவனது மனக்குறை இது எனத் தலைவியிடம் கூறுதல். தலைவனைப் பற்றி எதுவுமே அறியாதவள் போல, தலைவி, வேறு ஒரு கருத்தைப் புலப்படுத்திப் பேசுதல். (தோழி பேசியதற்குத் தொடர்பு இல்லாததுபோல் பதில் கூறுதல்)

தோழி 'தலைவன் இங்கு வந்ததை நான் கண்டேனே!" என்று நேரடியாகப் பேசுதல். மறுபடியும் தலைவி மறுத்து மொழிதல்.

'உனக்கு நான் வேறா? என்னிடம் ஏன் மறைக்கிறாய்?" என்று தோழி கேட்டல்.

தலைவன் கொண்டு வந்து தந்த பரிசுப் பொருள் (கையுறை) சூடத் தக்கதே அன்றி வாடத்தக்கது அல்லவே என்று தோழி புகழ்ந்து பேசுதல்.

இவையாவும் நான்காம் வகைப்பாட்டின் செய்திப் பிரிவுகள் ஆகும்.

**குறை நயப்பித்தலும், நயத்தலும்**

குறை நயப்பித்தல் - தலைவனின் மனக்குறையைத் தோழி ஏற்று உடன்படுதல்.

நயத்தல் - முதலில் மறுத்த தலைவியும் பின்னர் உடன்படுதல்.

தலைவனது மனக்குறையைத் தீர்க்க, தோழியிடம் முதலில் மறுத்த தலைவி பின்னர் உடன்படுகிறாள். இதுவே குறை நயப்பித்தலும், நயத்தலும் என்னும் ஐந்தாம் பிரிவாகும்.

இப்பகுதி, தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல் முதலாகக் கையுறை ஏற்றல் ஈறாக ஆறு செய்திப் பிரிவுகளை உடையது. அதற்குரிய விளக்கங்கள் வருமாறு:

தலைவன் தனது காமவேட்கையால் அடையும் துயரத்தை தோழி, தலைவியிடம் கூறுதல்.

'தலைவன் மீண்டும் வந்தால் என்னால் மறுக்க இயலாது' என்று தோழி கூறுதல்.

'தலைவன் இரந்து நிற்கவில்லை நம்மிடம் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து நிற்கிறான் - அவனது எண்ணம் வேறு' என்று தோழி கூறுதல்.

தோழி, தலைவியைக் கோபித்துக் கொள்ளுதல்.

தலைவி தன் மனதுக்குள் தோழியைக் கோபித்துக் கொள்ளுதல்.

தோழி மூலமாகத் தலைவன் கொடுத்தனுப்பிய கையுறையைத் தலைவி ஏற்றுக்கொள்ளுதல்.

**கூட்டல்-கூடல்-ஆயங்கூட்டல்-வேட்டல்**

தலைவனது மனக்குறையைத் தீர்க்குமாறு தோழி வேண்டுவாள் அதனை முதலில் மறுத்த தலைவி பிறகு உடன்படுவாள். அவ்வாறு உடன்பட்டபின் நிகழும் பாங்கியிற் கூட்டத்தின் செயல்பாடுகளை ஒரு கூறாக்கிக் கூட்டல், கூடல், ஆயம் கூட்டல், வேட்டல் என வரிசைப் படுத்தியுள்ளார் நாற்கவிராசநம்பி.

**கூட்டல்** : தோழி தலைவனிடம் தான் குறிப்பிட்ட குறியிடத்திற்குத் தலைவியை அழைத்துச் செல்லுதல்.

**கூடல்** : குறிப்பிட்ட அந்த இடத்தில் தலைவனும் தலைவியும் கூடி மகிழ்தல்.

**ஆயங்கூட்டல்:** கூடி மகிழ்ந்த பிறகு தலைவியை அழைத்து வரும் தோழி அவளைக் (தோழியர்) கூட்டத்தில் சேர்த்தல்.

வேட்டல் : தலைவனைத் தங்கள் ஊருக்கு ஒரு முறை வந்து விருந்து உண்டு மகிழ வேண்டும் என்று விரும்பி அழைத்தல்.

இவை நான்கும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. தோழி வழியான கூட்டத்திற்குத் தலைவி ஒப்புக்கொண்ட பின் அடுத்தடுத்து நிகழக்கூடியவை. எனவே ஒன்றாக இணைத்துக் காட்டியுள்ளார் நாற்கவிராசநம்பி. இது பாங்கியிற் கூட்டத்தின் இறுதி வகைப்பாடு ஆகும். இது பதின்மூன்று செய்திப் பிரிவுகளை உடையது.

தலைவி கையுறை (பரிசுப்) பொருளை ஏற்றுக் கொண்டதைத் தோழி தலைவனிடம் கூறுதல்.

தலைவன் வந்து சந்திப்பதற்குரிய இடத்தைத் தோழி அறிவித்தல்.

அந்த இடத்திற்குத் தலைவியை அழைத்துச் செல்லுதல்.

குறியிடத்துத் தலைவியை விட்டுவிட்டுத் தோழி திரும்புதல்.

தலைவி, தலைவனுக்கு முன்பாகத் தோன்றுதல்.

இருவரும் கூடி மகிழ்தல்.

தலைவியைத் தலைவன் புகழ்தல்.

தலைவன் தோழியர் கூடியிருக்கும் இடத்திற்குச் செல்லுமாறு தலைவியை அனுப்பி வைத்தல்.

பின்னர் அங்கு வந்த தோழி ஏதும் அறியாதவள் போல் தன்னிடம் உள்ள கையுறைப் பொருளைத் தலைவியிடம் காட்டுதல்.

தோழி தம் பாங்கியர் கூட்டத்தில் தலைவியையும் கொண்டு சேர்த்தல்.

திரும்பி வந்த தோழி தலைவனைப் பார்த்து ‘இனி நீ தலைவியை மறவாது இருக்க வேண்டும்’ என்று ஓம்படைக்கிளவி கூறுதல்.

தலைவனைத் தங்கள் ஊருக்கு வந்து தங்கிச் செல்லுமாறு தோழி வேண்டுதல். (இது பகற்குறியை நீக்கி இரவுக்குறிக்கு வழிவகுப்பது ஆகும்)

தலைவியும் தோழியும் விருப்பத்துடன் வழங்கும் ஊன் உணவு சிறந்தது எனத் தலைவன் கூறுதல்.

''வெண்ணெய் போன்ற மான் கறியும், பசிய தேனும் இளகிய பொன் போன்ற தினை அரிசிச் சோறும் எம்போன்ற விருந்தினர்க்கு இனிய அமுதம் ஆகும்'' என்று தஞ்சைவாணன் கோவை நூலில் ஒரு தலைவன் விருந்து விரும்பிப் பாடுகிறான்.

**பகற்குறி**

தலைவனும் தலைவியும் சந்தித்துக் கொள்ளும் இடம் குறியிடம் எனப்படும். அவர்கள் பகற்பொழுதில் சந்திக்கும் இடம் பகற்குறி எனப்படும். அவ்வாறே இரவுப் பொழுதில் சந்திக்கும் இடம் இரவுக்குறி ஆகும்.

**குறி இடையீடு**

பகலிலோ, இரவிலோ தலைவன் தலைவியைச் சந்திப்பதற்காகக் குறிப்பிடப்பட்ட இடத்தில் சந்திக்க முடியாதபடி இடர்ப்பாடுகள் ஏற்படும். அதற்குக் குறி இடையீடு என்று பெயர். பகற்குறியிலும், இரவுக்குறியிலும் வெவ்வேறு காரணங்களால் இந்த இடர்ப்பாடு ஏற்படலாம்.

**பாங்கியிற் கூட்டத்தில் அமையும் பகற்குறி**

பகற்குறியில் தலைவன் தலைவியைச் சந்திப்பது, பெரும்பாலும் தோழி வழியாக நிகழும். எனவே, பாங்கியிற் கூட்டத்துக்குரியதாக இறுதியில் இடம் பெற்ற கூட்டல்- கூடல்- ஆயங்கூட்டல் - வேட்டல் என்னும் நான்கும் பகற்குறியின் வகை என்பார் நாற்கவிராசநம்பி.

**ஒருசார் பகற்குறியின் வகை**

'ஒருசார் பகற்குறியின் வகை' என்ற தலைப்பின் கீழ் மேலும் மூன்று பகற்குறி வகைப்பாடுகளை அகப்பொருள் விளக்க நூலாசிரியர் அமைத்துள்ளார். அவை:

**இரங்கல்** : தலைவன் பிரிவிற்குத் தலைவி வருந்துதல் தோழியும் புலம்புதல்.

**வன்புறை** : தோழி, தலைவியை இடித்துரைத்தல் (அறிவுரை கூறுதல்)

**இற்செறிப்பு உணர்த்தல்** : தலைவி வெளியே வரமுடியாதபடி வீட்டுக் காவல் ஏற்பட்டதைத் தோழி தலைவனிடம் கூறுதல்.

**ஒருசார் பகற்குறியின் விரிவு**

இரங்கல் - வன்புறை - இற்செறிப்பு உணர்த்தல் என மூன்று வகைப்பட்ட 'ஒரு சார் பகற்குறி' யானது 'கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் பொழுது கண்டு இரங்கல்' முதலாக, 'கிழவோன் தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தல்' ஈறாக, 14 செய்திப் பிரிவுகள் உடையது. அப்பிரிவுகளுக்கான விளக்கத்தை இனிக் காண்போம்.

பகற்குறியில் அதற்குரிய இடத்துக்கு வந்து தலைவன் தலைவியைப் புணர்ந்து, பிரிந்து சென்ற பிறகு தலைவி மாலைப் பொழுதைக் கண்டு வருந்திப் பேசுதல்.

**தோழி புலம்பிப் பேசுதல்.**

பகற்குறிக்குத் தலைவன் வருவது தாமதம் ஆகும் போதும், தலைவி மனம் வருந்திப் பேசுதல் - 'நீ வருந்துவது முறையன்று' என்று தோழி தலைவியிடம் இடித்துரைத்தல்.

தலைவி தோழி மீது வெறுப்புற்று அவளை நேருக்கு நேர் நோக்காமல் புறமொழியாகப் பேசுதல் - அது கேட்ட தோழி தலைவியை மகிழ்வுடன் உபசரித்து அவளுடைய வெறுப்பை நீக்க, அதன் பின் மீண்டும் தலைவி பேசுதல்.

**தலைவியை அச்சுறுத்தி, தோழி பேசுதல்.**

தலைவனை விட்டுப் பிரியமுடியாத தன்மையை எண்ணித் தலைவி தனக்குள் பேசுதல்.

**தலைவன் வருவதைத் தோழி அறிவித்தல்.**

தலைவன் குறியிடத்தில் வேலி ஓரமாக வந்து நிற்க அவன் உணரும்படி தலைவிக்கு உள்ள வீட்டுக் காவலைத் தோழி அறிவித்தல்.

தலைவன் வந்து நிற்க அதை அறியாதவள் போலத் தோழி தலைவியிடம் பேசுதல். (முன்னிலைப் புறமொழி)

தலைவன் வந்து நிற்க அவனுக்கு முன் தமது வீட்டுக் காவலை (இற்செறிப்பைத்) தோழி நேரடியாகச் சொல்லுதல்.

அதனைத் தொடர்ந்து தோழி தலைவனிடம் 'எம்மை மறவாமை வேண்டும்' என்று ஓம்படையாகப் பேசுதல். (ஓம்படை ஸ்ரீ பாதுகாப்பு மறவாமை)

**தலைவன் தன் நெஞ்சோடு தானே பேசுதல்.**

இவை யாவும் ஒருசார் பகற்குறியின் விரிவுச் செய்திகள் ஆகும்.

**பகற்குறி இடையீடு**

தலைவனும் தலைவியும் பகற்பொழுதில் சந்தித்துக் கூடி மகிழும் இடம் பகற்குறி எனப்படும். அவ்வாறு பகற்குறியில் கூடி மகிழ்வதற்கு ஏற்படும் தடை பகற்குறி இடையீடு எனப்படும்.

**பகற்குறி இடையீட்டு வகை**

பகற்குறி இடையீடு மூன்று வகைப்படும்.

**விலக்கல்** : தலைவனும் தலைவியும் பகற்குறிக்கு உரிய இடத்திற்கு வருவதைத் தோழி விலக்குதல் (தடுத்தல்) விலக்கல் எனப்படும்.

**சேறல்** : தோழி தலைமகளை அழைத்துக் கொண்டு குறிப்பிட்ட இடத்தை விட்டு வேறு இடம் சென்று சேர்வது சேறல் எனப்படும்.

**கலக்கம்** : தோழியால் குறி விலக்கித் தலைவன் தலைவியர் பிரிந்த பிறகு, இருவரும் மனம் கலங்குதல் கலக்கம் எனப்படும்.

**பகற்குறி இடையீட்டின் விரிவு**

பகற்குறி தடைப்படுதலே இடையீடு எனப்பட்டது. அது இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல் முதலாகக் குறுந்தொடி வாழும் ஊர் நோக்கி மதிமயங்கல் ஈறாக 7 பிரிவுகளை உடையது. அவற்றுக்கான விளக்கம் வருமாறு:

தலைவனைப் பகற்குறி இடத்திற்கு வரவிடாமல் தோழி விலக்குதல்.

தலைவியைப் பகற்குறி இடத்திற்கு வரவிடாமல் தோழி விலக்குதல்.

தான் விளையாடும் இடத்தைப் பார்த்துத் தலைவி மயங்கியும் தயங்கியும் நிற்றல்.

அந்த விளையாட்டு இடத்தை விட்டு நீங்கித் தலைவியை அழைத்துக் கொண்டு தோழி தம் ஊர் செல்லுதல்.

பிறகு ஓர் நாள் தலைவன் தமது சந்திப்பு இடம் (குறியிடம்) பக்கமாக வந்து நின்று வருந்துதல்.

தலைவியின் காவல் இல்லாத, தினைப் புனத்தைப் பார்த்துத் தலைவன் வருந்துதல்.

தலைவியின் சொந்த ஊர் நோக்கித் தலைவன் மதிமயங்கிப் போதல் இவையே பகற்குறி இடையீட்டின் விரிவுகளாகும்.

**இரவுக் குறி**

தலைவனும் தலைவியும் இரவு நேரத்தில் களவில் சந்தித்துக் கூடி மகிழும் இடம் இரவுக்குறி எனப்படும்.

**இரவுக் குறியின் வகை**

இரவுக்குறி ஒன்பது வகைப்படும். அவையாவன :

**1. வேண்டல்** : தலைவன் தலைவியை மறுபடியும் சந்திக்க விழைந்து தோழியிடம் இரவுக்குறி வேண்டிப் பேசுதல். அச்செய்தியைத் தோழி தலைவியிடம் கூறுதல்.

**2. மறுத்தல்** : தோழியும், தலைவியும் தலைவனது வேண்டுகோளை மறுத்து விடுதல்.

**3. உடன்படுதல்** : தோழியும், தலைவியும் தலைவனது வேண்டுகோளை ஏற்று இரவுக்குறிக்கு உடன்படுதல்.

**4. கூட்டல்** : தோழி தலைவியை அழைத்துச் சென்று இரவுக்குறிக்குரிய இடத்தில் விட்டு வருதல்.

**5. கூடல்** : தலைவனும் தலைவியும் இரவுக்குறி இடத்தில் கூடி மகிழ்தல்.

**6. பாராட்டல் :** இரவுக்குறியில் நிகழ்ந்த புணர்ச்சியின் பின் தலைவன் தலைவியைப் புகழ்தல். தலைவன் தந்த பரிசினைத் தோழி புகழ்தல்.

**7. பாங்கிற் கூட்**டல் : இரவுக்குறியில் கூடி மகிழ்ந்த தலைவன் காத்திருந்த தோழியிடம் தலைவியை ஒப்படைக்க, அவள் தலைவியை இல்லத்திற்கு அழைத்துச் செல்லுதல்.

**8. உயங்கல்** : இரவுக்குறியில் சந்திப்பதற்குத் தலைவன் வரும் வழியில் உள்ள இடையூறுகளை எண்ணித் தலைவி வருந்துதல். அதைக் கண்டு தலைவனும் வருந்துதல். (உயங்கல் - வருத்தம்)

**9. நீங்கல்** : தோழி தலைவியைக் குறியிடத்தில் விட்டு விட்டு நீங்குதலும், தலைவன் தலைவியைக் கூடிப் பின் நீங்குதலும் நீங்கல் எனப்படும்.

**இரவுக்குறியின் விரிவுகள்**

தலைவனும் தலைவியும் இரவில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் சந்தித்துக் கூடி மகிழ்வது இரவுக்குறி என்றும், அது ஒன்பது வகைகளை உடையது என்றும் அறிந்தோம். அதுவே 27 விரிவுபட்ட செயல்களாகவும் விளக்கப்படுகிறது. அவற்றுள் முதன்மையான செய்திப் பிரிவுகளை இனிக் காண்போம்.

தலைவன் இரவுக்குறியை விரும்புதல்.

தலைவன் வரும்வழி இரவில் வர ஏற்றதன்று எனத் தோழி கூறுதல் - தலைவனோ தான் வரும் வழி எளிதானது என வலியுறுத்தல்.

தலைவனும் தோழியும் அவரவர் நாட்டு அணிகலன் பற்றியும் அதன் சிறப்பையும் பேசுதல்.

தோழியின் கருத்தை முதலில் உடன்படாத தலைவி தன் நெஞ்சோடு பேசுதல் ' பிறகு உடன்பட்டுத் தோழியிடம் பேசுதல்.

தலைவி இரவுக்குறி உடன்பட்டதை, தோழி தலைவனிடம் கூறுதல்.

தாய் உறங்கிவிட்டாளா என்பதைத் தோழி கண்டறிதல்.

தலைவன் வந்திருப்பதைத் தோழி தலைவியிடம் கூறுதல்.

தலைவியைக் குறியிடத்துக்குத் தோழி அழைத்துச் செல்லுதல். அங்கு விட்டுவிட்டுத் திரும்புதல்.

தலைவன் தலைவிக்கு முன் தோன்றுதல்.

வரும் வழியின் இடர்ப்பாடு கூறித் தலைவி வருந்துதல் ' அவளைத் தலைவன் தேற்றுதல்.

ஹபுணர்தல் ' அதன்பின் புகழ்தல்.

'இரவுக்குறியில் இனி வராதே' என, தலைவி தலைவனைத் தடுத்தல்.

தலைவன் தலைவியை அவளது வீட்டிற்குச் செல்லவிடுத்தல்.

தோழி தலைவியை மீளவும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லுதல்.

தோழி தலைவனை இரவுக்குறி விலக்குதல் (தடுத்தல்) - தோழியின் சொல் கேட்டுத் தலைவன் மயங்குதல் - தோழி தலைவனிடம் தலைவியின் மனத்துயர் கூறுதல்.

தலைவன் சென்று தன் இருப்பிடம் சேருதல்.

**இரவுக்குறி இடையீடு**

தலைவன் தலைவியை இரவு நேரத்தில் சந்திப்பது இரவுக்குறி எனப்படும். அவ்வாறு இரவுக்குறியில் சந்திப்பது சில காரணங்களால் தடைப்படும். அதனை இரவுக்குறி இடையீடு என்பர்.

**இரவுக்குறி இடையீட்டு வகை**

இரவுக்குறி இடையீட்டை இரண்டாக வகைப்படுத்துவர். அவையாவன:

1. அல்லகுறி,
2. வரும் தொழிற்கு அருமை

**அல்ல குறி**

இரவுக்குறியில் சந்திக்க வரும் தலைவன் தன் வருகையை அறிவிக்கச் சில செயல்பாடுகளை நிகழ்த்துவான். அவை அடையாளக் குறியீடுகள் ஆகும். பறவை போல ஒலி எழுப்புதல், தண்ணீரில் கல் எறிதல், இளநீரைப் பறித்துப் போடுதல் போன்ற செயல்பாடுகளில் ஏதேனும் ஒன்றை நிகழ்த்தி, தலைவன் தன் வருகையை உறுதி செய்வான். அதை உணர்ந்து தலைவியும் குறியிடத்திற்குச் சென்று கூடுவாள். சிலசமயம் மேற்சொன்ன அடையாளச் செயல்பாடுகள் வேறு காரணத்தினால் அல்லது வேறு ஒன்றினால் அல்லது இயல்பாக நிகழ்ந்து விடுவது உண்டு. ஆனால் தலைவியோ அது தலைவன் நிகழ்த்திய அடையாளமே எனக் கருதிக் குறியிடத்திற்குச் சென்று, தலைவனைக் காணாது திரும்பி விடுவாள். தலைவனும் அவ்வாறே வந்து தலைவியைக் காணாது, காரணமும் புரியாது திரும்பி விடுவான். இதுவே அல்லகுறிப்படுதல் எனப்படும்.

**அல்லகுறிப்படுதல் - விரிவுச் செய்திகள்**

இறைவிக்கு இகுளை இறைவு உணர்த்துவழி தான் குறி மருண்டமை தலைவி அவட்கு உரைத்தல் (இறைவி = தலைவி இகுளை = தோழி) முதலாக என்பிழைப்பு அன்று என்று இறைவி நோதல் ஈறாக அல்லகுறிப்படுதல் பற்றிய விரிவுச்செய்திகள் 12 உள்ளன. அவற்றை இனிக் காண்போம்.

தலைவன் வருகையைத் தோழி தலைவிக்குச் சொல்லுதல் - தனக்கு அல்லகுறிப்பட்டது என்று தோழியிடம் தலைவி கூறுதல்.

தலைவன் தீங்கு செய்தான் எனத் தோழி கூறுதல்.

அல்லகுறிப்பட்டது அறியாத தலைவன், தலைவியைக் காணாமல் வருந்தித் திரும்புதல் முதலியவாகும்.

**வரும்தொழிற்கு அருமை**

இரவுக்குறியில் தலைவியைக் காணத் தலைவன் வருவான். அப்படி வரும் வழியில் சில இடையூறான நிகழ்ச்சிகள் நிகழும். அதனால் இரவில் வரும் செயல் எளிதாக இருக்காது. அரிதாகவே அமையும். இதையே வரும்தொழிற்கு அருமை என்பர்.

**வரும் தொழிற்கு அருமையின் விரிவுச் செய்திகள்**

இப்பிரிவுக்குரிய விரிவுச் செய்திகள் 7 ஆகும். அவையாவன:

1. தாய் துஞ்சாமை : தலைவியின் தாய் உறங்காது இருத்தல்.
2. நாய் துஞ்சாமை : ஊரிலிருக்கும் நாய் உறங்காது இருத்தல்.
3. ஊர் துஞ்சாமை : தாயும் நாயும்துயின்றாலும் ஊரில் உள்ளவர் துயிலாது இருத்தல்.
4. காவலர் துஞ்சாமை: இரவுக்காவல் புரியும் நகரக் காவலர்கள் துடியடித்துக் கொண்டு எதிரில் வருதல்.
5. நிலவு வெளிப்படுதல்: தலைவன் இரவுக்குறியில் வருவதற்கு இடையூறாக ஒளி வீசும் நிலவு வெளிப்படுதல்.
6. கூகை குழறுதல் : கோட்டான் குரல் எழுப்ப அதுகேட்டுத் தலைவி அஞ்சுதல்.
7. கோழி குரல் காட்டுதல்: தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் இடையூறாகக் கோழி குரல் எழுப்புதல்.

**வரைதல் வேட்கை**

வரைவு - திருமணம் வரைதல் - வரைந்து கொள்ளுதல் திருமணம் செய்து கொள்ளுதல்.

களவு வாழ்க்கையில் இருந்து மாறி, தலைவனும் தலைவியும் திருமணம் புரிந்து கொண்டு வாழ விரும்புதல் வரைதல் வேட்கை எனப்படும்.

**வரைதல் வேட்கையின் வகை**

வரைதல் வேட்கை மூன்று காரணங்களால் ஏற்படும். அவையாவன:

1. அச்சம்
2. உவர்த்தல்
3. ஆற்றாமை

**1.அச்சம்**

தலைவன் தலைவியை அடைவதற்கு இடையூறான நிகழ்ச்சிகள் சில நடைபெறும். அவற்றால் தலைவனது காதல் உறவு விடுபட்டுப் போய்விடுமோ என்ற பயம் தலைவிக்கு ஏற்படும். இதையே அச்சம் என்பர்.

**2. உவர்த்தல்**

உவர்த்தல் என்றால் (வெறுத்தல்) என்று பொருள். தோழி, தலைவனை - அவனது வருகையை வெறுத்துக் களவு ஒழுக்கத்திற்கு உதவி புரியாமல் இருப்பாள். அது உவர்த்தல் எனப்படும். அதன்பின் களவு முறையில் தொடர்ந்து பழக வாய்ப்பில்லாமல் போகும். எனவே தலைவனுக்கு வரைதல் வேட்கை ஏற்படும்.

**3. ஆற்றாமை**

தோழி உடன்படாமல் வெறுத்தல் காரணமாகத் தலைவனது வருகை தடைப்படும். அவனது பிரிவைத் தாங்கிக் கொள்ள இயலாமல் தலைவி வருந்துவாள். அதுவே ஆற்றாமை எனப்படும். தலைவிக்கு நிகழும் ஆற்றாமை அவள் மனத்தில் திருமண விருப்பத்தை ஏற்படுத்தும்.

**வரைதல் வேட்கையின் விரிவுச் செய்திகள்**

அச்சம், உவர்த்தல், ஆற்றாமை என மூவகைப்படும் வரைதல் வேட்கை 18 வகையான விரிவுச் செய்திகளை உடையது.

பருவரல் வினவிய பாங்கிக்கு இறைவி அருமறை செவிலி அறிந்தமை கூறல் முதலாக, குரவரை வரைவு எதிர்கொள்ளுவித்தல் ஈறாக அமையும் பதினெட்டும் வரைதல் வேட்கையின் விரிவுகளாகும். இப்பதினெட்டையும் மேற்கண்ட மூவகைக்கு ஏற்பப் பிரித்துக் காட்டுவர்.

**அச்சத்திற்குரியவை**

தலைவியிடம், 'உனக்கு ஏற்பட்ட துன்பம் யாது?' எனத் தோழி கேட்ட போது, 'அருமை வாய்ந்த நம் களவு ஒழுக்கம் செவிலிக்குத் தெரிந்துவிட்டது' என்று தலைவி கூறுதல்.

தலைவன் வரும் வழியில் உள்ள இடர்ப்பாடுகளைப் பற்றித் தோழியிடம் தலைவி கூறுதல்.

ஊரில் உள்ளவர்கள் பழிதூற்றும் செயல் (அலர்) காரணமாக எழுந்த அச்சத்தால் தலைவி தோழியிடம் பேசுதல்.

தலைவன் வரும்வழி பற்றிய அச்சத்தைத் தலைவி, தோழியிடம் உரைத்தல்.

தலைவன் வரும் வழியை விலக்குமாறு (தவிர்க்கும் படி) தோழியிடம் தலைவி கூறுதல்.

தலைவன் தன்னைக் காணவரும் இரவு நேரச் சந்திப்பைத் தடுத்து நிறுத்துமாறு (விலக்குமாறு) தலைவி தோழியிடம் கூறுதல்.

தாய் வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்துகிறாள் என்பதைச் சுட்டிக் காட்டித் தலைவன் வருவதைத் தடுத்து நிறுத்துமாறு தோழியிடம் தலைவி கூறுதல். (வெறியாடல் : தலைவி ஏதேனும் தெய்வம் காரணமாக அச்சம் கொண்டிருப்பாள் அதனால் அவள் உடலில் மெலிவு ஏற்பட்டுள்ளது எனக் கருதித் தாய் அச்சம்

தெளிவிக்க முற்படுவாள். அதற்காக அவள், முருகக் கடவுளின் உணர்வு மேல் எழும் வேலனிடம் சென்று வேண்ட வேலன் (முருக வழிபாட்டினன்) தெய்வமேறிய நிலையில் கூறும் நிகழ்வு.)

மாற்றார் மணம் பேச வருவதனைத் தடுத்து நிறுத்துமாறு தோழியிடம் தலைவி கூறுதல்.

அச்சம் இவ்வாறான காரணங்களால் உண்டாகும். எனவே (அச்சம் காரணமாக), திருமணத்தை விரைவில் நடத்தி முடிக்க வேண்டும். என்னும் எண்ணம் ஏற்படும்.

**உவர்த்தலுக்கு உரியவை**

தோழி, தலைவனைப் பழித்துரைத்தல்.

தோழி, தலைவியிடம் 'நின்குறையைத் தலைவனிடம் நீயே சொல்' எனக் கூறுதல்.

**ஆற்றாமைக்குரியவை**

தலைவனது ஊருக்குச் சென்றுவரத் தோழி உடன்படுதல்.

'தலைவன் நம்மைப் பொருட்படுத்தாமல் இருப்பது, நம் ஊழ்வினைப்பயனே' (தலைவிதியே) என்று தலைவி கூறுதல்.

தலைவன் வந்து கூடியதாகக் கண்ட கனவினைத் தலைவி தோழியிடம் கூறுதல்.

பிரிவால் தன் அழகு நலன் அழிந்ததைத் தோழியிடம் தலைவி கூறுதல்.

தலைவனிடம் சென்று தன் துன்பத்தைக் கூறுமாறு தலைவி தோழியிடம் வேண்டுதல்.

மிகுந்த காமத்தினால் துயருற்றுத் தலைவி பேசுதல்.

பிரிவைத் தாங்க முடியாமல் செயலற்ற தன்மையுடன் தலைவி தனக்குத் தானே பேசுதல்.

‘தலைவனது உறவினரை, வரைவு பற்றிப் பேச வருமாறு ஏற்பாடு செய்’ என, தலைவி தோழியிடம் கூறுதல்.

**வரைதல் வேட்கையின் காரணங்கள் - ஒரு தொகுப்பு**

வரைதல் வேட்கையின் விரியாக நாம் மேலே கண்ட செய்திகளின் வழியாக, வரைவு நிகழ்வதற்குரிய - அல்லது - திருமணத்தை விரும்புவதற்குரிய காரணங்களாகப் பின் வருவனவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

செவிலித்தாய் களவு பற்றி அறிதல்.

தலைவன் வரும் வழியில் உள்ள இடர்ப்பாடுகள்.

குறிஇடையீடு, அல்ல குறிப்படுதல், குறிவிலக்குதல் - இவற்றால் ஏற்பட்ட இடைவெளி.

தலைவனைப் பிரிந்திருக்க இயலாத தலைவியின் தன்மை.

களவு பற்றிப் பிறர் பழி தூற்றுதல். (அலர்)

தாய் நிகழ்த்திய வேலன் வெறியாட்டு.

மாற்றார் மணம் பேச வருதல்.

வரைவு கடாதல் (திருமணம் செய்து கொள்ள வேண்டுதல்)

களவு வாழ்க்கையைத் தொடர வழியின்றி - காதல் உறவு நிலைக்க வழிதேடும் தலைவியும் தோழியும் வரைவு (திருமணத்தின்) மீது விருப்பம் கொள்வர். அவ்விருப்பத்தைத் தலைவனிடமும் புலப்படுத்தி வலியுறுத்துவர். அவனை நேரடியாகவோ, குறிப்பாகவோ மணம் செய்து கொள்ளுமாறு கேட்பர். இதுவே வரைவு கடாதல் எனப்படும்.

**வரைவு கடாதலின் வகை**

தலைவனை மணம் செய்து கொள்ளுமாறு வேண்டும் வரைவு கடாதல் நான்கு வகைப்பாடுகளை உடையது. அவையாவன:

1. பொய்த்தல்
2. மறுத்தல்
3. கழறல்
4. மெய்த்தல்

**1. பொய்த்தல்**

தலைவன் தலைவியை மணந்து கொள்ளும்படி செய்ய நினைத்த தோழி தலைவனிடம் பொய்யான சில செய்திகளைத் தானே புனைந்து கூறுவாள். இது பொய்த்தல் எனப்படும்.

**பொய்த்தலுக்கு உரியவை**

தலைவியின் களவு ஒழுக்கம் பற்றிச் செவிலி வினவியதாகவும், ஆனால், தான் அதை மறைத்துப் பேசியதாகவும் தோழி கூறுதல்.

ஊரார் தலைவியைத் தூற்றும் பழிச்சொல் (அலர்) மிகுந்துவிட்டது எனல்.

தாய், களவு ஒழுக்கத்தை அறிந்து கொண்டாள் எனல்.

தாய், வெறியாட்டு நிகழ்த்தும் வேலனைக் கொண்டு உண்மையறிய முயன்றாள் எனல்.

அயலார், தலைவியைப் பெண் கேட்டு வந்தனர் எனல்.

**2. மறுத்தல்**

தலைவன் பகற்குறி அல்லது இரவுக்குறியில் தலைவியைச் சந்திக்க வருவதைத் தோழி வெளிப்படையாகவோ குறிப்பாகவோ மறுத்துப் பேசுதல் மறுத்தல் எனப்படும்.

**மறுத்தலுக்கு உரியவை**

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வந்த தலைவனை வேறு ஒரு நேரத்தில் வருக என்று திருப்பி அனுப்புதல்.

பகலில் வரும் தலைவனை இரவில் வா எனல்.

இரவில் வரும் தலைவனைப் பகலில் வா எனல்.

தலைவனைப் பகலிலும் இரவிலும் வா எனல்.

தலைவனைப் பகலிலும் இரவிலும் வாராதே எனல்.

**3. கழறல்**

கழறல் - சொல்லுதல் நேரடியாகச் சொல்லுதல், 'நீ தலைவியை மணந்து கொள்ளாமல் தொடர்ந்து களவு முறையிலேயே இருத்தல் உன் நாட்டுக்கு ஏற்றதன்று உயர் பண்பும் அன்று' என்று தோழி தலைவனிடம் நேரடியாகக் கூறுதல் கழறல் எனப்படும்.

**கழறலுக்கு உரியவை**

கழறல் - இடித்துக் கூறுதல். தலைவனின் நாடு, ஊர், குலம், மரபு, புகழ், வாய்மை, நல்வினை முதலானவற்றின் பெருமைகளைக் கூறி, நீ தலைவியை மணந்து கொள்ளாமல் இருப்பது முறையன்று என நேரடியாகக் கூறுதல்.

**4. மெய்த்தல்**

மெய் - உண்மை மெய்த்தல் - உண்மையானவற்றைக் கூறுதல். தோழி தலைவனுக்கு உண்மைத் தன்மையை (உண்மையிலேயே தலைவிக்கு உள்ள சூழலைக்) கூறுதல் மெய்த்தல் எனப்படும்.

**மெய்த்தலுக்கு உரியவை**

தலைவனிடம் 'நீ வரைவு கூறி எம் நகர்க்கு வா் அவ்வாறு வந்தால் எம் உறவினர் எதிர்கொண்டு வருவர்' எனல்.

தலைவன் தலைவியை மணந்து கொள்வதற்கு உரிய காலம் (பருவம்) வந்துவிட்டது எனல்.

தலைவன் வரும் வழியில் விலங்குகளால் ஏற்படக் கூடிய அச்சத்தைச் சுட்டிக் காட்டி வரைவு வற்புறுத்துதல்.

பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாத தலைவியின் துன்பத்தைப் போக்கும் விதத்தில் திருமணம் செய்துகொள் என வற்புறுத்துதல்.

குறியிடத்தில் சந்திப்பதற்கு இடையூறாகக் காவல் மிகுந்துள்ளது என்று கூறுதல்.

தலைவிக்குக் காமவேட்கை அதிகமானது என்று கூறுதல்.

தலைவிக்குக் கனவினால் வந்த துன்பத்தைக் கூறுதல்.

தலைவியின் அழகு, தலைவனின் பிரிவினால் கெட்டது எனக் கூறுதல்.

**வரைவு கடாதலின் விரிவுச் செய்திகள்**

தலைவனிடம் திருமணத்தை வலியுறுத்தித் தோழி பேசும் வரைவு கடாதல் மேற்சொன்ன நான்கு வகைப்பாடுகளை உடையது. அவ்வகைப்பாடுகளின் அடிப்படையில் அது பல்வேறு விரிவுச் செய்திகளையும் உடையது.

வினவிய செவிலிக்கு மறைத்தமை தலைவர்க்குத் தோழி விளம்பல் முதலாகக் கவின் அழிவு உரைத்தல் ஈறாகச் சொல்லப்பட்ட இருபதும் வரைவு கடாதலின் விரிவுச் செய்திகள் ஆகும். இவ்விருபது விரிவுச் செய்திகளும் தோழி தலைவனிடம் கூறுவதாகவே அமைந்துள்ளவை என்பது குறிப்பிடத்தக்கது.

இனி அவ்விரிவுச் செய்திகளை மேற்கண்ட வகைப்பாடுகளின் அடிப்படையில் பிரித்துக் காண்போம்.

**ஒருவழித் தணத்தல்**

தணத்தல் - பிரிந்து இருத்தல். தலைவியின் களவு ஒழுக்கம் ஊரார்க்குத் தெரிந்து பலரும் அது பற்றி இழித்தும், பழித்தும் பேசும் அலர் ஏற்படும். அதனால் 'தலைவியை உடன் மணந்து கொள்க பருவமும் வந்துவிட்டது' என்று தோழி வரைவு கடாதல் மூலம் வற்புறுத்துவாள். பலர் தூற்றும் அலர் மறைய நான் எனது ஊருக்கு

ஒரு முறை சென்று சில காலம் தங்கித் திரும்புகிறேன் என்று கூறித் தலைவன் பிரிந்து செல்வான். அவன் பகற்குறியிலும், இரவுக் குறியிலும் வருவதைத் தவிர்ப்பான். அதுவே ஒருவழித் தணத்தல் எனப்படும்.

**ஒருவழித்தணத்தலின் வகை**

ஒரு வழித்தணத்தல் ஏழு வகைப்படும். அவையாவன:

1. செலவு அறிவுறுத்தல்
2. செலவு உடன்படாமை
3. செலவு உடன்படுத்தல்
4. செலவு உடன்படுதல்
5. சென்றுழிக் கலங்கல்
6. தேற்றி ஆற்றுவித்தல்
7. வந்துழி நொந்துரை

**1. செலவு அறிவுறுத்தல்**

தற்காலிகப் பிரிவாகச் சில காலம் குறியிடங்களில் சந்திப்பதைத் தவிர்த்துத் தன் ஊருக்கு சென்று வர இருப்பதைத் தலைவன் தோழியிடம் கூறுதலும், தோழி தலைவியிடம் கூறுதலும் செலவு அறிவுறுத்தல் ஆகும்.

**செலவு அறிவுறுத்தலுக்கு உரியவை**

தலைவன் தன் ஊருக்குச் செல்வதைத் தோழியிடம் கூறுதல்.

தலைவன் ஒருவழித் தணத்தலாகப் பிரிவு மேற்கொண்டதைத் தோழி தலைவிக்குச் சொல்லுதல்.

**2. செலவு உடன்படாமை**

தலைவன் ஒருவழித் தணத்தலாகத் தன் ஊருக்குச் செல்வதைத் தோழி உடன்படாமல் தடுத்தல் செலவு உடன்படாமை எனப்படும்.

**செலவு உடன்படாமைக்கு உரியது**

தலைவன் ஒருவழித்தணத்தலாகப் பிரிந்து தன் ஊருக்குச் செல்வதைத் தோழி தடுத்தல்.

**3. செலவு உடன்படுத்தல்**

தற்போது உள்ள சூழலில் ஒருவழித்தணத்தலாகத் தான் பிரிந்து செல்ல வேண்டியது இன்றியமையாதது என்று கூறித் தலைவன் தோழியை உடன்படச் செய்வது செலவு உடன்படுத்தல் எனப்படும்.

**செலவு உடன்படுத்தலுக்கு உரியது**

தலைவன் தனது பிரிவு இன்றியமையாதது என்று வேண்டிக் கூறித் தோழியை உடன்படுத்துதல்.

**4. செலவு உடன்படுதல்**

ஒருவழித் தணத்தலாகத் தான் பிரிந்து செல்ல வேண்டியது இன்றியமையாதது என்று தலைவன் உணர்த்த, அதை உணர்ந்த தோழி அப்பிரிவுக்கு உடன்படுவது செலவு உடன்படுதல் எனப்படும்.

**செலவு உடன்படுதலுக்கு உரியது**

தலைவனின் வேண்டுகோளை ஏற்ற தோழி அவ்வாறே ஒருவழித் தணத்தல் மேற்கொள்ள இசைந்து அனுப்பி வைத்தல்.

**5. சென்றுழிக் கலங்கல்**

தலைவன் ஒருவழித் தணத்தலாகப் பிரிந்து சென்றபோது அப்பிரிவைத் தாங்க இயலாத தலைவி மனம்கலங்கிப் பேசுதல் சென்றுழிக் கலங்கல் எனப்படும்.

**சென்றுழிக் கலங்கலுக்கு உரியவை**

தலைவன் பிரிவை எண்ணிய தலைவி தன் நெஞ்சிடம் வருந்திப் பேசுதல்.

பிரிந்த தலைவன் உடன் திரும்பாமல் காலம் நீட்டித்தபோது, அதனால் மிகுந்த காமம் காரணமாகத் தலைவி பேசுதல்.

**6. தேற்றி ஆற்றுவித்தல்**

மனம் கலங்கிய தலைவிக்குத் தெளிவு ஏற்படும் வண்ணம் அறிவுரைச் சொற்களைக் கூறி, தோழி தலைவியின் துயர் நீக்குதல் தேற்றி ஆற்றுவித்தல் எனப்படும்.

**தேற்றி ஆற்றுவித்தலுக்கு உரியவை**

காமம் மிக்க துயரால் வருந்திய தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

பிரிவு முடிந்து தலைவன் திரும்பிவர அதனைத் தோழி தலைவிக்குக் கூறுதல்.

**7. வந்துழி நொந்துரை**

ஒருவழித் தணத்தலாகிய தற்காலிகப் பிரிவு முடிந்து, திரும்பி வந்த தலைவனிடம் தோழி வருந்திப் பேசுதலும், அவ்வாறே தலைவிக்கும் தோழிக்கும் தன் பிரிவால் ஏற்பட்ட துன்பம் பற்றித் தலைவன் வருந்திப் பேசுதலும் வந்துழி நொந்துரை எனப்படும்.

**வந்துழி நொந்துரைக்கு உரியவை**

திரும்பி வந்த தலைவனிடம் தோழி வருத்தம் புலப்படுத்திப் பேசுதல்.

தலைவிக்குத் தன் பிரிவு தந்த துயருக்காகத் தலைவன் வருந்தித் தோழியிடம் பேசுதல்.

தலைவியின் பெரிய துயரை ஆற்றுவித்து அரிய உயிரைக் காத்திருந்த (காவல் செய்த) தன்மை இது எனத் தோழி தலைவனிடம் கூறுதல்.

**ஒருவழித் தணத்தலின் விரிவுச் செய்திகள்**

தலைவன் தன் ஊருக்குச் சென்று தங்குதல் ஒரு வழித் தணத்தல் ஆகும் என்றும் அது ஏழு வகைப்படும் என்றும் கண்டோம். அதுவே 12 வகைப்பட்ட விரிவுச் செய்திகளையும் உடையது. அவற்றை மேற்கண்ட ஏழு வகைப்பாடுகளின் கீழ்ப் பிரித்துக் காண்போம்.

**வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்**

திருமணத்தை முன்வைத்து அதற்குத் தேவைப்படும் பொருளீட்டுதல் காரணமாக, தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் எனப்படும்.

**வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதலின் வகைகள்**

வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் ஒன்பது வகைகளை உடையது. அவையாவன:

பிரிவு அறிவுறுத்தல்

பிரிவு உடன்படாமை

பிரிவு உடன்படுத்தல்

பிரிவு உடன்படுதல்

பிரிவுழிக் கலங்கல்

வன்புறை

வன்பொறை

வரும்வழிக் கலங்கல்

வந்துழி மகிழ்ச்சி

**பிரிவு அறிவுறுத்தல்**

திருமணத்தை முன் வைத்து, பொருளீட்டுதல் காரணமாகத் தான் பிரியப்போகும் செய்தியைத் தலைவிக்குத் தெரிவிக்கும்படி தோழியிடம் தலைவன் கூறுதல் பிரிவு அறிவுறுத்தல் எனப்படும்.

**பிரிவு உடன்படாமை**

திருமணத்தை முன்வைத்து, பொருளீட்டுதல் காரணமாகத் தலைவன் பிரிவதைத் தோழி உடன்படாமல் தலைவனிடம் மறுத்துக் கூறுதல் பிரிவு உடன்படாமை எனப்படும்.

**பிரிவு உடன்படுத்தல்**

உரிய காரணங்களையும் சென்று வரவேண்டியதன் இன்றியமையாமையையும் எடுத்துக் கூறிய தலைவன் தனது பிரிவைத் தோழி உடன்படுமாறு செய்தல் பிரிவு உடன்படுத்தல் எனப்படும்.

**பிரிவு உடன்படுதல்**

உரிய காரணங்களையும் சென்று வரவேண்டியதன் இன்றியமையாமையையும் தலைவன் எடுத்துரைக்க, அதை உணர்ந்த தோழி தலைவனது பிரிவை உடன்படுதல் பிரிவு உடன்படுதல் எனப்படும்.

**பிரிவுழிக் கலங்கல்**

வரைவிடை வைத்துப் பொருள் ஈட்டுதல் காரணமாகத் தலைவன் பிரிந்து செல்ல, அதனால் தலைவி மனம் கலங்கி இருத்தல் பிரிவுழிக் கலங்கல் எனப்படும்.

**வன்புறை**

தலைவனது பிரிவு அவசியமானது; அப்பிரிவை ஏற்றுப் பொறுத்து ஆற்றியிருத்தலே பொருத்தமுடையது என்று தோழி தலைவியிடம் வற்புறுத்திக் கூறுதல் வன்புறை எனப்படும்.

**வன்பொறை**

தலைவி தோழியின் சொற்களைக் கேட்டு ஆற்றி இருத்தல், வன்பொறை ஆகும். (பொறை - பொருத்துக்கொள்ளுதல்)

**வரும்வழிக் கலங்கல்**

பொருள்வயின் பிரிவு மேற்கொண்ட தலைவன், தன்பணி முடித்துத் திரும்புகிறான். திரும்பும் வழியில் தன் பிரிவால் தலைவிக்கு ஏற்பட்டிருக்கும் வருத்தம் - கலக்கம் - தாங்க இயலாத தன்மைகளை எண்ணி மனம் கலங்குகிறான். இதுவே வரும்வழிக் கலங்கல் எனப்படும்.

**வந்துழி மகிழ்ச்சி**

பொருளீட்டிக் கொண்டு திரும்பிவரும் வழியெங்கும் வருந்தியவாறே வந்த தலைவன் மீண்டு வந்ததும் அவனைக் கண்ட தலைவி மனம்மகிழ்தல் வந்துழி மகிழ்ச்சி எனப்படும்.

**வரைவிடைவைத்துப் பொருள்வயின் பிரிதலின் விரிவுச் செய்திகள்**

மேற்கண்டவாறு ஒன்பது வகைப்பாடுகளை உடைய வரைவிடைவைத்துப் பொருள்வயின் பிரிதல் என்பது 21 விரிவுச்செய்திகளையும் உடையதாகும். என் பொருள் பிரிவு உணர்த்து ஏந்திழைக்கு என்பது முதலாக ஆற்றுவித்திருந்தமை பாங்கி கூறலும் என்பது ஈறாக அவ்விரிவுச் செய்திகள் அமைந்துள்ளன. அவற்றை வகைப்பாடுகளின் அடிப்படையில் காண்போம்.

**பிரிவு அறிவுறுத்தலுக்கு உரியது**

‘பொருள் காரணமாகப்பிரியும் என் பிரிவைத் தலைவிக்கு உணர்த்துக’ என்று தலைவன் தோழியிடம் கூறுதல்.

தோழி தலைவிக்குத் தலைவனின் பொருள்வயின் பிரிவை உணர்த்துதல்.

**பிரிவு உடன்படாமைக்கு உரியது**

தோழி ‘உன் பொருட்பிரிவை நீயே தலைவியிடம் சொல்’ என்று தலைவனிடம் மறுத்துப் பேசுவது.

**பிரிவு உடன்படுத்தல், பிரிவு உடன்படுதலுக்கு உரியது**

‘பொருள்வயின் பிரிவில் நெடுங்காலம் நீட்டித்து இருக்கமாட்டேன். விரைவில் திரும்பி வருவேன்’ என்று தலைவன் தோழியிடம் கூறுதல்.

**பிரிவுழிக் கலங்கலுக்கு உரியவை**

தலைவி தலைவன்பிரிவுக்குவருந்துதல்.

பாங்கி தலைவியிடம் கொடிய சொற்களைப் பேசுதல்.

மழைக்காலம் வந்ததாகக் கருதித் தலைவி புலம்புதல்.

மழைக்காலம் வந்ததாகத் தோன்றுவது மாயத் தோற்றம் என்று கூறிய தோழியைத் தலைவி மறுத்துப் பேசுதல்.

பொருளீட்டச் சென்ற இடத்தில் தலைவன் புலம்புதல்.

**வன்புறைக்கு உரியவை**

தலைவி கொடுஞ்சொற்களைச்சொல்லுதல்.

தலைவன் விரைந்து மீண்டு வருவான் எனத் தோழி சொல்லுதல்.

பருவம் வந்ததாகத் தோன்றுவது மாயத் தோற்றமே என்று தோழி கூறுதல்.

தலைவனது வரவை அறிவிக்கும் தூதுவனாகவே கார்காலம் வந்தது என்று தோழி கூறுதல்.

**வன்பொறைக்கு உரியது**

தலைவி தோழியின் வார்த்தைகளைக் கேட்டு ஆற்றியிருத்தல்.

**வரும்வழிக் கலங்கலுக்கு உரியவை**

பொருளீட்டி மீண்டு வரும் தலைவன் தேர்ப்பாகனிடம் பேசுதல்.

பொருளீட்டி மீண்டு வரும் தலைவன் மேகத்திடம்பேசுதல்.

**வந்துழி மகிழ்ச்சிக்கு உரியவை**

தோழி வலம்புரிச் சங்கின் ஓசையைக் கேட்டு, தலைவன் வருகையைத் தலைவிக்குச் சொல்லுதல்.

தலைவி வலம்புரிச் சங்கை வாழ்த்திக் கூறுதல்.

திரும்பி வந்த தலைவனிடம் 'பிரிந்திருந்த காலத்தில் எம்மை நினைத்தீரோ' என்று தோழி வினவுதல்.

'பிரிந்திருந்த காலத்தில்உம்மை யான் மறந்து அறியேன்' என்று தலைவன் கூறுதல்.

தலைவியைப் பொறுத்திருக்கச் செய்து அவளைக் காப்பாற்றிய அருமைப்பாட்டைத் தலைவனிடம் தோழி கூறுதல்.

இவையாவும் வரைவிடைவைத்துப் பொருள்வயின் பிரிதலின் விரிவுச் செய்திகளாகும்.

**வினாக்கள்**

1. இயற்கைப் புணர்ச்சி என்றால் என்ன?
2. தெய்வத்தால் நிகழும் புணர்ச்சி குறித்து எழுதுக.
3. வன்புறை என்றால் என்ன?
4. இடந்தலைப்பாடு குறித்து எழுதுக.
5. ஒருவழித் தணத்தல் என்றால் என்ன?
6. களவியலின் இலக்கணத்தை விரிவாக எழுதுக.
7. களவிற்குரிய கிளவித் தொகைகளை விளக்குக.
8. களவொழுக்கத்தில் தலைவியின் நிலை பற்றி எழுதுக.
9. தலைவியால் நிகழும் புணர்ச்சியின் வகையை விவரி.
10. களவில் பாங்கியன் நிலைப்பாடு பற்றி விளக்கி எழுதுக.

# அலகு - 4

# வரைவியல்

### வரைவு

வரைவு என்னும் சொல் திருமணத்தைக் குறிக்கும். அவ்வாறே கரணம் என்பது திருமண நிகழ்வைக் குறிக்கும் சொல்லாகும். இவற்றை முந்தைய பாடங்களில் கண்டு தெளிந்தோம். இனி, இங்கு வரைவு என்பதற்கான இலக்கண விளக்கத்தைக் காண்போம்.

### இலக்கணம்

நம்பியகப் பொருள் நூலாசிரியர் வரைவின் இலக்கணத்தைக் கீழ்க்காணும் நூற்பா வழி வகுத்து வழங்குகிறார்.

**வரைவு எனப்படுவது உரவோன் கிழத்தியைக்**

**குரவர் முதலோர் கொடுப்பவும் கொடாமையும்**

**கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே (வரைவியல் - 1)**

### இருவகை வரைவு

தலைவன் தலைவியை மணந்து கொள்வது வரைவு எனப்படும். அது கரணம் எனப்படும் சடங்கு முறைகளுடன் கூடியதாக அமையும். அவ்வாறு நிகழும் வரைவு என்னும் திருமணம்.

(1) பெண்ணின் பெற்றோர் உடன்பட்டு மகட்கொடை (மகளைத் தருதல்) வழங்க நிகழ்வது.

(2) பெண்ணின் பெற்றோர் உடன்பட்டு வழங்காமல் தலைமக்கள் தம்விருப்பப்படி நடத்திக் கொள்வது.

என இரு நிலைப்பாடுகளை உடையது.

**வரைவிற்குரிய கிளவிகள்**

அகத்துறை நிகழ்வுகளில் பங்குபெறும் தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலானோர் நிகழ்த்தும் உரையாடல்கள் கிளவி என்றும் அவற்றின் தொகுப்பு கிளவித் தொகை என்றும் அழைக்கப்படும்.

நம்பியகப் பொருள் நூலாசிரியர், வரைவிற்குரிய கிளவித் தொகைகளை இரண்டு பிரிவுகளில் பாகுபடுத்தி உரைத்துள்ளார்.

அவை,

**(1) வரைவு மலிதல்**

**(2) அறத்தொடு நிற்றல்**

என்பன.

**வரைவு பற்றிய இலக்கணம்**

களவுப்புணர்ச்சி தொடர்ந்து நிகழும்போது பகற்குறியிலோ அல்லது இரவுக் குறியிலோ அதனைப் பிறர் அறியக் கூடிய சூழல்கள் ஏற்படும். அதன் பின்னரோ அல்லது அவ்வாறு களவு வெளிப்படுவதற்கு முன்னரோ தலைமக்கள் மேற்கொள்ளும் திருமண நிகழ்ச்சிக்கு வரைவு என்று பெயர். (வரைதல் - மணந்து கொள்ளுதல்)

**வரைவின் வகைகள்**

வரைவு இரு வகைப்படும். அவையாவன:-

1. களவு வெளிப்படும் முன் வரைதல்
2. களவு வெளிப்பட்ட பின் வரைதல்

**களவு வெளிப்படும் முன் வரைதல்**

இயற்கைப் புணர்ச்சி முதலான நான்கு வகைப் புணர்ச்சிகளிலும் தலைவன் தலைவியோடு மகிழ்வான். இவ்வாறு மகிழ்ந்த தலைவன் இதன்பின் களவை நீட்டிக்க விரும்பாது, தலைவியைத் திருமணம் செய்து கொள்ள முயல்வான். அல்லது

பாங்கனாலோ பாங்கியாலோ அறிவுறுத்தப்பட்டுத் தெளிவு பெற்று வரைவு மேற்கொள்வான். இதுவே களவு வெளிப்படும் முன் வரைதல் எனப்படும்.

**களவு வெளிப்பட்ட பின் வரைதல்**

தலைமக்கள் பிறர் அறியாதவாறு மறைந்து ஒழுகிய களவு என்னும் காதல் வாழ்க்கை பலருக்கும் தெரியவரும். அச்சூழலில் வரைவு நிச்சயம் நிகழும். அதுவும் மூன்று நிலைகளில் நிகழும். அவையாவன:-

1. தலைவனும், தலைவியும் சேர்ந்து ஊரைவிட்டுப் புறப்பட்டுச் சென்று வேற்று ஊரில் திருமணம் செய்து கொள்ளுதல்.

2. ஊரைவிட்டு, உடன்போக்காகச் சென்றவர்கள் மீண்டும் வந்து தலைவன் ஊரிலோ தலைவி ஊரிலோ வரைவு மேற்கொள்ளுதல்.

3. உடன்போக்கின் இடையே தலைவியை அவளது தமர் (உறவினர் - பெற்றோர்) அழைத்துச் செல்ல, தலைவன் அவர்களை வழிபட்டு உடன்படச் செய்து வரைதல். இதனை,

**உடன்போய் வரைதலும் மீண்டு வரைதலும்**

**உடன்போக்கு இடையீடுற்று வரைதலும்**

**களவு வெளிப்பட்டபின் வரைதல் ஆகும் (44)**

என்ற நூற்பா விளக்குகிறது.

**களவு வெளிப்பாட்டுக் கிளவிகள்**

களவு ஒழுக்கம் வெளிப்படாத போது, வரைவு மலிதல், அறத்தொடு நிற்றல் முதலான செயல்பாடுகள் நிகழும். அவற்றின் வழி, கற்பு வாழ்வு மலரும். அதற்கு மாறாகத் தலைமக்களின் களவு வாழ்க்கை வெளிப்படும் வண்ணம் அதுபற்றியே பலரும் அலர்தூற்றிப் பேசும் நிலையில் நிகழும் கிளவிகளை, களவு வெளிப்பாட்டுக் கிளவிகள் என்பர். அவற்றை, உடன்போக்கு - கற்பொடு புணர்ந்த கவ்வை - மீட்சி என்னும் மூன்று வகையான நிகழ்ச்சிகளாக வரிசைப்படுத்தி வழங்குவார் நாற்கவிராச

நம்பி. அவை ஒவ்வொன்றும் உட் பிரிவுகளாகச் சில வகைகளையும் அவற்றுக்கெனச் சில கிளவிகளையும் உடையன.

**உடன்போக்கு**

தலைவன் தலைவியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்லுதல் உடன்போக்கு எனப்படும். தலைவி தலைவனுடன் செல்லுதல் என்பதாகவும் இச்சொல்லுக்கு பொருள் கூறலாம். இருவகைப் பொருளும் ஒரு செயலையே உணர்த்தும்.

**உடன்போக்கு நிகழ்தல்**

தலைவன் தலைவியின் காதல் மலர்ந்து வளர்ந்த களவு வாழ்க்கை ஊரார்க்குத் தெரியவரும் முன்னரே தோழி அறத்தொடு நிற்பாள். திருமணம் முடிக்க வற்புறுத்துவாள். அதற்கு மாறாக, களவு வெளிப்பட்டுவிடும் சூழலில் பலரும் அறிந்து அலர் பேசும் நிலையில் உடன்போக்கு நிகழும்.

அகத்திணை நெறியில் களவு வாழ்க்கை கற்பாக மாறுவதற்கு இரண்டு வழிகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஒன்று அறத்தொடு நிற்றல். மற்றொன்று உடன்போக்கு. இவற்றுள் ஒன்று நிகழ்ந்தால் மற்றொன்று நிகழாது. அறத்தொடு நின்ற பின் உடன்போக்கு நிகழாது. அவ்வாறே உடன்போக்கின் பின்னர் அறத்தொடு நிற்பதால் பயன் ஒன்றும் இல்லை. இவ்விரண்டில் ஒன்றுதான் களவு நாடகத்தின் நிறைவுக் காட்சியாக அமையும்.

**உடன்போக்கின் வகைகள்**

தலைவனும் தலைவியும் ஒன்று சேர்ந்து செல்லும் உடன்போக்கு என்பது எட்டு வகைகளை உடையது. அவையாவன :

**(1) போக்கு அறிவுறுத்தல்**

தலைவியை உடன் அழைத்துச் செல்லுமாறு தோழி தலைவனுக்குச் சொல்லுதல்.

**(2) போக்கு உடன்படாமை**

தோழி கூறியவாறு உடன் போக்காகச் செல்வதற்குத் தலைவனும், தலைவியும் மறுத்தல்.

**(3) போக்கு உடன்படுத்தல்**

உடன்போக்காக அழைத்துச் செல்வதைத் தவிர, தலைவிக்கு வேறு பாதுகாப்பும் ஆதரவும் இல்லை என்று தலைவனிடம் கூறுதல். அவ்வாறே தலைவனுடன் செல்லுவது அன்றிக் கற்பு மேம்பாட்டை நிலை நிறுத்த வேறு வழியில்லை என்று தலைவியிடம் கூறுதல். அவ்வாறு இருவரிடமும் கூறி அவ்விருவரையும் உடன்போக்கிற்கு உடன்படச் செய்தல்.

**(4) போக்கு உடன்படுதல்**

தோழியின் விளக்க உரைகளைக் கேட்ட தலைவனும் தலைவியும் உடன் போக்காகச் செல்வதற்கு ஒப்புக் கொள்ளுதல்.

**(5) போக்கல்**

உடன் போக்காகச் செல்வதற்கு இருவரும் உடன்பட்ட பிறகு, தலைவி தலைவனுடன் செல்வதற்குத் தோழி வழியேற்படுத்திக் கொடுத்தல்.

**(6) விலக்கல்**

உடன் போக்காகச் சென்ற தலைவியின் இயலாமை (தளர்ச்சி) கண்டோர் அவள் மீது அன்பு காட்டுதல் உடன் போக்கை விலக்கிக் கொண்டு தங்கள் இருப்பிடத்தில் தங்கிச் செல்லுமாறு கூறுதல்.

**(7) புகழ்தல்**

தலைவன் உடன்போக்கில் இடைவழியில் தலைவியைப் புகழ்ந்து கூறுதல்.

**(8) தேற்றல்**

இடைவழியில் இயலாமை காரணமாகத் தளர்ச்சி அடைந்து தங்கிய தலைவியிடம் தன் ஊர் அருகில்தான் உள்ளது என்று கூறித் தலைவன் அவளைத் தேற்றல்.

மேற்கண்ட எட்டும், உடன்போக்கின் வகைகளாக அமைகின்றன. உடன் போக்காகச் செல்லுமாறு தோழி வழங்கும் அறிவுரையில் தொடங்கி, தலைவன் அவனது ஊரை நெருங்கும் நேரம் வரையிலான செயல்பாடுகளின் வகைப்பாடுகளாக மேற்கண்ட எட்டும் அமைகின்றன.

**உடன்போக்கின் விரிவு**

தலைவனும் தலைவியும் ஒன்றாகச் சேர்ந்து புறப்பட்டுச் செல்லும் உடன்போக்கு என்னும் நிகழ்வு மேற்கண்டவாறு எட்டு வகைப்பாடுகளை உடையது. அவ்வாறு எட்டாக அமைந்த வகைப்பாடுகளையே மேலும் விளக்கமாகவும் விரிவாகவும் கிளவிகளாகப் பிரித்துரைக்கும் போது பதினெட்டாக விரிவடைகிறது. அப்பதினெட்டையும் மேற்கண்ட எட்டு வகைகளுக்குள் அடக்கிக் காட்டுவதும் உண்டு.

**போக்கு அறிவுறுத்தலின் விரிவு**

(1) பாங்கி தலைவனுக்கு உடன்போக்கு உணர்த்துதல்.

(2) பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்துதல்.

**போக்கு உடன்படாமையின் விரிவு**

(1) தலைமகன் மறுத்தல்.

(2) தலைவி நாணம் அழியுமே என்று இரங்கிக் கூறுதல்.

**போக்கு உடன்படுத்தலின் விரிவு**

(1) பாங்கி தலைவனை உடன்படுத்தல்.

(2) கற்பின் மேம்பாட்டைப் பாங்கி தலைவிக்குக் கூறல்.

**போக்கு உடன்படுதலின் விரிவு**

(1) தலைவன் போக்கு உடன்படுதல்.

(2) தலைவி ஒருப்பட்டு (ஒப்புக்கொண்டு) எழுதல்.

(3) தோழி சுரத்து (வழி) இயல்பு உரைத்தவழி, தலைவி சொல்லுதல்.

**போக்கலின் விரிவு**

(1) பாங்கி கையடை (அன்புப் பரிசு) கொடுத்தல்.

(2) பாங்கி வைகிருள் (மிகுந்த இருள் பொருந்திய இடை யாமம்) விடுத்தல்.

(3) தலைமகளைத் தலைமகன் சுரத்து உய்த்தல். (சுரம்-பாலைவழி)

**விலக்கலின் விரிவு**

(1) தலைமகன் தலைமகள் அசைவு (வருத்தம்) அறிந்து இருத்தல்.

(2) கண்டோர் காதலின் விலக்கல். (உடன்போக்கைத் தடுத்தல்)

**புகழ்தலின் விரிவு**

(1) உவந்து அலர் (மலர்) சூட்டி உள் மகிழ்ந்து உரைத்தல்.

(2) கண்டோர் அயிர்த்தல். (அயிர்த்தல் - ஐயமுற்றுக் கூறுதல்)

**தேற்றலின் விரிவு**

(1) தன் பதி அணிமை சாற்றல்.

(தலைவன், தன் ஊர் அருகில் உள்ளது எனல்)

(2) தலைவன் தன் பதி அடைந்தமை சாற்றல்.

**கற்பொடு புணர்ந்த கவ்வை**

உடன்போக்காகத் தலைவி தலைவனுடன் சென்ற பிறகு அவளது களவு வாழ்க்கையைப் பற்றி அயலவர் பலரும் அறிந்து கொள்ளுவர். அதன் தொடர்ச்சியாய் அது பற்றியே பேசுவர். அதற்கு அலர் என்று பெயர். அவ்வாறு அலர் எழுந்து பலர்

அறியக் களவு வெளிப்படுதலின் தொடர்ச்சியாய் நிகழும் நிகழ்ச்சிகளைக் கற்பொடு புணர்ந்த கவ்வை என்று கூறுவர். கவ்வை என்பது ஒலி, பழிச்சொல், துன்பம், கவலை முதலிய பல பொருள்களைத் தரும். அது ஐந்து வகைகளை உடையது. அவையாவன:

(1) செவிலி புலம்பல்:தலைவி காதலனுடன் உடன்போக்காகச் சென்று விட்டதை அறிந்து செவிலித் தாய் புலம்புதல்.

(2) நற்றாய் புலம்பல்:தன் புதல்வி காதலனுடன் உடன் போக்காகச் சென்றுவிட்டதை அறிந்து நற்றாய் புலம்புதல்.

(3) கெவர் மனை மருட்சி:நற்றாய் தன் வீட்டில் இருந்து கொண்டு வருந்துதல்.

(4) கண்டோர் இரக்கம்:தலைவியின் தாயும் தோழியரும் அவளது உடன்போக்கினை, அறிந்து அப்பிரிவைத் தாங்க முடியாமல் வருந்திப் பேசுதலை மற்றவர் கண்டு இரங்கிக் கூறுதல்.

(5) செவிலி பின்தேடிச் சேறல்:உடன் போக்காகச் சென்ற தலைவியைத் தேடிக்கொண்டு, செவிலி பின்தொடர்ந்து செல்லுதல்.

### கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரிவுகள்

உடன்போக்கின் பின் களவு வெளிப்பட்டு அதன் பின் நிகழும் நிகழ்ச்சிகளைக் கற்பொடு புணர்ந்த கவ்வை என்று கண்டோம். செவிலி புலம்பல், நற்றாய் புலம்பல், கவர் மனை மருட்சி, கண்டோர் இரக்கம், செவிலி பின்தேடிச் சேறல் என்னும் ஐந்தும் அக்கவ்வையின் பகுதிகளாகும். அவற்றின் உட்பிரிவுகளாக (விரிவுகளாக) அமையும் கிளவிகளை (கூற்றுகளை) இனிக் காண்போம்.

### செவிலி புலம்பலின் விரிவு

தன் வளர்ப்பு மகளான தலைவி காதலனுடன் உடன் போக்காகச் சென்று விட்டதை அறிந்து கொண்ட செவிலித்தாய் புலம்புவாள். இது செவிலி புலம்பல் எனப்படும். அவளது புலம்புதலின் விரிவுகளாகச் சிலவற்றை அகப்பொருள் விளக்க நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அவையாவன :

(1) தலைவியின் உடன்போக்கை, தோழி வழியாக உணர்ந்த செவிலி வருந்துதல்˙ அப்போது அவளைத் தேற்றுவோர்க்கு வருத்தத்துடன் பதில் கூறுதல்.

(2) தலைவி தான் தலைவனுடன் செல்லப்போவதைக் குறிப்பினால் உணர்த்தியும் அறியாமல் போனதற்காக நொந்து கூறுதல்.

(3) செவிலி தெய்வத்தை வாழ்த்துதல்.

**நற்றாய் புலம்பலின் விரிவு**

தலைவி உடன்போக்காகச் சென்றதைச் செவிலி நற்றாய்க்கு வெளிப்படுத்துவாள் அது அறத்தொடு நிற்றல் ஆகும். அவ்வாறு செவிலி வழியாக உணர்ந்துகொண்ட தாய் புலம்பிக் கூறுதல் நற்றாய் புலம்பல் எனப்படும். நற்றாய் புலம்பலின் விரிவுகளாவன

(1) பாங்கியுடன் நற்றாய் புலம்புதல்.

(2) அயலாருடன் நற்றாய் புலம்புதல்.

(3) தலைவி பழகி விளையாடிய இடங்களோடு வருந்திப் பேசுதல்.

**மனை மருட்சியின் விரிவு**

நற்றாய் தன் வீட்டில் இருந்து கொண்டு வருந்துதல் மனை மருட்சி எனப்படும். அது ஐவகைப்பட்ட விரிவுச் செய்திகளை உடையது.

(1) தலைவி நல்லபடி இல்லம் திரும்ப வேண்டும் என்பதற்காகக் காக்கை கரைதல் முதலான நல்ல நிமித்தங்களைப் போற்றுதல்.

(2) தலைமகள் நடந்து செல்லும் காட்டின் வெம்மைத் தன்மை மாறிக் குளிர்ச்சி தருவதாக ஆகட்டும் என்று நற்றாய் விரும்பி உரைத்தல்.

(3) தலைவியின் மென்மைத் தன்மைக்கு இரங்குதல்.

(4) தன் மகளின் (தலைவியின்) இளமைத் தன்மைக்கு மனம் இரங்குதல்.

(5) தன் மகளின் (தலைவியின்) அச்சத் தன்மைக்கு இரங்குதல்.

**கண்டோர் இரக்கம்**

தலைவி தன்னொடு உடன் பழகி விளையாடிய தோழியர் கூட்டமும் தன்னைப் பெற்றெடுத்த நற்றாயும் வருந்துமாறு தலைவனுடன் உடன்போக்காகச் செல்வாள். அப்போது ஆயத்தாரும் (தோழியர்) நற்றாயும் வருந்தி நிற்பதைக் கண்டார் தங்கள் வருத்தத்தைப் புலப்படுத்துதல் கண்டோர் இரக்கம் எனப்படும். இதற்கு உட்பிரிவுகளும் விரிவுகளும் குறிக்கப்பெறவில்லை.

**செவிலி பின்தேடிச் சேறலின் விரிவு**

தலைவி தனது நட்பு வட்டமும் நற்றாயும் வருந்துமாறு உடன் போக்காகச் சென்ற பாதையிலேயே பின் தொடர்ந்து செவிலி தேடிச் செல்லுதல் செவிலி பின் தேடிச் சேறல் எனப்படும். இது ஒன்பது வகையான விரிவுகளை உடையது. அவையாவன :

(1) தலைவியின் பிரிவைத் தாங்காத நற்றாயைத் தேற்றுதல்.

(2) செல்லும் வழியில் மூன்று தண்டுகளைக் கையில் கொண்ட அந்தணரை (முக்கோல் பகவர்) வினவுதல்.

(3) அந்தணர் செவிலியிடம் 'உடன்போக்கு உலக இயல்புதான்' என்று காரணம் கூறி விளக்குதல்.

(4) செவிலி, பாலை நிலத்தில் செல்லும் போது இடைவெளியில் சந்தித்த ஒரு பெண்ணிடம் புலம்பிக் கூறுதல்.

(5) செவிலி இடைவழியில் கண்ட குரா என்னும் மரத்துடன் புலம்பிப் பேசுதல்.

(6) தான் செல்லும் வழியில் பாதச் சுவடுகளைக் கண்டு அவை தலைவியின் பாதச் சுவடுகளாகுமோ என்று வருந்திப் பேசுதல்.

(7) செவிலி போகும் வழியில் எதிர்ப்படும் தலைமக்களைப் பார்த்துத் தன் மகள் சென்ற விவரம் கேட்டல்.

(8) எதிரில் வந்தோர் செவிலியின் புலம்புதலைக் கேட்டு அவளுக்கு ஆறுதலான சில வார்த்தைகளைக் கூறுதல்.

(9) செவிலி, நெடுந்தூரம் நடந்தும் தன் புதல்வியைக் காணாமையால் துன்பம் மிகுந்து வருந்திக் கூறுதல்.

மேற்கண்ட யாவும் செவிலித்தாய் தலைவியை தேடிச் சென்ற முயற்சியின் போது அடுத்தடுத்து நிகழும் நிகழ்வுகளின் விளக்கங்களாகும்.

**மீட்சி**

செவிலித்தாய் தலைவியைத் தேடிச் சென்று காணாமல் திரும்பி வருதல் மீட்சி எனப்படும். உடன்போக்காகச் சென்ற தலைவனும் தலைவியும் மீண்டு வருதலையும் மீட்சி என்று குறிப்பிடுவர். இவ்விரு நிகழ்வுகளையும் உள்ளடக்கியதாக அமையும் மீட்சி என்பது நான்கு வகைகளை உடையது.

**தெளித்தல்**

உடன் போக்காகச் சென்ற தலைவியைத் தேடிக் காணாமல் திரும்பி வந்த செவிலித்தாய் நற்றாயிடம் ‘தலைவி நெடுந்தூரம் சென்று விட்டாள்’ என்று கூறி அவளைத் தெளிவித்தல் தெளித்தல் எனப்படும். அவ்வாறே தலைவன் மீண்டு வரும்போது தலைவியினது ஊர் நெருங்கிவிட்டதனைக் கூறுதலும், தெளித்தல் ஆகும்.

**மகிழ்ச்சி**

தலைவி தலைவனுடன் திரும்பி வருவதை, அவளுக்கு முன்னே செல்லும் சிலர் தோழியிடம் சென்று கூறுவர். அது கேட்டு, தோழி மகிழ்வாள் உடனே தோழி சென்று நற்றாயிடம் கூறுவாள். அவளும் அதைக் கேட்டு மகிழ்வாள். இவ்விரண்டும் மகிழ்ச்சி என்னும் வகையின் விளக்கங்கள் ஆகும்.

**வினாதல்**

தலைவி மீண்டு வருவதை அறிந்த நற்றாய் தன் மகளைத் தலைவன் நம் மனைக்குக் கொண்டு வருவானா அல்லது தன் நகர்க்கே கொண்டு செல்வானா என்று, வெறியாட்டு நிகழ்த்தும் வேலனிடம் கேட்பது வினாதல் எனப்படும்.

**செப்பல்**

தலைவியின் வருகையை அவளுக்கு முன் சென்றோர் தோழியிடம் கூறுதல் செப்பல் எனப்படும்.

**மீட்சியின் விரிவு**

மேலே நான்கு வகைப்பட்டதாக உரைக்கப்பட்ட மீட்சி என்பது ஆறு வகைப்பட்ட விரிவுக் கிளவிகளைக் கொண்டதாகும். அவையாவன :

(1) தலைவி நெடுந்தூரம் சென்றதைச் செவிலி நற்றாயிடம் கூறுதல்.

(2) திரும்பி வரும்போது தலைவன் தாம் தலைவியின் ஊரை நெருங்கி விட்டதைத் தலைவிக்கு கூறுதல்.

(3) தனது வருகையைத் தோழிக்கு அறிவிக்குமாறு தனக்கு முன் செல்கின்றவரிடம் தலைவி கூறுதல்.

(4) முன் சென்றோர் தோழிக்குத் தலைவியின் வருகையைத் தெரிவித்தல்.

(5) தலைவியின் வருகையைத் தெரிந்துகொண்ட தோழி அதனை நற்றாய்க்குக் கூறுதல்.

(6) தலைவியின் வருகையை உணர்ந்த நற்றாய் வேலனைப் பார்த்துத் தலைவன் தன் மகளுடன் இங்கு வருவானோ தன் நகர்க்கே செல்வானோ என்று வினவுதல்.

இவை யாவும் மீட்சியின் விரிவுக் கிளவிகளாக அமைகின்றன. ஒரு வகையில் மீட்சியின் நான்கு வகைகளுக்கான விளக்கவுரைகளாகவும் இவற்றைக் கொள்ளலாம்.

**வரைவு மலிதல்**

திருமணம் தொடர்புடையதாகத் தொடங்கி, தொடர்ந்து நடக்கும் நிகழ்வுகளும் பேச்சுகளும் வரைவு மலிதல் எனப்படும். களவு வாழ்வை மாற்றிக் கற்பு வாழ்வை நிலைப்படுத்தத் தொடர்ந்து நடக்கும் மகிழ்ச்சியான முயற்சி மிகுதலை வரைவு மலிதல் என்றார் ஆசிரியர்.

**வரைவு மலிதலின் வகை**

வரைவு மலிதல் எனப்படும் திருமணம் தொடர்பான முயற்சிகளும் நிகழ்ச்சிகளும் நான்கு வகையாகப் பாகுபடுத்தி உரைக்கப்பட்டுள்ளன. அவையாவன:

**(அ) வரைவு முயல்வு உணர்த்தல்**

திருமணம் தொடர்பான முயற்சிகளைத் தலைவன் தொடங்கிவிட்டான் என்பதனைத் தோழி தலைவிக்குத் தெரிவித்தல்.

**(ஆ) வரைவு எதிர்வு உணர்த்தல்**

தலைவன் தொடங்கிய திருமண முயற்சியை அவனது உறவினர், தலைவியின் பெற்றோரிடம் முன் மொழிய, அதைப் பெற்றோர் ஏற்றுக் கொண்டனர் என்பதைத் தோழி, தலைவியிடம் கூறுதல்.

**(இ) வரைவு அறிந்து மகிழ்தல்**

பெற்றோர், தன் மனம் விரும்பும் தலைவனையே மணமகனாக ஏற்க இசைந்தனர் என்ற செய்தியை அறிந்த தலைவி, மனம் மகிழ்தல் தனக்குள் பேசி மகிழ்தல்.

**(ஈ) பராவல் கண்டு உவத்தல் (பராவல் = பராவுதல், வழிபடுதல்)**

தான் விரும்பும் மணவாழ்வு உறுதிப்படுவதை உணர்ந்த தலைவி அதற்கு நன்றிபாராட்டும் நோக்குடன் தெய்வத்தை வணங்கி நிற்பாள். அதைக் கண்டு தலைவன் மகிழ்தல்.

**வரைவு மலிதலின் விரி**

மேலே நான்காக வகைப்படுத்தி உரைக்கப்பட்ட வரைவு மலிதல் என்னும் செயல்பாட்டை மேலும் விரிவுபடுத்தி எழுவகைக் கிளவிகளாக (கூற்றுகளாக) வரிசைப்படுத்தி வழங்கியுள்ளார் நூலாசிரியர். அவையாவன

**காதலன் மணமுயற்சி**

காதலன், காதலியை மணந்து கொள்ள விருப்பம் தெரிவித்து, அதற்கு ஈடாக (விலையாக)த் தான் தர விரும்பும் பொருள் இது எனச் சொல்லி அனுப்புதல். இச் செய்தியைத் தோழி தலைவிக்குக் கூறுதல்.

விலை என நல்கினன் நாடே - (ஐங்குறுநூறு - 147)

என்னும் சங்க இலக்கியத் தொடர் தலைமகளை மணக்கும் நிலைக்கு விலையாகத் தன் நாட்டையே வழங்கத் தலைவன் இசைந்ததை வெளிப்படுத்தும்.

**காதலி, நற்றாய் உள்ள மகிழ்ச்சி உள்ளல்**

தான் விரும்பும் தலைவனொடு திருமணம் நிகழுமானால் தாயும் மிக மகிழ்வாள் எனத் தலைவி, தாய் அடையப் போகும் மகிழ்வை எண்ணிப் பார்த்து இன்புறுதல். (உள்ளல் - நினைத்தல்)

**தலைவன் உறவினர் மணம் பேசல்**

தலைவனின் உறவினர் மணம் பேச வந்தபோது, அவர்களைத் தங்கள் பெற்றோர் மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு வரவேற்ற இன்பச் செய்தியைத் தோழி, தலைவிக்குச் சொல்லுதல்.

**தலைவியின் உவகை**

தன் பெற்றோர் தலைமகனது விருப்பத்திற்கு உடன்பட்டதைத் தோழி மூலமாக அறிந்த தலைவி, மிகுந்த மகிழ்ச்சியால் தன் மனத்துடன் தானே பேசுதல்.

**தலைவனைப் பாங்கி வாழ்த்தல்**

உரிய நேரத்தில் - உரிய முறையில் வரைவு விருப்பத்தைத் தலைவியின் பெற்றோரிடம் முன்வைத்து இசைவு பெற்ற தலைவனைத் தோழி வாழ்த்துதல்.

**தலைவி பராவுதல் (பரவுநிலை = வழிபடும் நிலை)**

தான் விரும்பும் தலைவனோடு திருமணம் நிகழப்போவதை அறிந்த தலைவி, தெய்வத்தை வணங்கி நிற்பதைத் தோழி தலைவனுக்குக் காட்டுதல்.

**கண்டோன் மகிழ்வு**

தான் விரும்பும் தலைவனோடு திருமணம் நிகழப் போவதை அறிந்த தலைவி, தெய்வத்தை வணங்கி நிற்பதைத் தோழி, தலைவனுக்குச் சுட்டிக் காட்ட, அதைக் கண்ட தலைவன் அகம் மிக மகிழ்தல்.

மேற்கண்ட எழுவகைப் பிரிவுகளும் வரைவு மலிதலின் விரிவுகளாக அமைகின்றன.

**அறத்தொடு நிற்றல்**

அகப்பொருள் இலக்கணத்தில் அறத்தொடு நிற்றல் என்பது முதன்மையானதொரு மரபு ஆகும். தலைமக்களின் வாழ்வை அறவழியில் நிலைப்படுத்த விரும்பும் தோழி முதலானோர் தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் காதல் கொண்ட உண்மையை உரியவர்க்கு உரியவாறு எடுத்துரைப்பது அறத்தொடு நிற்றல் ஆகும். இதனால் தலைவன் தலைவியின் காதல் வெற்றி பெறும் திருமண நிகழ்ச்சி நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்பெறும்.

தலைவன் தலைவியின் அன்பு கலந்த காதல் வாழ்க்கையை நிலைபெறச் செய்து கற்பு வாழ்வை மலரச் செய்வதே அறத்தொடு நிற்றலின் பயன் ஆகிறது. சுருங்கச் சொன்னால் களவைக் கற்பாக்கும் அருஞ்செயலே - அறச்செயலே - அறத்தொடு நிற்றல்.

அகப்பொருள் இலக்கணத்தில் இடம்பெறும் தலைவி, தோழி, செவிலி முதலானோர் அவ்வாறு அறம் நிலைநிறுத்தச் செயல்படும் திறத்தை இப்பகுதியில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**அறத்தொடு நிற்கக் காரணங்கள்**

ஒருவர் பிறருக்கு உண்மை உணர்த்தி நிற்கும் அறத்தொடு நிலை **நிகழ்வதற்கான காரணங்களாவன**

ஆற்று ஊறு அஞ்சுதல் (ஆறு = வழி ˙ ஊறு =துன்பம்)

தலைவன், தலைவியைச் சந்திக்க வரும் வழியில் உள்ள இடர்ப்பாடுகளுக்குப் பிறர் அஞ்சுதல்.

**அவன் வரைவு மறுத்தல்**

தலைவியை விரும்பும் தலைவன் அவளை மணந்து கொள்ள உறவினர் மறுத்து விடுதல்.

**வேற்று வரைவு நேர்தல்**

தலைவியோடு களவில் சந்தித்த தலைவனை விடுத்து, வேறு ஒருவரைத் தலைவிக்கு மணம் முடிக்கும் சூழல் ஏற்படல்.

காப்புக் கைம்மிகுதல் (காப்பு = காவல்)

பகற்குறியிலோ அல்லது இரவுக் குறியிலோ தலைவி தலைவனைக் காணமுடியாதபடி - களவுப் புணர்ச்சி தொடர வாய்ப்பு இன்றி - வீட்டுக் காவல் மிகுதல்.

**அறத்தொடு நிற்போரும் முறைகளும்**

தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என்னும் நால்வரும் அறத்தொடு நிற்பார்கள். தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தை, தன் ஐயர்க்கும் அறத்தொடு நிற்பர் (தன் ஐயர் - தமையன்).

**முறைகள்**

களவுப் புணர்ச்சியைச் செவிலி கண்டவிடத்தும், காவல் மிகுந்த போதும் தலைவி அறத்தொடு நிற்பாள்.

முன்னிலை மொழி, முன்னிலைப் புறமொழி - எனும் இரு முறைகளில் தோழி அறத்தொடு நிற்பாள்.

(அ) முன்னிலை மொழி:முன் நிற்பார்க்கு நேரே கூறுதல்.

(ஆ) முன்னிலைப் புறமொழி: முன் நிற்பார்க்குக் கூற வேண்டிய செய்தியைப் பிறருக்குக் கூறுவார் போலக் கூறுதல்.

## 2 உடன்போக்கு

தலைவன் தலைவியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்லுதல் உடன்போக்கு எனப்படும். தலைவி தலைவனுடன் செல்லுதல் என்பதாகவும் இச்சொல்லுக்கு பொருள் கூறலாம். இருவகைப் பொருளும் ஒரு செயலையே உணர்த்தும்.

### உடன்போக்கு நிகழ்தல்

தலைவன் தலைவியின் காதல் மலர்ந்து வளர்ந்த களவு வாழ்க்கை ஊரார்க்குத் தெரியவரும் முன்னரே தோழி அறத்தொடு நிற்பாள். திருமணம் முடிக்க வற்புறுத்துவாள். அதற்கு மாறாக, களவு வெளிப்பட்டுவிடும் சூழலில் பலரும் அறிந்து அலர் பேசும் நிலையில் உடன்போக்கு நிகழும்.

அகத்திணை நெறியில் களவு வாழ்க்கை கற்பாக மாறுவதற்கு இரண்டு வழிகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஒன்று அறத்தொடு நிற்றல். மற்றொன்று உடன்போக்கு. இவற்றுள் ஒன்று நிகழ்ந்தால் மற்றொன்று நிகழாது. அறத்தொடு நின்ற பின் உடன்போக்கு நிகழாது. அவ்வாறே உடன்போக்கின் பின்னர் அறத்தொடு நிற்பதால் பயன் ஒன்றும் இல்லை. இவ்விரண்டில் ஒன்றுதான் களவு நாடகத்தின் நிறைவுக் காட்சியாக அமையும்.

### உடன்போக்கின் வகைகள்

தலைவனும் தலைவியும் ஒன்று சேர்ந்து செல்லும் உடன்போக்கு என்பது எட்டு வகைகளை உடையது. அவையாவன

#### (1) போக்கு அறிவுறுத்தல்

தலைவியை உடன் அழைத்துச் செல்லுமாறு தோழி தலைவனுக்குச் சொல்லுதல்.

#### (2) போக்கு உடன்படாமை

தோழி கூறியவாறு உடன் போக்காகச் செல்வதற்குத் தலைவனும், தலைவியும் மறுத்தல்.

**(3) போக்கு உடன்படுத்தல்**

உடன்போக்காக அழைத்துச் செல்வதைத் தவிர, தலைவிக்கு வேறு பாதுகாப்பும் ஆதரவும் இல்லை என்று தலைவனிடம் கூறுதல். அவ்வாறே தலைவனுடன் செல்லுவது அன்றிக் கற்பு மேம்பாட்டை நிலை நிறுத்த வேறு வழியில்லை என்று தலைவியிடம் கூறுதல். அவ்வாறு இருவரிடமும் கூறி அவ்விருவரையும் உடன்போக்கிற்கு உடன்படச் செய்தல்.

**(4) போக்கு உடன்படுதல்**

தோழியின் விளக்க உரைகளைக் கேட்ட தலைவனும் தலைவியும் உடன் போக்காகச் செல்வதற்கு ஒப்புக் கொள்ளுதல்.

**(5) போக்கல்**

உடன் போக்காகச் செல்வதற்கு இருவரும் உடன்பட்ட பிறகு, தலைவி தலைவனுடன் செல்வதற்குத் தோழி வழியேற்படுத்திக் கொடுத்தல்.

**(6) விலக்கல்**

உடன் போக்காகச் சென்ற தலைவியின் இயலாமை (தளர்ச்சி) கண்டோர் அவள் மீது அன்பு காட்டுதல் உடன் போக்கை விலக்கிக் கொண்டு தங்கள் இருப்பிடத்தில் தங்கிச் செல்லுமாறு கூறுதல்.

**(7) புகழ்தல்**

தலைவன் உடன்போக்கில் இடைவழியில் தலைவியைப் புகழ்ந்து கூறுதல்.

**(8) தேற்றல்**

இடைவழியில் இயலாமை காரணமாகத் தளர்ச்சி அடைந்து தங்கிய தலைவியிடம் தன் ஊர் அருகில்தான் உள்ளது என்று கூறித் தலைவன் அவளைத் தேற்றல்.

மேற்கண்ட எட்டும், உடன்போக்கின் வகைகளாக அமைகின்றன. உடன் போக்காகச் செல்லுமாறு தோழி வழங்கும் அறிவுரையில் தொடங்கி, தலைவன்

அவனது ஊரை நெருங்கும் நேரம் வரையிலான செயல்பாடுகளின் வகைப்பாடுகளாக மேற்கண்ட எட்டும் அமைகின்றன.

**உடன்போக்கின் விரிவு**

தலைவனும் தலைவியும் ஒன்றாகச் சேர்ந்து புறப்பட்டுச் செல்லும் உடன்போக்கு என்னும் நிகழ்வு மேற்கண்டவாறு எட்டு வகைப்பாடுகளை உடையது. அவ்வாறு எட்டாக அமைந்த வகைப்பாடுகளையே மேலும் விளக்கமாகவும் விரிவாகவும் கிளவிகளாகப் பிரித்துரைக்கும் போது பதினெட்டாக விரிவடைகிறது. அப்பதினெட்டையும் மேற்கண்ட எட்டு வகைகளுக்குள் அடக்கிக் காட்டுவதும் உண்டு.

**போக்கு அறிவுறுத்தலின் விரிவு**

(1) பாங்கி தலைவனுக்கு உடன்போக்கு உணர்த்துதல்.

(2) பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்துதல்.

**போக்கு உடன்படாமையின் விரிவு**

(1) தலைமகன் மறுத்தல்.

(2) தலைவி நாணம் அழியுமே என்று இரங்கிக் கூறுதல்.

**போக்கு உடன்படுத்தலின் விரிவு**

(1) பாங்கி தலைவனை உடன்படுத்தல்.

(2) கற்பின் மேம்பாட்டைப் பாங்கி தலைவிக்குக் கூறல்.

**போக்கு உடன்படுதலின் விரிவு**

(1) தலைவன் போக்கு உடன்படுதல்.

(2) தலைவி ஒருப்பட்டு (ஒப்புக்கொண்டு) எழுதல்.

(3) தோழி சுரத்து (வழி) இயல்பு உரைத்தவழி, தலைவி சொல்லுதல்.

**போக்கலின் விரிவு**

(1) பாங்கி கையடை (அன்புப் பரிசு) கொடுத்தல்.

(2) பாங்கி வைகிருள் (மிகுந்த இருள் பொருந்திய இடை யாமம்) விடுத்தல்.

(3) தலைமகளைத் தலைமகன் சுரத்து உய்த்தல். (சுரம்-பாலைவழி)

**விலக்கலின் விரிவு**

(1) தலைமகன் தலைமகள் அசைவு (வருத்தம்) அறிந்து இருத்தல்.

(2) கண்டோர் காதலின் விலக்கல். (உடன்போக்கைத் தடுத்தல்)

**புகழ்தலின் விரிவு**

(1) உவந்து அலர் (மலர்) சூட்டி உள் மகிழ்ந்து உரைத்தல்.

(2) கண்டோர் அயிர்த்தல். (அயிர்த்தல் - ஐயமுற்றுக் கூறுதல்)

**தேற்றலின் விரிவு**

(1) தன் பதி அணிமை சாற்றல்.

(தலைவன், தன் ஊர் அருகில் உள்ளது எனல்)

(2) தலைவன் தன் பதி அடைந்தமை சாற்றல்.

**கற்பொடு புணர்ந்த கவ்வை**

உடன்போக்காகத் தலைவி தலைவனுடன் சென்ற பிறகு அவளது களவு வாழ்க்கையைப் பற்றி அயலவர் பலரும் அறிந்து கொள்ளுவர். அதன் தொடர்ச்சியாய் அது பற்றியே பேசுவர். அதற்கு அலர் என்று பெயர். அவ்வாறு அலர் எழுந்து பலர் அறியக் களவு வெளிப்படுதலின் தொடர்ச்சியாய் நிகழும் நிகழ்ச்சிகளைக் கற்பொடு புணர்ந்த கவ்வை என்று கூறுவர். கவ்வை என்பது ஒலி, பழிச்சொல், துன்பம், கவலை முதலிய பல பொருள்களைத் தரும். அது ஐந்து வகைகளை உடையது. அவையாவன:

(1) செவிலி புலம்பல்:தலைவி காதலனுடன் உடன்போக்காகச் சென்று விட்டதை அறிந்து செவிலித் தாய் புலம்புதல்.

(2) நற்றாய் புலம்பல்:தன் புதல்வி காதலனுடன் உடன் போக்காகச் சென்றுவிட்டதை அறிந்து நற்றாய் புலம்புதல்.

(3) கவர் மனை மருட்சி:நற்றாய் தன் வீட்டில் இருந்து கொண்டு வருந்துதல்.

(4) கண்டோர் இரக்கம்:தலைவியின் தாயும் தோழியரும் அவளது உடன்போக்கினை, அறிந்து அப்பிரிவைத் தாங்க முடியாமல் வருந்திப் பேசுதலை மற்றவர் கண்டு இரங்கிக் கூறுதல்.

(5) செவிலி பின்தேடிச் சேறல்:உடன் போக்காகச் சென்ற தலைவியைத் தேடிக்கொண்டு, செவிலி பின்தொடர்ந்து செல்லுதல்.

**கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரிவுகள்**

உடன்போக்கின் பின் களவு வெளிப்பட்டு அதன் பின் நிகழும் நிகழ்ச்சிகளைக் கற்பொடு புணர்ந்த கவ்வை என்று கண்டோம். செவிலி புலம்பல், நற்றாய் புலம்பல், கவர் மனை மருட்சி, கண்டோர் இரக்கம், செவிலி பின்தேடிச் சேறல் என்னும் ஐந்தும் அக்கவ்வையின் பகுதிகளாகும். அவற்றின் உட்பிரிவுகளாக (விரிவுகளாக) அமையும் கிளவிகளை (கூற்றுகளை) இனிக் காண்போம்.

**செவிலி புலம்பலின் விரிவு**

தன் வளர்ப்பு மகளான தலைவி காதலனுடன் உடன் போக்காகச் சென்று விட்டதை அறிந்து கொண்ட செவிலித்தாய் புலம்புவாள். இது செவிலி புலம்பல் எனப்படும். அவளது புலம்புதலின் விரிவுகளாகச் சிலவற்றை அகப்பொருள் விளக்க நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அவையாவன :

(1) தலைவியின் உடன்போக்கை, தோழி வழியாக உணர்ந்த செவிலி வருந்துதல் அப்போது அவளைத் தேற்றுவோர்க்கு வருத்தத்துடன் பதில் கூறுதல்.

(2) தலைவி தான் தலைவனுடன் செல்லப்போவதைக் குறிப்பினால் உணர்த்தியும் அறியாமல் போனதற்காக நொந்து கூறுதல்.

(3) செவிலி தெய்வத்தை வாழ்த்துதல்.

**நற்றாய் புலம்பலின் விரிவு**

தலைவி உடன்போக்காகச் சென்றதைச் செவிலி நற்றாய்க்கு வெளிப்படுத்துவாள் அது அறத்தொடு நிற்றல் ஆகும். அவ்வாறு செவிலி வழியாக உணர்ந்துகொண்ட தாய் புலம்பிக் கூறுதல் நற்றாய் புலம்பல் எனப்படும்.

**நற்றாய் புலம்பலின் விரிவுகளாவன**

(1) பாங்கியுடன் நற்றாய் புலம்புதல்.

(2) அயலாருடன் நற்றாய் புலம்புதல்.

(3) தலைவி பழகி விளையாடிய இடங்களோடு வருந்திப் பேசுதல்.

**மனை மருட்சியின் விரிவு**

நற்றாய் தன் வீட்டில் இருந்து கொண்டு வருந்துதல் மனை மருட்சி எனப்படும். அது ஐவகைப்பட்ட விரிவுச் செய்திகளை உடையது.

(1) தலைவி நல்லபடி இல்லம் திரும்ப வேண்டும் என்பதற்காகக் காக்கை கரைதல் முதலான நல்ல நிமித்தங்களைப் போற்றுதல்.

(2) தலைமகள் நடந்து செல்லும் காட்டின் வெம்மைத் தன்மை மாறிக் குளிர்ச்சி தருவதாக ஆகட்டும் என்று நற்றாய் விரும்பி உரைத்தல்.

(3) தலைவியின் மென்மைத் தன்மைக்கு இரங்குதல்.

(4) தன் மகளின் (தலைவியின்) இளமைத் தன்மைக்கு மனம் இரங்குதல்.

(5) தன் மகளின் (தலைவியின்) அச்சத் தன்மைக்கு இரங்குதல்.

**கண்டோர் இரக்கம்**

தலைவி தன்னொடு உடன் பழகி விளையாடிய தோழியர் கூட்டமும் தன்னைப் பெற்றெடுத்த நற்றாயும் வருந்துமாறு தலைவனுடன் உடன்போக்காகச் செல்வாள். அப்போது ஆயத்தாரும் (தோழியர்) நற்றாயும் வருந்தி நிற்பதைக் கண்டார் தங்கள் வருத்தத்தைப் புலப்படுத்துதல் கண்டோர் இரக்கம் எனப்படும். இதற்கு உட்பிரிவுகளும் விரிவுகளும் குறிக்கப்பெறவில்லை.

**செவிலி பின்தேடிச் சேறலின் விரிவு**

தலைவி தனது நட்பு வட்டமும் நற்றாயும் வருந்துமாறு உடன் போக்காகச் சென்ற பாதையிலேயே பின் தொடர்ந்து செவிலி தேடிச் செல்லுதல் செவிலி பின் தேடிச் சேறல் எனப்படும். இது ஒன்பது வகையான விரிவுகளை உடையது. அவையாவன,

(1) தலைவியின் பிரிவைத் தாங்காத நற்றாயைத் தேற்றுதல்.

(2) செல்லும் வழியில் மூன்று தண்டுகளைக் கையில் கொண்ட அந்தணரை (முக்கோல் பகவர்) வினவுதல்.

(3) அந்தணர் செவிலியிடம் ‘உடன்போக்கு உலக இயல்புதான்’ என்று காரணம் கூறி விளக்குதல்.

(4) செவிலி, பாலை நிலத்தில் செல்லும் போது இடைவெளியில் சந்தித்த ஒரு பெண்ணிடம் புலம்பிக் கூறுதல்.

(5) செவிலி இடைவழியில் கண்ட குரா என்னும் மரத்துடன் புலம்பிப் பேசுதல்.

(6) தான் செல்லும் வழியில் பாதச் சுவடுகளைக் கண்டு அவை தலைவியின் பாதச் சுவடுகளாகுமோ என்று வருந்திப் பேசுதல்.

(7) செவிலி போகும் வழியில் எதிர்ப்படும் தலைமக்களைப் பார்த்துத் தன் மகள் சென்ற விவரம் கேட்டல்.

(8) எதிரில் வந்தோர் செவிலியின் புலம்புதலைக் கேட்டு அவளுக்கு ஆறுதலான சில வார்த்தைகளைக் கூறுதல்.

(9) செவிலி, நெடுந்தூரம் நடந்தும் தன் புதல்வியைக் காணாமையால் துன்பம் மிகுந்து வருந்திக் கூறுதல்.

**மீட்சி**

செவிலித்தாய் தலைவியைத் தேடிச் சென்று காணாமல் திரும்பி வருதல் மீட்சி எனப்படும். உடன்போக்காகச் சென்ற தலைவனும் தலைவியும் மீண்டு வருதலையும்

மீட்சி என்று குறிப்பிடுவர். இவ்விரு நிகழ்வுகளையும் உள்ளடக்கியதாக அமையும் மீட்சி என்பது நான்கு வகைகளை உடையது.

**தெளித்தல்**

உடன் போக்காகச் சென்ற தலைவியைத் தேடிக் காணாமல் திரும்பி வந்த செவிலித்தாய் நற்றாயிடம் 'தலைவி நெடுந்தூரம் சென்று விட்டாள்' என்று கூறி அவளைத் தெளிவித்தல் தெளித்தல் எனப்படும். அவ்வாறே தலைவன் மீண்டு வரும்போது தலைவியினது ஊர் நெருங்கிவிட்டதனைக் கூறுதலும், தெளித்தல் ஆகும்.

**மகிழ்ச்சி**

தலைவி தலைவனுடன் திரும்பி வருவதை, அவளுக்கு முன்னே செல்லும் சிலர் தோழியிடம் சென்று கூறுவர். அது கேட்டு, தோழி மகிழ்வாள் உடனே தோழி சென்று நற்றாயிடம் கூறுவாள். அவளும் அதைக் கேட்டு மகிழ்வாள். இவ்விரண்டும் மகிழ்ச்சி என்னும் வகையின் விளக்கங்கள் ஆகும்.

**வினாதல்**

தலைவி மீண்டு வருவதை அறிந்த நற்றாய் தன் மகளைத் தலைவன் நம் மனைக்குக் கொண்டு வருவானா அல்லது தன் நகர்க்கே கொண்டு செல்வானா என்று, வெறியாட்டு நிகழ்த்தும் வேலனிடம் கேட்பது வினாதல் எனப்படும்.

**செப்பல்**

தலைவியின் வருகையை அவளுக்கு முன் சென்றோர் தோழியிடம் கூறுதல் செப்பல் எனப்படும்.

**மீட்சியின் விரிவு**

மேலே நான்கு வகைப்பட்டதாக உரைக்கப்பட்ட மீட்சி என்பது ஆறு வகைப்பட்ட விரிவுக் கிளவிகளைக் கொண்டதாகும். அவையாவன :

(1) தலைவி நெடுந்தூரம் சென்றதைச் செவிலி நற்றாயிடம் கூறுதல்.

(2) திரும்பி வரும்போது தலைவன் தாம் தலைவியின் ஊரை நெருங்கி விட்டதைத் தலைவிக்கு கூறுதல்.

(3) தனது வருகையைத் தோழிக்கு அறிவிக்குமாறு தனக்கு முன் செல்கின்றவரிடம் தலைவி கூறுதல்.

(4) முன் சென்றோர் தோழிக்குத் தலைவியின் வருகையைத் தெரிவித்தல்.

(5) தலைவியின் வருகையைத் தெரிந்துகொண்ட தோழி அதனை நற்றாய்க்குக் கூறுதல்.

(6) தலைவியின் வருகையை உணர்ந்த நற்றாய் வேலனைப் பார்த்துத் தலைவன் தன் மகளுடன் இங்கு வருவானோ தன் நகர்க்கே செல்வானோ என்று வினவுதல்.

இவை யாவும் மீட்சியின் விரிவுக் கிளவிகளாக அமைகின்றன.

ஒரு வகையில் மீட்சியின் நான்கு வகைகளுக்கான விளக்கவுரைகளாகவும் இவற்றைக் கொள்ளலாம்.

**தன்மனை வரைதல்**

உடன்போக்காகச் சென்ற தலைவன் திரும்பி வருவது மீட்சி எனப்படும். அவ்வாறு மீண்டு வந்த தலைவன் தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்று அங்குள்ள தன் மனையில் திருமணம் செய்து கொள்வது, தன்மனை வரைதல் எனப்படும்.

**தன்மனை வரைதலின் வகைகள்**

தலைவன் தலைவியைத் தன் மனையின்கண் வரைந்துகொள்ளும் நிகழ்ச்சியில் மூன்று உட்பிரிவுகள் வகைகளாக அமைந்துள்ளன. அவையாவன

**வினாதல்**

நற்றாய் "நம் வீட்டிற்கு வந்து தலைவிக்குத் திருமணம் நடத்தும்படியாகத் தலைவனின் நற்றாயிடம் கேட்கலாமா?" என்று செவிலியைப் பார்த்து வினவுதல் வினாதல் எனப்படும்.

**செப்பல்**

தலைமகன், தலைவியைத் தன் மனையின் கண்ணேயே மணந்து கொண்ட செய்தியைத் தோழி செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும் என்றவாறு ஒருவர் பிறருக்குச் சொல்லுதல் செப்பல் எனப்படும்.

**மேவல்**

தலைமகன் தன் மனையிலேயே தலைவியை மணந்துகொண்ட செய்தியை 'உன் உறவினரிடம் கூறுக' என்று தோழிக்குக் கூறுதல் மேவல் எனப்படும்.

**தன்மனை வரைதலின் விரிவுக் கிளவிகள்**

வினவுதல், செப்புதல், மேவுதல் என்னும் மூன்று நிலைப்பாடுகளில் நிகழ்ந்த தன்மனை வரைதலின் விரிவுக் கிளவிகளாகப் பலவற்றை நாற்கவிராச நம்பி குறிப்பிட்டுச் சொல்கிறார். அவை யாவும் தன்மனை வரைதல் என்னும் நிகழ்ச்சியின் வகைகளை விளக்குவன. அவையாவன :

(1) தலைவியின் மணவிழாவினைத் தன் மனையின்கண்ணே காணும் வேட்கையுடன் (விருப்பத்துடன்) நற்றாய், ""நம் மனைக்கு அழைத்து வந்து நம் புதல்வியைத் தலைவன் திருமணம் செய்து கொள்ளும்படி அவனுடைய அன்னையரைக் கேட்கலாமா?"" என்று செவிலியிடம் வினவுதல்.

(2) தலைவன் தன் மனைக்கண் மணந்து கொண்ட செய்தியைச் செவிலி தோழி வாயிலாக அறிந்து கொள்ளுதல்.

(3) தான் அறிந்த செய்தியைச் செவிலி நற்றாய்க்குக் கூறுதல்.

(4) தலைவன், தங்கள் வரைவைச் சுற்றத்தவரிடம் சொல்லுமாறு தோழியிடம் கூறுதல்.

(5) அச்செய்தியை ”நான் முன்பே சொல்லிவிட்டேன்” என்று தோழி கூறுதல்.

இவ்வைந்தும் தன்மனை வரைதலின் விரிவுகள் ஆகும்.

**உடன்போக்கு இடையீடு**

தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டு உடன்போக்காக ஊரை விட்டுச் செல்லுவர். அவ்வாறு செல்லும் உடன்போக்கு, இடையில் சுற்றத்தவரால் தடைப்படுதல் உடன்போக்கு இடையீடு எனப்படும்.

தலைவன் தலைவியை உடன்போக்கிச் சென்றான் என்பதை அறிந்த தலைவியின் சுற்றத்தார் அவர்களைப் பின்தொடர்ந்து செல்வர். அப்போது தலைவன் தலைவியைச் சுற்றத்தாரிடம் விட்டு விட்டுச் செல்லுதல் என்பதையும் உடன்போக்கு இடையீடாகக் குறிப்பிடுவர்.

**உடன்போக்கு இடையீட்டின் வகைகள்**

உடன்போக்கு இடையீடு, போக்கு அறிவுறுத்தல், வரவு அறிவுறுத்தல், நீக்கம், இரக்கமொடு மீட்சி என்னும் நான்கு வகைகளை உடையது.

**போக்கு அறிவுறுத்தல்**

தலைவனுடன் தன் ஊரைவிட்டு நீங்கும் தலைவி செல்லும் வழியில் எதிரே வரும் அந்தணர்களிடம் தன் செலவைத் தோழிக்கும் நற்றாய்க்கும் உணர்த்துமாறு வேண்டுதல் அவ்வாறே தலைவியின் உடன்போக்கை அந்தணர்கள் சென்று நற்றாய்க்கு உணர்த்துதல். இவ்விரண்டும் போக்கு அறிவுறுத்தல் எனப்படும்.

**வரவு அறிவுறுத்தல்**

தன்னுடைய சுற்றத்தினர் பின்தொடர்ந்து வருவதைத் தலைமகள் தலைவனுக்கு எடுத்துக் கூறுதல் வரவு அறிவுறுத்தல் எனப்படும்.

**நீக்கம்**

தலைவியின் சுற்றத்தினர் பின்தொடர்ந்து வருவதை உணர்ந்த தலைவன் தலைவியை விட்டுவிட்டுத் தான் மட்டும் நீங்கிச் செல்லுதல் நீக்கம் எனப்படும்.

**இரக்கமொடு மீட்சி**

தன் சுற்றத்தினரைக் கண்டதும் தன்னைத் விட்டுத் தலைவன் நீங்கி விட்டதற்காக மிகுந்த வருத்தப்பட்ட தலைவி, முடிவில் சுற்றத்தினருடன் மீண்டு தன் ஊருக்கே திரும்புதல் இரக்கமொடு மீட்சி எனப்படும்.

**உடன்போக்கு இடையீட்டின் விரிவு**

தலைமக்களின் உடன்போக்கு சுற்றத்தவரால் தடுத்து நிறுத்தப்படுதலை உடன்போக்கு இடையீடு என்று கண்டோம். அதற்குரிய விரிவுக் கிளவிகளை இனிக் காண்போம்.

(1) தன் ஊரை விட்டு நீங்கும் தலைவி எதிரில் வரும் அந்தணரிடம் தான் தலைவனுடன் செல்லும் செய்தியைத் தோழியிடம் கூறுமாறு சொல்லுதல்.

(2) தன் ஊரை விட்டு நீங்கும் தலைவி அவர்களிடம், அச்செய்தியைத் தன் தாயிடம் சொல்லுமாறு வேண்டுதல்.

(3) தலைவியின் உடன்போக்கை அந்தணர் நற்றாயிடம் கூறுதல்.

(4) தலைவியின் உடன்போக்கை அறிந்த சுற்றத்தார் கோபப்பட்டுக் கூட்டமாகப் பின் தொடர்ந்து செல்ல, அதைக் கண்ட தலைவி அச்செய்தியைத் தலைவனுக்குக் கூறுதல்.

(5) தலைவியின் சுற்றத்தாரை எதிர்த்துத் தாக்க விரும்பாத தலைவன் தலைவியைச் சுற்றத்தினரிடமே விட்டுவிட்டுத் தனித்துச் செல்லுதல்.

(6) சுற்றத்தினருடன் திரும்பிச் செல்லும் தலைவி புறங்காட்டிச் செல்லும் தலைவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே செல்லுதல்.

இவையாவும் உடன்போக்கு இடையீட்டின் விரிவுக் கிளவிகள் ஆகும்.

**மணம் முற்றுப் பெறல்**

வரைவியலின் நிறைவாக அமையும் இறுதி நூற்பா, வரைதல் என்றால் என்ன என்பதைப் பற்றி விளக்குவதாக அமைகிறது.

தன்னூரிலும் தன் மனையிலும் வரைதல் நிகழாதபோது தலைவன் தலைவியின் இல்லத்திற்கு வர அவனைத் தலைவியின் பெற்றோர் எதிர்கொண்டு அழைப்பர். பின்னர் அந்தணர், சான்றோர் முன்னிலையில் உரிய கொடை கொடுத்து, தலைவன் தலைவியை மணந்து கொள்ளுதல் தகுதியான செயல்பாடாகும் என்பது வரைதல் பற்றிய அகப்பொருள் விளக்கமாகும்.

**வினாக்கள்**

1. வரைவின் இலக்கணம் கூறுக.
2. பாங்கி அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
3. களவு எவ்வாறு வெளிப்படும் என்பதை விளக்குக.
4. உடன் போக்கு குறித்து விவரி?
5. மீட்சி குறித்து விரிவாக எழுதுக.
6. வரைவு மலிதல் குறித்து விளக்கி எழுதுக.
7. உடன்போக்கின் இடையீடு குறித்து எழுதுக.
8. வரைதல் என்றால் என்ன? விளக்கம் தருக.

# அலகு - 5

## கற்பியல்

கற்பாவது உயிரினும் சிறந்ததாகக் கொண்டொழுகும் குலமனிரது மனத்திண்மை கற்பு என்னும் தொழிற்பெயர் ஈண்டு ஓர் ஒழுகலாற்றினை உணர்த்தும் பண்புப் பெயராய் மனையற ஒழுக்கமாகப் சுப் பெற்றோரான் வகுக்கப்பட்ட நெறியினைக் குறிக்கோளாக ஏற்று அதனின்றும் வழுவாதொழுகும் மனத் திண்மையைக் குறித்து நின்றது.

கற்பு கொண்டாளையே தெய்வமாகக் கொண்டு அவற்கு ஆக்கமும் புகழும் எய்தத்தன் உயிர் முதலியவற்றையும் தற்தொழுகும். செயலார்ந்த தலைவியது பண்பாகும். அத்தகு கற்புடை மனைவியைப் பேணி அவள்வழி ஒழுகும் ஒழுக்கம் தலைவற்கு அறனாகும். (தொல்.பொருள். 1. ச.பால)

**கற்பின் இலக்கணம்**

**பொற்பமை சிறப்பின் கற்பெனப் படுவது**

**மகிழ்வும் ஊடலும் ஊடல் உணர்த்தலும்**

**பிரிவும் பிறவும் மருவிய தாகும்.**

**(நம்பியகப்பொருள் - நூற்பா : 200)**

பொலிவமைந்த சிறப்பினை உடைய கற்பென்று சொல்லப்படுவது உள்ளத்தில் மகிழ்ச்சியும் ஊடலும் ஊடல் உணர்த்தலும் பிரிவும் பொருந்தியதாம்.

**கற்பிற்குரிய கிளவித்தொகை**

201. **இல்வாழ்க் கையே பரத்தையிற் பிரிவே**

**ஓதற் பிரிவே காவல் பிரிவே**

**தூதிற் பிரிவே துணைவயின் பிரிவே**

**பொருள்வயின் பிரிவுஎனப் பொருந்திய ஏழும்**

**வளமலி கற்பின் கிளவித் தொகையே.**

மேலே குறிக்கப்பட்ட ஏழும் கற்பிற்குரிய கிளவித்தொகைகள் ஆகும்.

1. **இல்வாழ்க்கை:** களவு வாழ்க்கை மேற்கொண்ட தலைவனும் தலைவியும் மணம் முடித்து இல்லறத்தில் ஈடுபட்ட வாழ்க்கையின் மேன்மையைக் கூறுதல்.

2. **பரத்தையிற் பிரிவு:** தலைவன் பரத்தையின் மேற் காதல் கொண்டு தலைவியைப் பிரிந்து பரத்தையுடன் இருத்தல்.

3 **ஓதல்பிரிவு:** தலைவன் கல்வி கற்பதற்காகத் தலைவியைப் பிரிந்து வேறு இடத்திற்குச் செல்லம்ஸ்

4. **காவற் பிரிவு:** நாட்டைக் காக்கும் பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து போதல்,

5. **தூதில் பிரிவு** மன்னர்கள் போரிட முனைந்தபோது அவர்களிடம் தூது சென்று போரைத் தவிர்க்கப் பேசுவது தூதிற் பிரிவு."

6. **துணைவயின் பிரிவு:** மன்னர்களிடையே போர் அறிகுறி தென்படும்போது ஒருமன்னரின் தண்பருக்காக மன்னனின் பொருட்டுச் சென்று துணையாக இருக்கப் பிரிவது.

**7. பொாருள் வயின்பிரிவு**: இல்வாழ்க்கைக்குத் தேவையான பொருளை ஈட்டும் பொருட்டுத் தலைவியைப் பிரிதல்.

### 1. இல்வாழ்க்கை

தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும்போது அவர்களும் அவர்களுக்குத் துணையாக நிற்பவர்களும் வாழும் வாழ்க்கையை விளக்குவது ஆகும்.

**1 இல்வாழ்க்கையின் வகை - 4**

**202.** **கிழவோன் மகிழ்ச்சி, கிழத்தி மகிழ்ச்சி**
**பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சிஎன்று**
**ஈங்கு நால்வகைத்து இல்வாழ்க் கையே.**

தலைவன், தலைவி, பாங்கி, செவிலி எனக் கற்பு வாழ்க்கைக்கு அடிப்படையாக உள்ள நால்வரின் மகிழ்ச்சி பற்றி விளக்குவது இவ்வாழ்க்கையின் வகையாகும்.

1. **கிழவோன் மகிழ்ச்சி:** இல்வாழ்க்கையின் மகிழ்ச்சியைத் தலைவன். தலைவியின் முன்னிலையில் பாங்கியைப் புகழ்வதால் புலப்படுத்துதல்.

2 **கிழத்தி மகிழ்ச்சி:** இல்லறத்தில் மகிழ்ச்சியாக வாழும் தலைவி, இது நாள் வரை தான் மகிழ்ச்சியாக இருந்தது எப்படி என்பதைப் பாங்கிக்கு உரைப்பதுவழிப் புலப்படுத்துதல்.

3. **பாங்கி மகிழ்ச்சி** : மணம் நடைபெறுவதற்கு முன்பு வரை தலைவனும் தலைவியும் ஆற்றி இருந்ததைக் கேட்டும் இல்லற வாழ்வில் இருவரும் அடைந்துள்ள அன்பையும் புரிதலையும் பிறருக்குக் கூறியும் தோழி மகிழ்ச்சியைப் புலப்படுத்துதல்.

4. **செவிலி மகிழ்ச்சி** : தலைவனும் தலைவியும் வாழும் இல்லத்திற்குச் சென்று அவர்கள் மகிழ்வோடு வாழ்வதைப் பார்த்து நற்றாயிடம் கூறும்போது செவிலியின் மகிழ்ச்சியைப் புலப்படுத்துதல்.

**2 இல்வாழ்க்கையின் விரி**

**203.** **தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தலும்**
**தலைவனைப் பாங்கி வாழ்த்தலும் தலைவியை**
**வரையும்நாள் அளவும் வருந்தாது இருந்தமை**
**உரையாய் என்றலும் பெருமகள் உரைத்தலும்**
**தலைவனைப் பாங்கி வரையும்நாள் அளவும்**

**நிலைபெற ஆற்றிய நிலை வினாதலும்**

**மன்றல் மனைவரு செவிலிக்கு இருளை**

**அன்புறவு உணர்த்தலும் வாழ்க்கைநன்று அறைதலும்**

**மணமனைச் சென்று வந்த செவிலி**

**பொற்றொடி கற்பில் நற்றாய்க்கு உணர்த்தலும்**

**நன்மனை வாழ்க்கைத் தன்மை உணர்த்தலும்**

**அன்னவர் காதல் அறிவித்தலும் எனும்**

**இன்னவை பத்தும் இல்வாழ்க்கை விரியே.**

மேலே குறிக்கப்பட்ட புத்தும் இல்வாழ்க்கையின் விரி என்பவற்றுள் அடங்கும்.

**1. தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்**

உன்தோழியின் உதவி இல்லை என்றால் நாம் இந்தக் கற்பு வாழ்க்கையின் உன்னதத்தைப் பெற்றிருக்க முடியாது“ எனத் தலைவியின் முன்னிலையில் தலைவன் பாங்கியைப் புகழ்தல்.

தலைவியே! உன்வீட்டில் உன் உடல் மாறுபாடு கண்டு வெறியாட்டுச் செய்ய முற்பட்டபோது நம் களவொழுக்கத்தைக் கூறி அவர்களை நெறிப்படுத்தியதால் தான் இன்று உன் மூங்கில் அனைய தோளை என்னால் தழுவ முடிந்தது.

**நின்நோய்க்கு இயற்றிய வெறிநின் தோழி**

**என்வயின் நோக்கலின் போது பன்னாள்**

**வருந்திய வருத்தம் தீர நின்**

**திருந்திழைப் பணைத்தோள் புணரந்து வந்ததுவே**

**(தொல்.பொருள்.உரைமேற்கோள்)**

**2. தலைவனைப் பாங்கி வாழ்த்தல்**

எந்நாளும் தலைவியைப் பிரியாமல் பல்லாண்டு வாழ வேண்டுமென்று பாங்கி தலைவனை வாழ்த்துதல்.

மணற் பரப்பிலுள்ள ஞாழல் மரத்தின் பூப்போன்றதே தேமல் படர்ந்த மார்பகத்தை உடைய மடந்தையாகிய தலைவியை எப்போதும் மகிழ்ச்சியுடன் வைத்து இனிதே வாழ்வாயாக!

**எக்கர் ஞாழல் பூவின் அன்ன**

**கணங்கு வளர் இளமுலை மடந்தைக்கு**

**அணங்கு வளர்த்து அகறல் வல்லாதீமோ! (ஐங்.149)**

**3. பாங்கி தலைவியை வரையும் நாளளவும் வருந்தாது இருந்தமை வினாதல்**

தலைவனை மணக்கும் வரை எவ்வாறு வருந்தாது பொறுமையாக இருந்தாய் எனப் பாங்கி தலைவியை வினவுதல்,

கோங்கின் அரும்பனைய மார்பகத்தை உடைய தலைவியே! திருமணத்திற்கு முன்புவரை ஊராரின் பழிச் சொல்லை ஏற்று எவ்வாறு ஆற்றி இருந்தாய் யாங்கனம் ஆற்றி இருந்தனை நீ....பூங்கனம் ஆர்குழலார் அலர் மாலைப் பொறை சுமந்தே (தஞ்,கோ.369)

**4. தலைமகள் வருந்தாது இருந்ததற்குக் காரணம் கூறல்**

மணம் முடிப்பதற்கு முன் தான் பழிச் சொல்லை ஏற்று ஆற்றி இருந்ததைத் தலைவி பாங்கியிடம் கூறுதல்.

என் ஆருயிர்ப் பாங்கியே! தலைவன் தன் கையால் அளித்த,நெய் போன்ற நிறத்தையுடைய அசோக மரத்தழையையே தெப்பமாகக் கொண்டு ஊராரின் பழிவெள்ளத்தை நீந்திக் கடந்தேன்: தழையே புணையாக் கொண்டு நீந்தினனே (தஞ்.கோ.370)

**5. பாங்கி தலைவனை வரையும் நாளளவும் நிலைபெற ஆற்றிய நிலமை வினாதல்**

“தலைவியைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்புவரை எவ்வாறு பொறுத்து உறுதியாக இருந்தாய்“ எனத் தலைவனிடம் பாங்கி வினவுதல்.

அயிரை மீன் மேயும் பரந்த நீர்நிலையில் ஆம்பல் மலர் பறிப்பவர் நீர் வேட்கை அடைந்தாற் போலக் களவுக் காலத்தில் அவளோடு மகிழ்ந்திருந்தாலும் மணம் செய்து கொள்ளாமல் இருந்தது ஓர் அச்ச உணர்வைக் கொடுத்தது களவுக் காலத்தில் மாதம் ஒருமுறை பிறை காண்பது போலத் தலைவியைக் கண்டது எனப் பலவற்றைத் தலைவன் பாங்கியிடம் கூறித் தான் ஆற்றி இருந்த நிலையை விளக்கினான்.

**அயிரை பரந்த அந்தண் பழனத்து**

**ஏந்தெழில் மலர தும்புடைத் திரள்கால்**

**ஆம்பல் குறுநர் நீர்வேட்டாங்கு, இவள்**

**இடைமுலைக் கிடந்தும் நடுங்கல் ஆனீர்**

**தொழுதுகாண் பிறையின் தோன்றி யாம்நுமக்கு**

**அரியம் ஆகிய காலைப்**

**பெரிய தோன்றனிர் நோகோ யானே (குறந்.178)**

**6. மன்றல் மனை வருசெவிலிக்கு இகுளை அன்புறவு உணர்த்தல்**

தலைவியின் இல்லற வாழ்க்கையைக் காணவந்த செவிலியிடம் அவர்கள் மனம் நிறைந்து வாழ்வதை உணர்த்துதல்.

மருதநிலத் தலைவன், நம்முடைய தலைவியை அன்போடு தழுவிக் கொண்டு பாணரின் தேர்ந்த இசையை நுகர்ந்தபடியே காதலின்பம் பெறுகின்றான்.

**நயந்த காதலித் தழீஇப் பாணர்**

**நயம்படு முரற்கையின் யாத்த பயன் தெரிந்து**

**இன்புறு புணர்ச்சி நுகரும்**

**மென்புல வைப்பின் நாடுகிழ வோனே (ஐங்.407)**

**7. பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக்கு உணர்த்தல்**

தலைவன் தலைவியின் இல்வாழ்க்கை அமைந்திருப்பதைப் பாங்கி செவிலியிடம் கூறுதல். சிறப்பாக

நம்தலைவி இரந்துண்டு வாழ்வோர்க்குத் தானம் செய்து அவர்கள் இன்னல் போக்குகிறாள் இல்லறம் இனிதாகவே நடத்துகின்றது: சனவேதனை கெடத் தானங்கள் ஈதலின் சாலவும் நன்று. எனவே நடக்கின்றதால் அன்னை! நாள்தோறும் இல்லறமே (தஞ்.கோ.373)

**8. மணமனைச் சென்று வந்த செவிலி தலைமகள் கற்பு நற்றாய்க்கு உணர்த்தல்**

தலைவன் தலைவியை அவர்கள் இல்லத்தில் கண்ட செவிலி தலைவியின் கற்பு வாழ்க்கையின் சிறப்பினை நற்றாய்க்கு உரைத்தல்.

தலைவி நம்மில்லத்தில் இருக்கும்போது தேனும் பாலும் கலந்த உணவை உண்ணாது ஓடுவாள். இன்று வறுமை நிறைந்த தலைவன் வீட்டில் ஒருநேரம் விட்டு மறு நேரம் உண்கிறாள். தான் பிறந்த இடத்துச் செல்வ நிலையை மறந்து இவ்வாறு வாழ எப்படிக் கற்றுக் கொண்டான்?

**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென**

**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்**

**ஒழுகு நீர் நுணங்கு அறல்போல**

**பொழுது மறுத்து உண்ணும் சிறுமதுகையளே! (நற்.110)**

**9. செவிலி நற்றாய்க்குத் தலைமகள் நன்மனை வாழ்க்கைத் தன்மை உணர்த்தல்**

தலைவி தான் புகுந்த இடத்தில் சிறப்பான வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதைச் செவிலி நற்றாய்க்கு உணர்த்துதல்.

நன்கு கெட்டியான தயிரைத் தன் காந்தள் மெல்விரல்களால் பிசைந்தாள் தாளிக்கும்போது கண்களில் புகை படர்ந்தது. புளிப்புச்சுவையுடைய குழம்மைவைக்கும்

போது நெகிழ்ந்த ஆடையைச் சரி செய்து கொண்டாள். தலைவனுக்கு உணவு பரிமாறினாள். அவன். “உணவு இனிய சுவை உடைத்து“ என்னும்போது அவள் மகிழ்ந்தது. நெற்றியில் தெரிந்தது.

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**

**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ**

**குவளை உண்கண் குய்ப்புகை கமழத்**

**தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**

**இனிதுஎனக் கணவன் உண்டலின்**

**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்.167)**

10. செவிலி நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தல்

தலைவனும் தலைவியும் உள்ளன்போடு வாழ்வதைச் செவிலி நற்றாய்க்குக் கூறுதல்.

சிறிய ஊரின் கண்ணே தலைவி வாழ்கிறாள். தலைவன் வேந்தனால் ஏவப்பட்ட தொழிலைச் செய்ய வேற்றூருக்குச் சென்றாலும் தலைவியே நினைந்து அவ்வூரில் தங்காது விரைந்து வந்து விடுவான்.“

**சீறூ ரோளே மடந்தை வேறு ஊர்**

**வேந்து விடு தொழிலோடு செலினும்**

**சேந்து வரல் அறியாது செம்மல் தேரே (குறுந்.242)**

| **இல்வாழ்க்கை** | |
|---|---|
| **வகை-202** | **விரி - 203** |
| 1. கிழவோன் மகிழ்ச்சி | தலைவன் தலைவி முன் பாங்கியைப் புகழ்தல் (1) |
| 2. கிழத்தி மகிழ்ச்சி | பெருமகள் உரைத்தல் (4) |

| | |
|---|---|
| | தலைவனைப் பாங்கி வாழ்த்தல் (2)<br>பாங்கி தலைவியை வரையும் நாளளவும் வருந்தாது இருந்தமை வினாதல் (3) |
| 3. பாங்கி மகிழ்ச்சி | பாங்கி தலைவனை வரையும் நாளளவும் நிலைபெற ஆற்றி இருந்தமை வினாதல் (5)<br>மன்றல் மனை வருசெவிலிக்கு இகுளை அன்புறவு உணர்த்தல் (6)<br>பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக்கு உணர்த்துதல் (7) |
| 4. செவிலி மகிழ்ச்சி | மணமனைச் சென்றுவந்த செவிலி தலைமகள் கற்பு நற்றாய்க்கு உணர்த்தல் (8)<br>செவிலி நற்றாய்க்குத் தலைமகள் நன்மனை வாழ்க்கைத் தன்மை உணர்த்தல் (9)<br>செவிலி நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தல் (10) |

**2. பரத்தையிற் பிரிவு**

இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவன் தலைவியைப் பிரிந்து புறத்தொழுக்கம் மேற்கொள்ள அயல் மனைக்கும் அயல்சேரிக்கும் ஊரின் வெளிப் பகுதிக்கும் சென்று பரத்தையரோடு சில காலம் வாழ்வது பரத்தையிற் பிரிவாகும். இப்பிரிவு, மருத நிலத்திற்குரிய ஊடலும் ஊடல் நிமித்தமும் என்னும் உரிப்பொருள் சார்ந்ததாகும்.

**பரத்தையின் பிரிவின் வகை**

**204.** **வாயில் வேண்டல் வாயில் மறுத்தல்**

**வயில் நேர்வித்தல் வாயில் நேர்தல்என்று**

**ஆய பரத்தையின் அகற்சிநால் வகைத்தே**

மேலே குறிக்கப்பட்ட நான்கும் பரத்தையின் பிரிவின் வகைகள் ஆகும்.

**1. வாயில் வேண்டல்:** பரத்தையிடம் சென்ற தலைவன் மீண்டும் வந்தது தலைவியின் ஊடலைத் தணிவிக்கப் பாங்கியை வாயிலாக வேண்டுதல்

**2. வாயில் மறுத்தல் :** பாணன் முதலியோரைத் தலைவன் வாயிலாக அனுப்ப, ஊடல் தணியாத தலைவி அவர்களை மறுத்தல்.

**3. வாயில் நேர்வித்தல் :** தலைவியிடம் உரையாடிய பாங்கி, வாயில்களை ஏற்று ஊடல் தணிந்து தலைவனை ஏற்றுக் கொள்ளச் செய்தல்.

**4. வாயில் நேர்தல் :** தலைவி பாங்கியின் சொற்கேட்டு ஊடலை ஏற்றுத் தலைவனுடன் பிணக்கு ஒழித்தல்.

**2 பரத்தையிற் பிரிவின் விரி - 2**

பரத்தையிற் பிரிவின் முதல் விரி பெரும் பிரிவாக இரண்டு வகைகளைக் கொண்டுள்ளது.

1. உணர்த்த உணரும் ஊடலுக்குரிய கிளவிகள்
2. உணர்த்த உணரா ஊடலுக்குரிய கிளவிகள்

முன்னது பதினொரு விரிகளையும் பின்னது பதினான்கு விரிகளையும் கொண்டுள்ளன.

**உணர்த்த உணரும் ஊடலுக்குரிய கிளவிகள் -11**

தலைவன் பரத்தையின் பிரிந்து வந்து வாயில் வேண்டியவழித் தலைவி வாயில் மறுக்கவே, தலைவன் தன்மீது குன்றமின்று என்று தலைவி மனம் கொள்ளும் வகை தெளிவித்தும் தன் குற்றத்தைப் பொறுக்குமாறு அவளை வேண்டியும் அவளது ஊடலைப் போக்குவித்தல்.

**205 காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு**
**ஏது ஈதாம் இவ்விறைவிக்கு என்றலும்**
**தனித்துழி இறைவி துனித்து அழுது இரங்கலும்**
**ஈங்குஇது என்?எனப் பாங்கி வினாதலும்**

**இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தலும்**

**தலைவியைப் பாங்கி கழறலும் தலைவி**

**செவ்வணி அணிந்து சேடியை விடுப்புழி**

**அவ்வணி உழையர்கண்டு அழுங்கிக் கூறலும்**

**பரத்தையர் கண்டு பழித்தலும் பரத்தையர்**

**உலகியல் நோக்கி விடுத்தலில் தலைவன்**

**வரவுகண்டு உவந்து வாயில்கள் மொழிதலும்**

**வரவுணர் பாங்கி அரிவைக்கு உணர்த்தலும்**

**முதிரா மென்முலை எதிர்கொண்டு பணிதலும்**

**புணர்ச்சியின் மகிழ்வும் என்று உரைத்த பன்னொன்றும்**

**உணர்த்த உணரும் ஊடற்கு உரிய.**

மேற் குறிப்பிட்டவாறு உணர்த்த உணரும் ஊடலுக்குரிய கிளவிகள் பதினொன்று ஆகும்.

**1. காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது ஈதாம் இவ் இறைவிக்கு என்றல்**

தலைவன் பிரிந்து சென்றதே தலைவியின் ஊடலுக்குக் காரணம் ஆயிற்று என்றுக்கூறுதல்.

திருவிழா நடைபெறும் வீதியில் பரத்தையர் மருத நிலத் தலைவனைச் சூழ்ந்து கொண்டனர். இந்நிகழ்வே தலைவி தலைவனுடன் ஊடல் கொள்ளக் காரணமாயிற்று : தயங்குழல் சூறையர் சூறை கொள்வான் வயல் ஊரனைச் சூழ்ந்தனரே. (தஞ். கோ.377)

**2. தனித்துழி இறைவி துனித்தழுது இரங்கல்**

தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவி துன்பப்பட்டு அடிக்கடி அழுது புலம்புதல்.

வாடைக்கால யாமப் பொழுதில் நுளம்புக்கடியின்போது மாடு அசைவதால் கழுத்திலுள்ள மணியின் நாக்கும் அசைந்து மெல்லிய ஒலியை எழுப்பும். அது போலத் தலைவனைப் பிரிந்து வாடும் என் இமைகளில் தேங்கியுள்ள கண்ணீரும் துளித்துளியாக விழும். என்போன்று வருந்தும் பிற மகளிரும் உளரோ?

**சிறைபனி உடைத்த சேயரி மழைக்கண்**

**பொறையரு நோயொடு புலம்புஅலைக் கலங்கிப்**

**பிறரும் கேட்குநர் உளர்கொல்? உறைசிறந்து**

**ஊதை தூற்றும் கூதிர் யாமத்து**

**ஆன்நுளம் புலம்புதொறும் உளம்பும்**

**நாநவில் கொடுமணி நல்கூர் குரலே (குறுந்.86)**

**3 . ஈங்கிது என்னெனப் பாங்கி வினாதல்**

அடிக்கடி அழுது புலம்பிக் கொண்டிருக்கும் தலைவியின் வருந்தத்திற்குக் காரணம் யாது? எனப் பாங்கி தலைவியை வினவுதம்.

உயிர் போன்ற தலைவர் உன்னை எப்போதும் தழுவி மகிழ்ச்சியை அளிக்கும்போது அவரைப் பிரிந்தது போல வருத்தக் காரணம் யாது? நீ விம்மா வருந்துவது என் பிரிந்தாரின்? விளங்கிழையே“. (தஞ், கோ.379)

**4. இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்**

பரத்தையிடம் கொண்ட நட்பால் தலைவன் அடிக்கடித் தலைவன் பிரிதலைத் தலைவி பாங்கியிடம் கூறுதல்.

அன்னாய் - பாங்கியே! சேற்றில் வாழும் நண்டு அச்சேற்றுடனே முள்ளிச் செடியின் கீழ் உள்ள தன் வளையில் வாழும் ஊரை உடைய நம் தலைவன் களவொழுக்கத்தில் இனி எப்போதும் நின்னைப் பிரியேன் என்று கூறிய மொழி இப்போது என்ன ஆயிற்று?

**அள்ளல் ஆடிய புள்ளிக் கள்வன்**

**முள்ளிவேர் அளைச் செல்லும் ஊரன்**

**நல்ல சொல்லி மணந்து "இனி**

**நீயேன்" என்றது எவன்கொல் - அன்னாய்! (ஐங். 22)**

**5. தலைவியைப் பாங்கி கழறல்**

தலைவனைப் பிரிந்திருப்பதால் வருத்தப் பட்டிருக்கும் தலைவியைப் பாங்கி இடித்துரைத்தல்.

முள்ளிச் செடி வளர்ந்துள்ள நீர்நிலையில் வாழும் புள்ளிகளை உடைய நண்டு ஆம்பல் தண்டுகளை அறுக்கும் வளமுடைய மருதநிலத் தலைவன், இனி பரைத்தையர் ஒழுக்கத்தில் ஈடுபட மாட்டேன் எனக் கூறியபோதும் இன்னும் உன் கண்கள் பசலை கொள்வது ஏன்?

**முள்ளி நீடிய முதுநீர் அடைகரைப்**

**புள்ளிக் கள்வன் ஆம்பல் அறுக்கும்**

**தண் துறை ஊரன் தெளிப்பவும்**

**உண்கண் பசப்பது எவன்கொல்? அன்னாய் (ஐங்.21)**

**6. தலைவி செவ்வணி அணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல்**

தலைவி பூப்பு அடைந்ததை அறிவிக்கும் பொருட்டுப் பாங்கி ஒருத்திக்குச் செந்நிற மலர்களைச் சூட்டித் தலைவன் இருக்கும் பரத்தையர் வீட்டுக்கு அனுப்பியபோது அயல் இல்லப் பெண்டிர் வருத்திக் கூறுதல்.

செம்பட்டை உடுத்தி, செஞ்சாந்தைப்பூசி, சிவந்த செங்கழுநீர் மலரையும் அணிவித்து, பரத்தை நின்னை வசைமொழியால் பேசினாலும் நீ எதுவும் சொல்லாது திரும்புக எனப் பாங்கியிடம் கூறித் தலைவி தின்பால் அனுப்பியுள்ளதைத் தலைவனே நீ அறிக!

**அரத்தம் உடீஇ அணிபழுப்பப் பூசிச்**

**சிரத்தையால் செங்கழுநீர் சூடிப் பரத்தை**

**நினைநோக்கிக் கூறினும் நீமொழியல் என்று**

**மனைநோக்கி மாண விடும்**

**(திணைமாலை. 144)**

**7. பரத்தையர் கண்டு பழித்தல்**

செவ்வேடமிட்டு வரும் பாங்கியைக் கண்ட பரத்தையர் பழித்துப் பேசுதல்.

அருந்ததி போன்ற கற்புடையர் வாழும் பகுதியிலிருந்து பவளக்கொடி நீலம் பூத்தது போலப் பரத்தையர் வாழும் நம் சேரியில் தோன்றியுள்ளது. படி ஒன்றுசாலி அனையர் சேரிப் படர் பவளக்கொடி ஒன்று நிலம் மலர்ந்தது காட்ட... சேரிவாய் வந்து தோன்றியதே (தஞ்.கோ.383).

**8. பரத்தையர் உலகியல் நோக்கி விடுத்தலில் தலைவன் வரவு கண்டு உவந்து வாயில்கள் மொழிதல்**

தலைவி பூப்புற்றது அறிந்து. உலகியல் உணர்ந்த பரத்தையர் தலைவனைப் தலைவியின் பால் அனுப்ப இருப்பதைப் பாங்கியர் தலைவியிடம் கூறல்.

யாவரும் தொழுதேத்தும் கற்பினை உடைய தலைவி, பாங்கியைச் சேரிக்கு அனுப்பியதால் தலைவன் உலகியல் அறிந்து தலைவியிடம் திரும்பி விடுகிறான்.

**யாரும் தொழத்தகும் எம்பெருமாட்டி தன் ஏவலினால்**

**சேரும் பரத்தையர் சேரியிலே சென்ற சேடியைக் கண்டு**

**ஊரும் திரைப் புனல் ஊரன் வந்தான் இன்று உலகியற்கே**

**(தஞ்-கோ. 384)**

**9. தலைமகன் வரவு பாங்கி அரிவைக்கு உணர்த்தல்**

தலைவன் பரத்தையின் பிரிந்து வருவதை அறிந்து பாங்கி தலைவியிடம் கூறல்.

நம் தலைவர் உன்னை நினையாது பிரிந்தனர் ஆயினும் இப்போது மீண்டும் வந்து வாயிலில் நிற்கின்றார். குற்றம் பார்க்காது அவரை எதிர் கொள்வாயாக! குற்றம் கொள்ளாது எதிர் கொள்வதே குணம் ஆவது கோமளமே (தஞ்.கோ.385)

**10. தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்**

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவனைத் தலைவி பணிந்து ஏற்றல்.

பாங்கியே! திருமகள் அனைய மணம் வீசும் மாலை அணிந்த நம் தலைவரின் மலை போன்ற மார்பினை உடையவரைப் பணிவேன். திருவின் புனைநறுந் தார்வரை மார்பர் திருமுன் இன்றே (தஞ்.கோ.386)

**11. புணர்ச்சியின் மகிழ்தல்**

திரும்பி வந்த தலைவனை ஏற்று அவனுடன் தலைவி கூடி மகிழ்தல், புணர்ச்சி இன்பமுடையதாக அமைய வஊடலும் அளவோடு உணர்தலும் புணர்தலும் என மாறிமாறி அமையும்.

**ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமம்**

**கூடியார் பெற்ற பயன் (திருக்.1109)**

**உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள்-14-1**

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் தன்மேல் தவறு எதுமின்று எனப் பல காரணம் காட்டியும் செய்த தவற்றினைப் பொறுத்துக் கொள்வாயென வேண்டியும் தலைவியைத் தெளிவித்த இடத்தும் அவள் தன் வெகுளி நீங்காளாய்த் தலைவனிடம் ஊடல் நீடித்தல்.

**206.**

**வெள்ளணி அணிந்து விடுத்துழிப் புள்ளணி**

**மலைவேல் அண்ணல் வாயில் வேண்டலும்**

தலைவி நெய்யாடியது இதளை சாற்றலும்

தலவன் தன்மனத்து உவகை கூறலும்

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றலும்

தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தலும்

பாணன் முதலாப் பாங்கன் ஈறாப்

பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழி

மறுத்தலும் விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்டு

இறையோன் மகிழ்தலும் இறைமகள் விருந்துகண்டு

ஒளித்த ஊடல் வெளிப்பட நோக்கிச்

றேல் என்றவள் சீறடி தொழலும் இ.ஃ.து

எங்கையர் காணின் நன்றன்று என்றலும்

அங்கவர் யாரையும் அறியேன் என்றலும்

காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தலும்

தாமக் குழலியைப் பாங்கி தணித்தலும்

தணியாளாகத் தலைமகன் ஊடலும்

அணிவளைப் பாங்கி அன்பிலை கொடியைஎன்று

இணர்த்தார் மார்பனை இகழ்தலும் பிறவும்

உணர்த்த உணரா ஊடற்கு உரிய.

மேற்குறிப்பிட்டவாறு உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள் பதினான்கு ஆகும்.

**1. வெள்ளி அணிந்து விடுத்துழிப் புள்ளணி மலைவேல் அண்ணல் வாயில் வேண்டல்**

தலைவி குழந்தை பெற்றதைத் தலைவனுக்கு அறிவிக்கப் பாங்கிக்கு வெள்ளாடை உடுத்திச் சேரிக்குச் சென்றபோது அவன் அவளிடம் தலைவியிடம் தூதாகச் செல்லக் கூறுதல்.

பாங்கியே! ஒளி பொருந்திய நெற்றியை உடைய நம் தலைவி உன்னிடம் சினம் அடைய மாட்டாள். யான் பரத்தையின் பிரிந்ததால் என்னை ஏற்றுக் கொள்ள மறுக்கும் அவளிடம் தூது சென்று ஊடலைத் தணிப்பாயாக் உன்பால் புலவி உறாள், வண்ண வார்குழல் ஒண்ணுதலே (தஞ்.கோ.388)

**2. தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்**

குழந்தை பெற்ற தலைவி எண்ணெய்க் குளியல் செய்ததைப் பாங்கி தலைவனிடம் கூறுதல்.

குவளை மலர்களை மேய்ந்த குறுந்தாள் எருமை குடம் நிறையப் பாலைக் கொடுக்கும் மருத நிலத் தலைவனே! புதல்வனை ஈன்ற நம் தலைவி இன்று எண்ணெய்க் குளியல் செய்தாள்.

**குவளை மேய்ந்த குறுந்தாள் எருமை**

**குடநிறை தீம்பால் படுஉம் ஊர!**

**புதல்வனை ஈன்று இவள் நெய்யாடினளே!**

**(தொல்.பொருள். உரைமேற்கோள்)**

**3. தலைவன் தன்மனத்து உவகை கூறல்**

புதல்வனைப் பெற்ற தலைவி எண்ணெய்க் குளியல் செய்ததை அறிந்த தலைவன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துதல்.

குழந்தை ஈன்று எண்ணெய்க் குளியல் செய்த தலைவியை முதன்முதல் கண்ட நாளை விட இன்று அன்பு மிகுந்த நாளாகத் தோன்றுகின்றது.

**நெய்யணி மேனியில் ஐயவி பூண்ட நிலை அறிந்தே**

**கையணி வால்வளையைக் கண்ட நாளினும் காதன்மையே**

**(தஞ்.கோ.390)**

**4. தலைவிக்கு அவன் வரல் பாங்கி சாற்றல்**

தலைவன் பரத்தையிடமிருந்து தலைவியை நாடி வந்துள்ளதைப் பாங்கி கூறுதல்.

தலைவியே உன்னிடமிருந்து பிரிந்த தலைவர் இதுவரை வரவில்லை. அழகிய புதல்வனைப் பெற்றுள்ளாய் என்பதைச் சொன்னதும் நீடு தாள் வாழ்க எனச் சொல்வதற்கு முன்பே நம் இல்லத்திற்கு வந்து விட்டார்.

**ஏரார் புதல்வன் பிறந்தனன் வாழிய! என்னும் முன்னே**

**வாரார் வளமனை வந்து நின்றார் கங்குல் (தஞ்கோ.391)**

**5. தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தல்**

பரத்தையிடம் சென்று திரும்பிய தலைவனோடு மனம் ஒன்றாமல் தலைவி ஊடியிருத்தல்.

சுரும்புப் பாத்தியில் தானே வளர்ந்த ஆம்பல் மலர்கள் வண்டுகளின் பசிபோக்கும் வளமான நாட்டை உடைய தலைவனே! இப்போது நீ என்னைத் தழுவினால் என் மார்பிலுள்ள தீம்பால் நின் அழகினைச் சிதைத்து விடும்.

**கரும்பு நடுபாத்தியில் களித்த ஆம்பல்**

**சுரும்பு பசிகளையும் பெரும்புனல் ஊர!**

**புதல்வனை ஈன்ற எம் மேனி**

**முயங்கன்மோ தெய்ய நின் மார்பு சிதைப்பதுவே**

**(தஞ்.65)**

### 6. பாணன் முதனப் பாங்கன் ஈறாகப் பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழித் தலைமகள் பாணனை மறுத்தல்

இதில் அதலைமகள் பாணனை மறுத்தல் ஆ.மறுக்கப்பட்ட பாணன் கூறல் இ. தலைமகள் விறலியை வாயின் மறுத்தல் என முப்பிரிவுகள் அடங்கும்.

#### அ. தலைமகள் பாணனை மறுத்தல்

தலைவியின் மகப்பேற்றுக்குப்பின் தலைவன் காணச் சென்றபோது தலைவி ஊடியதால் பாணனை வாயிலாக அனுப்ப அவனை இழிவாகப் பேசி வாயில் மறுத்தல்.

இழிவான பாணனே! கொல்லன் தெருவில் ஊசி விற்க வந்துள்ளாய்! தலைவன் நேர்மையானவன் என்றும் என்மீது அன்புள்ளவன் என்றும் பொய் பேசவே நீ இங்கு வந்துள்ளாய் (திருக்கோவை. 386)

#### ஆ. வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல்

வாயில் மறுத்த தலைவியிடம் பாணன் கூறுதல்.

அன்னையே! புருவம் வளைய, உதடுகள் துடிக்க என்மேல் எறிதற்குக் கற்களை எடுத்தல் வேண்டா் உன் கோபத்தைப் போக்கிக்கொள் நீ தலைவனை வாயில் மறுப்பது அழகன்று. உன்னைப் பல்லாண்டு வாழுமாறு வாழ்த்தி உன்னை சுற்றி வந்து வணங்குகிறேன். (திருக்கோவை: 387)

#### இ. தலைமகள் விறலியை வாயின் மறுத்தல்

பாடினியாகிய விறலியே! நம்தலைவன் பரத்தையர் சேரிக்குச் அங்குப் பாடிய பாடல்கள் அஞ்சனத்தை மறந்து உறக்கத்தை நீத்தன. நீ என் செவியைத்தூர்த்தன. இனி, நீ பரத்தையர் இருப்பிடமே சென்று பாடு (அம்பிகா. 487)

### 7. விருந்தொடு வந்துழித் தலைமகள் பொறுத்தல் கண்டு தலைவன் மகிழ்தல்

எம் தலைவி ஊடல் கொண்டிருக்கின்றாள். சமையல் செய்கிறாள் இப்போது விருந்தாக வருபவர் வருக! அங்ஙனம் வந்தால் ஊடல் கொண்டுள்ள தலைவி, ஈடல் தணிந்து புன்னகை செய்யும் முகத்தைக் காணலாம்.

**அட்டிலோளே அம்மா அரிவை**

**எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பு ஆன்று**

**சிறு முள் எயிறு தோன்ற**

**முறுவல் கொண்ட முகம் காண்கம்மே (நற்.120)**

**8. தலைமகள் விருந்து கண்டு ஒளித்த ஊடல் பள்ளியிடத்து வெளிப்படத் தலைமகன் சீறேல் என்றவள் சீறடி தொழல்**

விருந்து சென்றபின் தலைவி ஊடலை வெளிப்படுத்தத் தலைவன் அவள் சிற்றடியில் வீழ்ந்து தொழுதல்.

தலைவியின் ஊடல் தொடரட்டும் அதனால் இரவு முழுவதும் அவளிடம் இரந்து நிற்கும் இன்பம் நீடிக்கும்.

**ஊடுக மன்னோ ஒளியிழை, யாம் இரப்ப**

**நீடுக மன்னோ இரா. (திருக்.1329)**

**9. இ்.து எங்கையர் காணின் நன்றன்று எனல்**

நீயிர் இவ்வாறு என் சிற்றடியைத் தொழுவதை என் தங்கையர் கண்டால் பரத்தையர் உனக்கு நன்றன்று என்று கூறுதல்.

என்னை நினையாமல் பரத்தையிடம் சென்ற நீ இப்போது வந்து வந்து என்னை வணங்குவதை நின் கண் போன்ற என் தங்கையர் காண்பது நன்றன்று (நகைப்புக்கு உரியதாகும்) என்பாதம் இறைஞ்சுதல் நும் கண்போலும் எங்கையர் காணின் நன்றோ? (தஞ். கோ.398)

**10. ஆங்கவர் யாரையும் அறியேன் என்றல்**

உன் தங்கையர் என்று கூறும் எந்தப் பரத்தையரையும் யான் அறிந்திலேன் எனத் தலைவன் கூறுதல்.

நான் பரத்தையிடம் சென்று வந்துள்ளேன் என ஐயுற்றுச்சினம், கொள்ளாதே! தீதிலன் என்பதைத் தெய்வ சாட்சியாகக் கூறுகின்றேன். செய்யாத சொல்லிச் சினவுவது ஈங்கு எவன்... நீது இன்மை தெய்வத்தான் - கண்டீ -தெளிக்கு (கலித்.91)

**11. தலைமகள் காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்**

நீ மணந்து கொண்ட காமக்கிழத்தியை நான் தெருவில் கண்டேன் எனத் தலைவி கூறுதல்.

நீ விரும்பி மணந்து கொண்ட காமக் கிழத்தி தெருவில் விளையாடிய நம் மகனை அணைத்து, என் உயிர் என்று உவகை கொண்டாள் யானும் குற்றமற்ற அவனைக் கண்டு, நீயும் அவனுக்குத் தாய்தான் என்றேன்.

**மாசுஇல் குறுமகள்! எவன் பேதுற்றனை?**

**நீயும் தாயை இவற்குஎன யான் தன்**

**கரைய வந்து விரைவனென்..... (அகம்.16)**

**12. தலைமகளைப் பாங்கி புலவி தணித்தல்**

தலைவியின் ஊடல் நீடித்திருப்பதைக் கண்ட பாங்கி அதனைத் தணிக்க முயறல்.

ஊடல் என்பது உணவில் உப்பைப் போன்றது அது குறைந்தாலும் கூடினாலும் உணவுக்குச் சுவை கொடுப்பதில்லை என்று கூறிப்பாங்கி ஊடலைத் தணிவித்தல்.

**உப்பு அமைந்தற்றால் புலவி அதுசிறிது**

**மிக்கற்றால் நீள விடல் (அகம்.1302)**

**13. தலைமகள் புலவி தணியாளாகத் தலைமகன் ஊடல்**

பாங்கி எவ்வளவோ சொல்லியும் தலைவி ஊடலைத் தவிர்க்காததால் தலைவன் ஊடுதல். என் நெஞ்சமே! எவ்வி என்னும் வள்ளல் இறந்தபோது பாணர்களின் தலைகள் பொற்பூ அணிதலை மறந்தன. அது போலத் தலைவியின் ஊடலால் நீயும்

வருந்துக! முல்லை மணம் கமழும் கூந்தலை உடைய தலைவி எந்நிலையில் நமக்கு உறவுடையவள் என்பது தெரியவில்லை.

**எவ்வி இழந்த வறுமையர் பாணர்**

**பூஇல் வறுந்தலை போலப் புல்லென்று**

**இனைமதி வாழியர் நெஞ்சே! மனைமரத்து**

**எல்லுறும் மௌவல் நாறும்.**

**பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே? (குறுந் 19)**

**14. பாங்கி அல்லலை யெ என்று இணர்த்தார் மார்பனை இகழ்தல்**

நீ அன்பிலாதவன் கொடியன்" என்று பாங்கி தலைவனைக் கடிந்து பேசுதல்,

தலைவனே! களவு ஒழுக்கத்தின்போது தலைவி பச்சை வேப்பங்காயைக் கொடுத்தாலும் இன்சுவைக் கட்டி என்றாய்! கற்புக் கால இல்வாழ்க்கையில் பாரியின் பறம்பு மலைச் சுனை நீரைக் கொடுத்தாலும் அது தைத்திங்களிலேயே சூடா உள்ளதும் என்றும் உவர்க்கிறது என்றும் கூறுகின்றாய்! உன் அன்பின் தன்மை இதுவோ?

**வேம்பின் பைங்காய் என்தோழி தரினே**

**தேம்பூங்கட்டி என்றனிர் இனியே**

**பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்**

**தைஇத் திங்கள் தண்ணிய தரினும்**

**வெய்ய உவர்க்கும் என்றனிர்**

**ஐய! அற்றால் அன்பின் பாலே (குறுந்.196)**

**உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள்-4 -2 (இதுவும் அது)**

மேலே கூறப்பட்ட பதினான்கு உணர்த்த உணரா ஊடற் கிளவி விரிகளோடு பின்வரும் நான்கும் சிறப்பின்மை கருதித் தனி நூற்பாவில் விளக்கப்பட்டுள்ளன.

207. **ஆயிழை மைந்தனும் ஆற்றா மையுமே**

**வாயிலாக வரவு எதிர் கோடலும்**

**மணந்தவன் போயபின் வந்த பாங்கியோடு**

**இணங்கிய மைந்தனை இனிதின் புகழ்தலும்**

**தலைவனைப் புகழ்தலும் சிலைநுதற் பாங்கி**

**மனைவியைப் புகழ்தலும் இனையவை பிறவும்**

**அனைவகை மொழிந்த அவன்பாற் படுமே.**

சிறப்பில்லாத மேற்குறிப்பிட்ட நான்கும் உணர்த்த உணரா ஊடற் குரிய விரிகள் ஆகும்

**1. மகனும் ஆற்றாமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகன் எதிர்க் கோடல்**

தன் அழகிய புதல்வனையும் ஆற்றாமையையும் எண்ணித் தலைவி தலைவனை ஏற்றுக் கொள்ளுதல்.

ஒளி பொருந்தியவளே! குளிர் காலமாக இருந்தாலும் தென்றல் உடலைத் தீண்டுவது இன்பத்தைக் கொடுக்கும். அதைப் போலத் தலைவனுடன் ஊடல் ஒருபக்கம் இருந்தாலும் அவன் மேனியைத் தழுவுவது பேரின்பமாகும்.

**குளிரும் பருவத்தே யாயினும் தென்றல்**

**வளிஎறியின் மெய்யிற்கு இனிதாம் ஒளியிழாய்!**

**ஊடி இருப்பினும் ஊரன் நறுமேனி**

**கூடல் இனிதாம் எனக்கு (ஐந்-ஐம்.30)**

**2. தலைமகனைப் புணர்ந்து நீங்கியபின் வந்து பாங்கிபொடு தன்மகனைப் புகழ்தல்**

தன் ஊடல் தீர்ந்து தலைவனோடு இணையக்காரணம் தன் மகனே எனப் பாங்கியிடம் புகழ்தல்

ஒருத்தியை மணம் முடிக்கத் சென்ற தலைவனைத் தடுத்த தன் புதல்வனை எண்ணித் தலைவி கூறுவது.

பகைவரும் மழலைப் பருவத்தினரை விரும்புவர். அப்படிப்பட்ட புதல்வரைப் பெற்றோரே இம்மையிலும் மறுமையலும் சிறப்புடன் வாழ்வர் என்னும் பழமொழியின் உண்மைத் தன்மையை என் புதல்வனால் அறித்தேன் பாங்கி!

**"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி**

**மறுமை உலகமும் மறுஇன்று எய்துப**

**செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்**

**சிறுவர்ப் பயந்த செம்மலோர்" எனப்**

**பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்**

**வாயே ஆகுதல் வாய்த்தனம் - தோழி! (அகம்.66)**

**3. தலைவி தலைவனைப் புகழ்தல்**

பரத்தையின் பிரிந்து திரும்பி வந்து தன்னோடு கூடிய தலைவனைத் தலைவி புகழ்தல்.

கள்ளக்குணம் நிறைந்தவனே! யான் வருந்தும்படி பல துன்பங்களை நீ எனக்குக் கொடுத்தாலும் கள்ளுண்டு களித்தவர்கள் மேன் மேலும் அதனை விரும்புவது போல உன் மார்பும் எனக்கு மகிழ்வைத் தரும்

**இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்**

**கள்அற்றே கள்வ நின் மார்பு (1288 )**

**4. பாங்கி மனைவியைப் புகழ்தல்**

தலைவியின் பொறுமையைப் பாங்கி புகழ்ந்து கூறுதல், மாமை திறம் உடைய தலைவி எனக்குத் தாய் ஆனவள். தலைவன் செய்யும் தவறுகளை எல்லாம் பிறரிடம் கூற நாணப்பட்டு மறைத்து உரையாடும் தாகரிகம் உடையவள்.

**யாய் ஆகியளே மாஅ யோளே**

**தண்ணம் துறைவன் கொடுமை**

**நம்முன் நாணிக் கரப்பாடும்மே (குறுந்.9)**

பரத்தையின் பிரிவின் விரி இவை எனல்

**208. மூன்று சூத்திரத்து மொழிந்தவை எல்லாம்**

**ஆன்ற பரத்தையின் அகற்சியின் விரியே.**

மேலே கூறப்பட்ட மூன்று நூற்பாக்களிலும் பரத்தையின் பிரிவின் விரி இருபத்தொன்பது விளக்கப்பட்டுள்ளன.

| பரத்தையின் பிரிவு | |
|---|---|
| வகை | விரி |
| 1. உணர்த்த உணரும் ஊடலுக்குரிய கிளவிகள் | 11 (205) |
| 2. உணர்த்த உணரா ஊடலுக்குரிய கிளவிகள்--1 | 14 (206) |
| 3. உணர்த்த உணரா ஊடலுக்குரிய கிளவிகள்-2 | 4 (207) |
| | 29 |

**3, 4, 5, 6, 7 பிரிவுகள்**

முன்னுள்ள நூற்பாக்களில் 1.இல்வாழ்க்கை (202) 2. பரத்தையின் பிரிவு (205, 206,207) ஆகியவற்றின் விரி விளக்கப்பட்டுள்ளன. பின்வரும் நூற்பாவில் 3. ஓதற்பிரிவு, 4.காவற் பிரிவு, 5. தூதின் பிரிவு, 6.துணைவயின் பிரிவு, 7. பொருள் வயின் பிரிவு என்பவை விளக்கப்படுகின்றன.

**இவ்வைந்து பிரிவும் ஒன்பது வகைகளை உடையன**

**209.** **பிரிவு அறிவுறுத்தல் பிரிவு உடன் படாமை**

**பிரிவு உடன்படுத்தல் பிரிவு உடன் படுதல்**

**பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை**

**வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சி என்று**

**ஒருமையில் கூறிய ஒன்பது வகைய**

**கல்வி முதலா எல்லாப் பிரிவும்.**

**1. பிரிவு அறிவுறுத்தல்:** தலைவன் பிரிந்து செல்லப்போவதைப் பாக்கி தலைவிக்குக் கூறுதல்.

**2. பிரிவு உடன்படாமை**: தலைவன் பிரிந்து செல்லக் கூடாது என்று தலைவி மறுத்தல்.

**3. பிரிவு உடன்படுத்தல்:** தலைவன் பிரிந்து செல்வதற்குத் தலைவியைப் பாங்கி உடன்பட வைத்தல்.

**4. பிரிவு உடன்படுதல்:** தலைவன் பிரிந்து செல்லத் தலைவி உடன்படுதல்

**5. பிரிந்துழிக் கலங்கள்:** தலைவன் பிரிய உடன்பட்டுப் பின்னர்த்தலைவியை எண்ணி வருந்துதல்.

**6. வன்புறை:** தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியைப் பாங்கி இடித்துக் கூறுதல்,

**7. வன்பொறை :** தலைவன் பிரிவைத் தலைவி பொறுத்துக் கொள்ளுதல்.

**8. வருவழிக் கலங்கல்:** தலைவன் திரும்பி வரும்போது வழியில் அடையும் இன்னல்களை எண்ணி வருந்துதல்.

**9. வந்துழி மகிழ்ச்சி:** தலைவன் நலமுடன் திரும்பி வந்ததும் மகிழ்ச்சி அடைதல்,

**3. ஓதற்பிரிவு**

ஓதற்குப் பிரிவும் என்பது கற்பதற்குப் பிரியும் என்பதொன்று பண்டே குரவர்களால் கற்பிக்கப்பட்டுத் தலைவன் அறம், பொருள், இன்பம், வீடுபேறு பற்றிய

நூல்களைக் கற்றவன். இனிவேற்று நாடுகளிலும் அவை வல்லார் உளர் எனின் காண்பல் என்னும் வல்லார்க்கு முன்னிலையில் தன் அறிவைக்காட்டி மேம்படுத்துவல் என்றும் கூறி ஒதற்குப் பிரிவான் (இறை.கள 35,41)

**1. கல்விக்குப் பிரிவு தலைமகனால் உணர்ந்த பாங்கி தலைமகட்கு உணர்த்தல்**

கல்வி என்னும் கடலில் நீந்திக் கல்விமானாக விளங்கும் நம் தலைவர் சான்றோர் சபையில் வெளிப்படுத்தக் கொடுமையான பாலை நிலத்தைக் கடக்க முற்பட்டுள்ளார்.

**கல்வித் தடங்கடல் நீந்திய காதலர் கற்றவர்முன்**

**சொல்வித்த என்றழல் ஆர் சுரம் போகத் துணிந்தனரே**

**(தஞ்-கோ.408)**

**2. தலைமகன் கல்விக்குப் பிரிந்துழித் தலைமகள் கார்ப்பருவம் கண்டு புலம்பல்**

கார்ப்பருவம் வந்து விட்டது. இப்பருவத்தில் வருவதாகக் கூறிச்சென்ற தலைவன் வரவில்லை. கண்கள் நீரைச் சொரிகின்றன. அவரது தேர் இன்னும் வரத் தொடங்கவில்லை.

**கார் தொடங்கின்றால் காலை அதனால்**

**நீர் தொடங்கினவால் நெடுங்கண் அவர்**

**தேர் தொடங்கின்றால் நம் வயினானே (ஐங்.453)**

**3. ஓதற் பிரிந்துழிக் கார்ப் பருவம்கண்டு வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்**

தலைவியே! கல்வியின் பொருட்டுப் பிரிந்த நம்தலைவர் விரைவில் திரும்பி விடுவார். திரண்டு வரும் மேகமே சான்று: ஆரணங்கனையாய்! புயல் ஏது அறிந்தருளே (தஞ் .கோ.410)

**4. காவற் பிரிவு**

கற்புக் காலத்துத் தலைவன் மேற்கொள்ளுதற்குரிய அறுவகைப் பிரிவுகளுள் ஒன்றாகிய காவற்பிரிவு, அறப்புறங்காவல் எனவும் நாடு காவல் எனவும் இருவகைத்து.

**1. காவற்பிரிவு தலைமகனால் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தல்**

தலைவியே! இந்தப் பூமியைக் காக்கும் பொருட்டு நம்தலைவர் நம்மைப் பிரிய ஆயத்தமாகி விட்டார். மண் காவல் கொண்ட மனத்தினராயினர் (தஞ் .கோ.411)

**2. தலைமகன் காவற்குப் பிரிந்துழித் தலைமகள் கூதிர்ப்பருவம் கண்டு வருந்தியது.**

காவலின் பொருட்டாகப் பிரிந்து சென்ற தலைவன், அவன் கூறிச்சென்ற கூதிர்ப் பருவம் வந்துவிட்டது. அவன் வராமையால் தலைவி வருந்துகிறாள்.

**பெய் பனிநலிய உய்தல் செல்லாது**

**குருகினம் நரலும் பிரிவு அருங்காலைத்**

**துறந்து அமைகல்லார் காதலர்**

**மறந்து அமைகல்லாது என்மடம்கொழு நெஞ்சே.(ஐங்.457)**

பெய்யும் பனியால் குருங்கினங்கள் வாட்டமுற்று ஒலிக்கின்றன. குறித்த காலத்தில் காதலர் வாராமையால் உயிருடன் இருத்தல் ஆற்றாத செயலே ஆகும்.

**3. காவற்குப் பிரிந்தூழிக் கூதிர்ப் பருவம் கண்டு வருந்திய தலைமகளைப் பாங்கி ஆற்றுவித்தல்**

பெருமைக்குரிய தலைவியே! காவல் காரணமாகப் பிரிந்த நம் தலைவர் திரும்பி வரும் அறிகுறி தெரிகின்றது. கொன்றை மரங்கள் பூத்துக் குலுங்கியுள்ளன. செந்நிறப் புற்றில் ஈசல்கள் வெளிப்படுகின்றன் குளிரால் விலங்குகள் தீனியை விரும்பவில்லை. கார்ப்பருவம் வந்துவிட்டது.

**குறும்பல் கோதை கொன்றை மலர**

**நெடும்செம் புற்றம் ஈயல் பகர**

மாபசிமறுப்பக் கார் தொடங்கின்றே

பேர்இயல் அரிவை நின் உள்ளிப்

பேர்வெங்குரிசில் வந்தமாறே (ஐங் 497)

**5. தூதிற் பிரிவு**

தூதிற் பிரிவு கற்புக் காலத்துத் தலைவிக்கு நிகழும் பிரிவுகளுள் ஒன்று. இதற்குக் கால வரையறை ஓர் ஆண்டிற்கு உட்பட்டது.

**1. தூதிற்குப் பிரிவு தலைமகனால் உணர்ந்த பாங்கி தலைமகட்கு உணர்த்தல்**

முரண்பட்ட இருவேந்தர் போர்புரிய ஆயத்தம் ஆகின்றனர். அப்போரைத் தவிர்க்க நம் தலைவர் தூதுவராகச் செல்ல இருக்கின்றார். தூதாக அன்பர் செலத் துணிந்தார். (தஞ்.கோ.414)

**2. தலைமகன் தூதிற்குப் பிரிந்துழித் தலைமகள் முன்பனிப் பருவம் கண்டு வகுந்துதல்**

துதிற் பிரிந்த தலைவன் கூறிச் சென்ற முன்பனிப் பருவமும் வந்து உடலை வருத்துகின்றது. தலைவன் விரைந்து வந்து காக்கவில்லை: நலிகின்ற முன்பனி நாளில் நண்ணார் முலை நண்ணினரே (தஞ்.கோ.415)

**3. தூதிற்குப் பிரிந்துழி முன்பனிப் பருவம்கண்டு வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்**

போரின் பொருட்டுத் தூதாகச் சென்றவர் விரைந்து வந்து உலகு முழுவதும் பொழியும் முன்பனிக் காலத்தில் வந்து உன் காம நோயைத் தணிப்பார் நின் பிணி விடுப்பான் வந்து தோன்றினர். (தஞ்.கோ.416)

**6. துணைவயின் பிரிவு**

கற்புக் காலத்தில் மன்னர்க்கு உதவுவதற்காகத் தலைவன் பிரிந்து செல்வது துணைவயின் பிரிவாகும்.

**1. வேந்தர்க்கு உற்றுழி உதவியின்பிரிவு தலைமகனால் உணர்ந்த பாங்கி தலைமகட்கு உணர்த்தல்**

தலைவியே! நட்பு மன்னர்க்கு உதவும் பொருட்டுத் தலைவன் பிரியத் துணிந்துள்ளார்: நண்பான மன்னர்க்கு இடர் தணிப்பான்.... நம் மன்னர் படர்தல் உற்றார். (தஞ் கோ.417)

**2. தலைமகன் வேந்தர்க்கு உற்றுழி உதவியிற் பிரிந்துழித் தலைமகள் பின்பனிப் பருவங்கண்டு வருந்துதல்**

வேந்தனும் போரை நிறுத்தவில்லை. பிரிந்து சென்ற தலைவனும் தூது அனுப்பவில்லை. வாழையின் அடிப்பகுதியும் அசையுமாறு வாடையும் கொடிதாக வீசுகின்றது. இவ்வாடையில் யான் என்ன நிலையை அடைவேனோ?

**பெருஞ்சின வேந்தனும் பாசறை முனியான்**

**இருங் கலி வெற்பன் தூதும் தோன்றா்**

**ததை இலை வாழை முழுமுதல் அசைய**

**இன்னா வாடையும் அலைக்கும்**

**என் ஆகுவென் கொல், அளியென் யானே? (ஐங்.460)**

**3. வேந்தர்க்கு உற்றுழி உதவியிற் பிரிந்துழிப் பின்பனிப் பருவம் கண்டு வருந்திய தலைமகளைப் பாங்கி ஆற்றுவித்தல்**

தலைவியே! விரைவில் நம் தலைவன் வந்து நின்னைத் தழுவிக் கொள்வார். மன்னன் போரை நிறுத்தியுள்ளதால் நீ இன்பம் அடைவாய்!

**மயங்குமலர் அகலம் நீஇனிது முயங்க**

**வருவர் வாழி தோழி!**

**செருவெங் குரிசில் தணிந்தனன் பகையே (ஐங்.495)**

**7. பொருள் வயின் பிரிவு**

முன்னோர் பொருளை ஈட்டி வைத்திருந்தாலும் இல்லறம் நடத்தப் பொருள் தேடத் தலைவியைப் பிரிந்து தலைவன் செல்வது பொருள்வயின் பிரிவு ஆகும்.

**1. பொருள் வயின் பிரிவு தலைமகனால் உணர்ந்த பாங்கி தலை மகட்கு உணர்த்தல்**

பிறையனைய நெற்றியை உடைய தலைவயே! பொருள் தேடப் போவதன் பொருட்டு நம்மைப் பிரியப் போவதைத் தலைவன் இன்று பேசினார்: நாம் தனி இருக்க நெஞ்சைப் பொருள்வயின் வைத்து... பிரிவான் இன்று பேசினரே. (தஞ் கோ.420)

**2. தலைமகன் பொருள்வயின் பிரிந்துழித் தலைமகள் இளவேனிற் பருவம் கண்டு வருந்துதல்**

இளவேனிற் பருவத்தில் வருவதாகக் கூறிச்சென்ற தலைவன் வரவில்லை. குயிற்பெடை தன் இனிய குரலால் கூவுகின்றது. இப்பருவத்திற்கு அறிகுறியாக நுண்மையும் கருமையுமாக மணல் வரிவரியாகத் தோன்றுகின்றது. (அவர் வரவில்லை யான் என் செய்வேன்?)

**அவரோ வாரார் தான் வந்தன்றே**
**குயிற் பெடை இன்குரல் அகவ,**
**அயிர்க்கேழ் நுண் அறல் நுடங்கும் பொழுதே! (ஐங்.341)**

**3. பொருள் வயின் பிரிந்துழி இளவேனிற் பருவம் கண்டு வருந்திய தலைமகளைப் பாங்கி ஆற்றுவித்தல்**

மன்மதனின் தேராகிய தென்றலில் வசந்தம் வந்து விட்டது. தலைவியைப் பிரிந்து சென்றீர் விரைந்து வந்து சேர்மின்“ குயில் இசையின் பொருள் அறிந்து பிரிந்தவர் மீண்டு வந்தனர்: குயில் மாருதமாம் தேர்த்தனி வீரன் நாளும் வந்தது. சேர்மின் (தஞ்.கோ.422)

மேற்குறிப்பிட்டவாறு பிரிவு வகைகள். 1. தலைவன் பிரியக் சுருதுதல் 2. தலைவி தலைவனைப் பிரிந்து வருந்துதல் 3. வருந்தும் தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல் என்னும் நிலையில் அமையும்.

**சில பிரிவுகளின் பொதுக் கிளவிகள்**

மேற்குறிக்கப்பட்ட பிரிவுகளுள் சில பிரிவுகளில் காலம் நீட்டித்தல், தலைவன் வினைமுடித்ததைப் பாங்கி சொல்லுதல், தலைவியோடு இருந்த தலைமகன் கார்ப்பருவங் கண்டு உவந்து சொல்லுதல் எனச் சில கூடுதல் செய்தியை பெற்றுள்ளன.

**1. தூதும் உதவியும் காரணமாகிய பிரிவின்கண் அவ்வினை ஓர் ஆண்டின் முடியாது நீட்டித்து முடிந்துழித் தலைமகள் உருவு வெளிப்பாடு கண்டு தலைவன் சொல்லுதல்**

என்னருமைக் காதலியே! போர்த் தொழில் முடிந்து திரும்பிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் முல்லைப்பூவின் மணங்கமழும் நின் கூந்தல் இன்னும் பல மலர் மணம்பெற நாம் இன்புறுவோம்.

**முல்லை நாறும் கூந்தல் கமழ் கொள**

**நல்ல காண்குவம், மாஅயோயே!**

**பாசறை அருந்தொழில் உதவி, நம்**

**காதல் நன்னாட்டுப் போதரும் பொழுதே (ஐங்.446)**

**2. பாசறை முற்றி மீண்டு ஊர்வயின் வந்த தலைமகன் தேர்ப் பாகனுக்குச் சொல்லுதல்**

பாசறை நீங்கியவுடன் நீ தேரைச் செலுத்தக் கோலை எடுத்த

முறையும் யான் தேரில் ஏறி அமர்ந்த முறையும் தேர் ஊர் வந்து சேர்ந்த

வேகமும் நினைக்கத் தக்கன பாகனே! (தஞ்.கோ.424)

**3. தலைமகளோடு இருந்த தலைமகன் கார்ப்பருவம் கண்டு உவந்து சொல்லுதல்**

மேகமே! யான் தலைவியைப் பிரிந்திருக்கும் வரை பொழியவில்லை. நீ வாழ்வாயாக! இனி அரச முரசம்போல இடித்து முழக்கம் செய்து பெய்க! ஏனெனில் செய்வினை முடித்து வந்து மணம் வீசும் தலைவியின் கூந்தலாகிய மெல்லிய பாயில் கிடக்கின்றோம். ஆதலால் நீ பொழிக!

**கடிப்புஇகு முரசின் முழங்கி இடித்து இடித்துப்**

**பெய்கஇனி வாழியோ பெருவான்! யாமே**

**செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு**

**இவளின் மேவினம் ஆகி, குவளைக்**

**குறுந்தாள் நாள்மலர் நாளும்**

**நறுமென் கூந்தல் மெல்ணை யேமே (ஐங்270)**

இவ்வாறு கற்பியலில் மணமுடித்த பிறகு தலைவனும் தலைவியும் கூடி வாழ்தல், பல வகையில் பிரிந்து வாழ்தல் எனப் பல செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

**வினாக்கள்**

1. கற்பியல் குறித்து வரும் பொதுக் கருத்துக்களை எழுதுக.

2. கற்பின் இலக்கணம் யாது?

3. கற்பிற்குரிய கிளவித் தொகையை விளக்குக.

4. உணர்தத உணரும் ஊடற்குரிய கிளவிகள் யாவை?

5. பிரிவின் ஒன்பது வகைகளை விளக்குக.

6. இல்வாழ்க்கையின் கிளவித் தொகையை விளக்குக.

7. ஓதற் பிரிவு, காவற் பிரிவு, தூதிற் பிரிவு - விளக்குக.

**சு.பேச்சியம்மாள்,**

தமிழியல் துறை,

உதவிப் பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

தொலைபேசி எண்: 9788749246, 9944182841

Email id: spetchi29@gmail.com